

அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில்

# திராவிட மாடல் அரசு

மு.க.ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை 600 009.

07–05–2022

## வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு அரசு கடந்த ஓராண்டு காலத்தில் எப்படிச் செயல்பட்டது என்பதைக் காட்டும் கண்ணாடியாக 'தமிழரசு' இதழின் சார்பில் சிறப்பிதழ் தொகுக்கப்பட்டு வெளியிடுவதை அறிந்து மகிழ்கிறேன்.

எத்தகைய நோக்கம் கொண்டதாக 'தமிழரசு' இதழ் வெளியாக வேண்டும் என்று நினைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த இதழைத் தொடங்கினார்களோ, அத்தகைய நோக்கம் முழுமையாக நிறைவேறும் வகையில் இந்த சிறப்பிதழ் உருவாகியிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2021 மே 7–ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழக அரசு – எனது தலைமையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றது. சட்டமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கு முன்னதாக இயக்கத்தின் சார்பில் தேர்தல் அறிக்கை ஒன்றை வெளியிட்டோம். அந்தத் தேர்தல் அறிக்கையை மொத்தமாக நிறைவேற்றி முடிப்பதற்கான கால அவகாசம் என்பது இன்னும் நான்கு ஆண்டுகள் இருந்தாலும் – இந்த ஓராண்டு காலத்தில் – அந்தத் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதில் 60 விழுக்காடு வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். நிதி நெருக்கடி இல்லை என்றால் இன்னும் கூடுதலான வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டி இருக்க முடியும்.

தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டவை மட்டுமல்ல – அவற்றில் சொல்லப்படாமல், ஆட்சிக்கு வந்தபிறகு கருவான திட்டங்கள் என்பவையும் ஏராளமாக உண்டு. அவற்றையும் நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம்.

இந்த ஓராண்டு காலம் என்பது எனக்கு மனநிறைவை அளித்துள்ளது. இன்னும் சொன்னால் அதிகமான மனநிறைவை அளித்துள்ளது. செல்ல வேண்டிய தூரம் அதிகம். அதே நேரத்தில் சென்று கொண்டிருக்கும் வேகமும் அதிகம். இந்த சிறப்பிதழின் கட்டுரையாளர்கள் அதனைத்தான் சொல்கிறார்கள்.

ஓர் இலக்கோடு இந்த அரசு செல்கிறது, அந்த இலக்கை இந்த அரசு நிச்சயம் அடையும் என்ற நம்பிக்கையை இக்கட்டுரையாளர்கள் தங்கள் சொற்களால் உணர்த்தி உள்ளார்கள்.

இந்த அரசின் அனைத்து இலக்குகளையும் உருக்கி ஒற்றைச் சொல்லாகச் சொன்னால், அதுதான் 'திராவிட மாடல்' என்பது ஆகும்.

அத்தகைய 'திராவிட மாடல்' குறித்து நான் பல்வேறு நிகழ்வுகளில் கூறிய விளக்கங்கள் இந்தச் சிறப்பிதழிலில் மொத்தமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பல்துறையைச் சார்ந்த சிறந்த ஆளுமைகள் பலரும், 'இந்த ஆட்சியை நாங்கள் எப்படிப் பார்க்கிறோம்?' என்று சொல்லிய கருத்துகள் எனக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன. ''எனது அரசு அல்ல இது, நமது அரசு'' என்று நான் சொல்லி வருகிறேன். அதனை மெய்ப்பிக்கும் வகையில் ஆளுமைகள் பலரும், ''எமது அரசு'' என்று சொல்வதைவிடப் பெரிய பாராட்டு இருக்க முடியாது.

அனைத்துத் துறைகளும் எந்த வகையில் வளர்ந்துள்ளன என்பது குறித்த ஆழமான கட்டுரைகள், இந்தச் சிறப்பிதழின் கனத்தைக் கூட்டியுள்ளன. அரசின் செயல்பாடு என்பதும் வலிமையானதுதான் என்பதை இக்கட்டுரைகள் சொல்கின்றன.

மொத்தத்தில் நாங்கள் சரியான திசைநோக்கிச் செல்கிறோம் என்பதை ஒரு ஸ்கேன் ரிப்போர்ட் போல இந்தப் படைப்பாளிகள் வெளிப்படுத்தி உள்ளார்கள்.

இதில் பங்கெடுத்துக் கொண்ட அரசியல் தலைவர்கள் – ஆளுமைகள் – கட்டுரையாளர்கள் – அறிஞர்கள் – எழுத்தாளர்கள் – கவிஞர்கள் ஆகிய அனைவர்க்கும் நன்றி.

தமிழ்நாடு அரசுக்குச் சிறப்புச் செய்துள்ள 'தமிழரசு' இதழுக்கு நன்றி!

அன்புடன்,



**(மு.க.ஸ்டாலின்)**

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள்...03/05/2022

# அணிந்துரை

ஈடு இணையில்லா தலைவர், ஓய்வறியா உழைப்பாளி, நான்கு திசைகள் அதிர திட்டங்கள் பல தீட்டியவர், சீரிய திட்டங்கள் செயல்படுத்தி சரித்திர ஏடுகளில் இடம் பெற்றவர், அமைதியாய் அடக்கமாய் வெற்றிகள் பல குவித்த திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிகரற்ற ஆற்றலின்கீழ், பதவியேற்று ஓராண்டு நிறைவில் தமிழ்நாடு அரசு புயல் வேகத்தில் திட்டங்களை செயல்படுத்தி சாதனைகள் படைத்திருப்பதை செய்தித்துறையின் வெளியீடு, தமிழரசு இதழ் வழியே அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு என்ற மலர்த் தொகுப்பு வழங்கியுள்ளது.

தன்னலம் மறந்து, துயில்கூட தவிர்த்து மக்களின் நலனையே உயிர் நாடியாக சிந்திக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மக்கள் நலத்திட்டங்கள் தமிழகமெங்கும் இடையூறின்றி செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க உலகத்தை வாழ வைப்பது மழையாக அமைந்திருப்பதுபோல் தமிழகத்தை, மழைபோல் மக்கள் நலத்திட்டங்களால் பொழிய வைத்து தமிழக மக்களின் மனதை குளிர வைத்து ஒளிவீசும் தமிழகமாக திகழ வைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஓராண்டு சாதனைகள் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறது.

இச்சரித்திரம் படைக்கும் சாதனை மலர் கனியாகக் கனிந்து வரும், அதனை அனைவரும் சுவைத்து பயன்பெற வேண்டுகிறேன்.

3/5/2022
மு.பெ. சாமிநாதன்
செய்தித்துறை அமைச்சர்.

**மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,**
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

## முகப்புரை

### ஓராண்டின் உயர்வு!

ஆட்சிப் பொறுப்பேற்றதும் தீநுண்மி நோய் தொற்றின் கொடுமைப் பிடியிலிருந்து தமிழ்நாட்டை மீட்டு, அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம், எல்லோருக்கும் எல்லாம் என்ற உயரிய நோக்கில் தமிழ்நாட்டை வளமாக்கிச் செல்லும் மிகப்பெரிய பொறுப்பினையேற்று, இந்த ஓராண்டில் அனைத்து மக்களின் முழுமையான பாராட்டுதலைப் பெற்று தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாகப் பொலிவுறச் செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பரிய திட்டங்கள் மற்றும் சாதனைகளை மலராகத் தொகுத்து நூல் வடிவில் வழங்கியுள்ளோம்.

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் கூற்றின்படி, அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர், பெருமைக்குரியவர் ஆவர். இத்தகைய பெருமையுடைய நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும், ஓய்வரியாது உழைத்து மக்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வெளியிடப்பெறும் இம்மலரை மகிழ்வோடு ஏற்றுப் பயன் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

நாளுக்கு நாள் சிறப்பும் - செம்மையும் ஓங்கும் தமிழகத்தை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

அன்புடன்

4/5/22

(மகேசன் காசிராஜன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நிகரி : 044-25672021




# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்... | 8–9 |
| 2. | இது திராவிட மாடல் அரசு | 10–11 |
| 3. | எல்லார்க்கும் எல்லாம்... | 12–13 |
| 4. | தத்துவத்தின் அடையாளமான ஆட்சி | 14–15 |
| 5. | திராவிட மாடல் அரசின் லட்சியங்கள் | 16–17 |
| 6. | கொள்கையும் சேவையும் சார்ந்த அரசு | 18–19 |
| 7. | மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி | 20–21 |
| 8. | பேராளுமைகளைப் போற்றிய அரசு | 22–23 |
| 9. | தலைநிமிரும் தமிழகம் | 24–25 |
| 10. | நாடும் மக்களும் பெற்ற நன்மைகள் | 26–27 |
| 11. | நிதிநிலை அறிக்கை 2022–2023 | 28–29 |
| 12. | இந்த ஆட்சியை எப்படி பார்க்கிறேன் | 30–51 |
| 13. | அமைச்சரவையின் இலக்கு | 52–64 |
| 14. | அறிஞர்கள்–ஆளுமைகள் கட்டுரைகள் | 65–163 |
| 15. | சிறப்புக் கவிதைகள் | 164–175 |






# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...

இது ஒரு கட்சியின் அரசாக இல்லாமல், திராவிட மாடல் அரசாக இருக்கும்.

இத்தகைய திராவிட மாடல் அரசுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த திராவிட மாடல் ஆட்சியை இம்மியளவும் பிசகாமல் நான் நடத்திச் செல்வேன் என்று உறுதி அளிக்கிறேன்.

இந்த திராவிட மாடல் ஆட்சியே சிறந்த ஆட்சியியல் தத்துவம் என்பதை இந்தியா முழுமைக்கும் எடுத்துச் சொல்வேன்.

எனது கொள்கை அரசுக்கு 'திராவிட மாடல்' அரசு என்று பெயர்.

எனது மக்கள் நலச் சேவைக்கு – எல்லார்க்கும் எல்லாம் என்பதே இலக்கு ஆகும்.

சுயமரியாதை – சமூகநீதி – சமத்துவம் – சகோதரத்துவம் – மதச்சார்பின்மை – கூட்டாட்சித் தத்துவம் – அதிக அதிகாரங்களைக் கொண்ட மாநிலங்கள் – அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமை – ஆகியவை தான் திராவிட மாடல் அரசின் உள்ளடக்கம் ஆகும்.

ஒடுக்கப்பட்ட – ஏழை – எளிய – விளிம்பு நிலை மக்களும் பெண்களும் – சிறுபான்மை மக்களும் – மூன்றாம் பாலினத்தவரும் – மாற்றுத்திறனாளிகளும் என அனைவரும் அனைத்துவிதமான சமூகப் பொருளாதாரப் பலன்களையும் பெற வேண்டும் என்பதே எங்களது சேவை மனப்பான்மை ஆகும்.

இந்த மக்களுக்கு இலவசங்கள் வழங்குவது இந்தக் காலக்கட்டத்தில் தவிர்க்க முடியாதது. அவற்றை சலுகையாக நாங்கள் சொல்வது இல்லை. அது அவர்களது உரிமையாகும்.

எளிய மக்களுக்கு வழங்கும் உதவிகள் மூலமாக அவர்களும் சமூகப் போட்டியில் முன்னுரிமைக்கு வருகிறார்கள். அவர்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

ஒரு தனியார் தொழில் நிறுவனத்துக்கு கடனை நீக்குவதும் – வரிச் சலுகை தருவதும் – வரிகளை முழுமையாக நீக்குவதும் – சிலரால் சலுகையாகச் சொல்லப்படுவது இல்லை.

அரசாங்கம் இலவச உதவி செய்ததாக யாரும் சொல்வது இல்லை.

ஆனால் ஏழை எளிய மக்களுக்குச் செய்வதை மட்டும் சலுகை, இலவசம் என்று கொச்சைப்படுத்துகிறார்கள். இந்த மனோபாவம் மாற வேண்டும்.

இந்த திராவிடவியல் ஆட்சியின் இலக்கணத்தோடு செயல்படும் திராவிட மாடல் ஆட்சி தான் தமிழகத்தில் எனது தலைமையிலான ஆட்சியாகும்.

❖❖❖

# இது திராவிட மாடல் அரசு



★ அனைவருக்கும் கல்வியைக் கொடுப்போம். பள்ளிக் கல்வி மட்டுமல்ல, கல்லூரிக் கல்வி மட்டுமல்ல, உயர்கல்வியும் கொடுப்போம்.

இதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்!

★ அனைவருக்கும் வேலை கொடுப்போம். ஏதோ ஒரு வேலை அல்ல, அவர்களது தகுதிக்கு ஏற்ற வேலையைக் கொடுப்போம்.

இதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

★ அனைவருக்கும் உரிய மருத்துவ வசதியை அளிப்போம். அவர்கள் அந்த மருத்துவ வசதியைத் தேடி வர வேண்டியது இல்லை. அவர்கள் இருக்கும் இடத்துக்கே வந்து கொடுப்போம்.

இதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

★ பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட – பட்டியலின – பழங்குடியின – இருளர் மற்றும் நரிக்குறவர் போன்ற விளிம்பு நிலை மக்களுக்குமான ஆட்சியை நடத்துவோம். அதுவும் சமூகநீதி ஆட்சியை நடத்துவோம்.

இதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

★ குறிப்பிட்ட துறைகள் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளும் சிறப்பாகச் செயல்படுவதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

★ நகரங்களை மட்டுமல்ல, கிராமங்களையும் முன்னேற்றுவது தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

★ குறிப்பிட்ட மாவட்டம் மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களும் வளர்வது தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

★ எல்லார்க்கும் எல்லாம் கிடைப்பது; கிடைக்க வைப்பதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.


❖❖❖



# எல்லார்க்கும் எல்லாம்...




Karunanidhi: A Life
A.S. Panneerselvan



# தத்துவத்தின் அடையாளமான ஆட்சி

சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார் –

இனமான எழுச்சியில் பேரறிஞர் அண்ணா –

இயக்கத்தை வழிநடத்துவதில் தமிழினத் தலைவர் கலைஞர் –

மொழி உரிமையில் இனமானப் பேராசிரியர் –

இந்த நால்வரின் நிழற்குடையில் நிற்பவன் நான்.

இவர்கள் தான் என்னைச் செதுக்கிய சிற்பிகள்!

இந்த நால்வரும் தனிமனிதர்கள் அல்ல. தத்துவத்தின் அடையாளங்கள்.

அத்தகைய தத்துவத்தின் அடையாளமாகவே நான் இருக்க விரும்புகிறேன்.

எனது தத்துவம் என்பதற்கு ‘திராவிட மாடல்’ என்று பெயர்.

‘மாடல்’ என்பது ஆங்கிலச் சொல் தான். அதற்கான சரியான தமிழ்ச்சொல்லை சொல்வதாக இருந்தால் ‘திராவிடவியல் ஆட்சிமுறை’ எனலாம். அதுதான் எனது கோட்பாடு.

அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி தான் எனது கோட்பாட்டு நெறிமுறை ஆகும்.

●

சமூகநீதி – சமத்துவம் – சுயமரியாதை – மொழிப்பற்று – இன உரிமை – மாநில சுயாட்சி ஆகிய தத்துவங்களின் அடித்தளத்தில் நிற்பதுதான் நமது அரசு.

எங்களின் வளர்ச்சி என்பதும் அதன் அடிப்படையில் இருக்க வேண்டும்.

தொழில் வளர்ச்சி – சமூக மாற்றம் – கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்.

வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

பொருளாதாரம் – கல்வி – சமூகம் – சிந்தனை – செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒரு சேர வளர வேண்டும்.

அதுதான் பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் காணவிரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!






முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு





# திராவிட மாடல் அரசின் லட்சியங்கள்

கல்வி வளர்ச்சி – தொழில் வளர்ச்சி – சமூக வளர்ச்சி – சிந்தனை வளர்ச்சி ஆகியவை கொண்ட மாநிலமாக தமிழகத்தை உருவாக்க நான் நினைக்கிறேன்.

கல்வி வளர்ச்சியின் மூலமாக சமூகம் வளர வேண்டும்.

தொழில் வளர்ச்சியின் மூலமாக மாநிலம் உயரமான இடத்தை அடையவேண்டும். இதுவே இந்த திராவிட மாடல் அரசின் லட்சியங்களாகும்.

சமூக நீதியை நிலைநாட்ட உறுதி பூண்டுள்ள இந்த அரசு, ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களின் உயர்வுக்காகவும், ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களுடைய வாழ்க்கை மேம்படவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

கல்வியில் – வேலைவாய்ப்பில் – தொழில் வளர்ச்சியில் – சமூக மேம்பாட்டில் – இந்த நாடு ஒரு சேர வளர வேண்டும்.

அந்த வளர்ச்சி என்பது அனைத்து சமூகங்களையும் மேம்படுத்துவதாக அமைய வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் வளர்ச்சியாக இல்லாமல் அனைத்து மாவட்டங்களும் சீராக வளர வேண்டும். வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

பால் பேதமற்ற – ரத்தபேதமற்ற சமூகமாக நமது சமூக மனோபாவம் மாற வேண்டும்.

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதே இந்த திராவிடவியல் கோட்பாடு ஆகும்.

❖❖❖







# கொள்கையும் சேவையும் சார்ந்த அரசு

அனைத்து அரசுகளையும் இரண்டு விதமாகப் பிரிப்பார்கள்.

ஒன்று கொள்கை சார்ந்த அரசு! மற்றொன்று சேவை சார்ந்த அரசு!

அதிகமாகக் கொள்கைகளை மட்டுமே பேசும் ஒரு அரசு, மக்களுக்கான நலத்திட்ட உதவிகளைச் செய்வதில் சுணக்கம் காட்டக் கூடும்.

மக்களுக்குச் சலுகைகள் தருவதில் அக்கறை செலுத்தும் ஒரு அரசாங்கம், தனது இயக்கத்தின் இலட்சியங்களைப் பற்றி கவலைப்படாமலும் இருக்கக் கூடும்.

ஆனால் ஒரு அரசு கொள்கை சார்ந்த அரசாகவும் – மக்களுக்கு பல்வேறு சேவைகளைச் செய்யும் அரசாகவும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

கொள்கை அரசையும் மக்கள் நல சேவை அரசையும் – ஒரு சேர நடத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

எனது கொள்கை அரசுக்கு ‘திராவிட மாடல்’ அரசு என்று பெயர்.



அரை நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சாதிப்பட்டங்களை – அதற்கான தனிச் சட்டம் போடாமலேயே துறந்தது தமிழ்ச் சமூகம். அத்தகைய தமிழ்ச் சமூகம் சாதியை மனங்களில் தாங்கி இன்னமும் வாழக் கூடாது என்பது தான் திராவிடவியல் கோட்பாடு.

சமூகத்தின் சரிபாதிப் பெண்ணினம் அனைத்து உரிமைகளையும் அடையத் தகுதி படைத்தது – பெண் என்பதால் அவள் இரண்டாம் பாலினம் அல்ல – என்று சொல்வது தான் திராவிடவியல் கோட்பாடு.

சமூகநீதியின் மூலமாக – ஒடுக்கப்பட்ட சமூகத்தை அரசியல் அதிகாரம் பெற்ற சமூகமாக ஆக்குவது தான் திராவிடவியல் கோட்பாடு.

இந்தியா என்பது பல்வேறு தேசிய இனங்களின் சேர்க்கை ஆகும். அனைத்து தேசிய இனங்களுக்கும் சரிநிகர் உரிமை தரப்பட வேண்டும் என்பது தான் திராவிடவியல் கோட்பாடு.


இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் ஆகும். அதைத்தான் அரசியல் அமைப்புச் சட்டமும் சொல்கிறது. அனைத்து மாநிலங்களும் அதிக அதிகாரம் கொண்ட சுயாட்சித் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். இந்த மாநிலங்களின் ஒன்றியமான இந்திய அரசானது கூட்டாட்சி முறைப்படி செயல்பட வேண்டும் என்பது தான் திராவிடவியல் கோட்பாடு.

இந்த திராவிடவியல் கோட்பாட்டை –

தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியா முழுமைக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.




காலம் பொன் போன்றது,
கடமை கண் போன்றது!



# தேசத்தின் முழக்கமாக...

# மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி

தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் நமக்கு இந்தியாவின் பன்முகத்தன்மையை, மதச்சார்பின்மையை, சமத்துவத்தை, சகோதரத்துவத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் இருக்கிறது.

நம்முடைய சமூகநீதியை மற்ற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கிறது.

நம்முடைய மாநில சுயாட்சியை மற்ற மாநிலங்களும் பேசத் தொடங்கி இருக்கிறது.

நாம் இதுவரை பேசிய மொழி உரிமையை பிறமாநிலத் தலைவர்களும் பேசத் தொடங்கி இருக்கிறார்கள்.

நம்முடைய பல்வேறு திட்டங்களை, பிறமாநில அரசுகளும் தங்கள் மாநிலத்தில் அமல்படுத்தத் தொடங்கி இருக்கிறது.


தமிழக மக்களுக்கு உன்னதமான நல்லாட்சியைக் கொடுத்துவரும் நாம் – நம்முடைய திராவிடவியல் தத்துவத்தை இந்தியா முழுமைக்கும் விதைக்கும் கடமையையும் நாம் செய்வோம்.

‘மாநிலத்தில் சுயாட்சி – மத்தியில் கூட்டாட்சி’ என்பது இந்தியா முழுமைக்குமான முழக்கமாக மாற்றப்பட வேண்டும்.

அதேபோல் இது சட்டத்தின் ஆட்சியாக மட்டுமில்லாமல் சமூகநீதியின் ஆட்சியாக மாற்றப்பட வேண்டும்.

அனைத்து சமூகத்துக்கும் வகுப்புவாரி உரிமை வழங்கப்பட்டாக வேண்டும். பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட – பட்டியலின – பழங்குடியின மக்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.


ஏழை எளிய – ஒடுக்கப்பட்ட – கிராமப்புற – விளிம்பு நிலை மக்களை அனைத்து அரசியல் அதிகாரம் பொருந்தியவர்களாக மாற்ற சமூகநீதித் தத்துவமே சரியான மருந்தாகும்.



# பேராளுமைகளைப்



கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் பாறைக்கும் இடையில் உயர்மட்ட கடல் பாலம் கட்டப்படும்.



தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17, 'சமூக நீதி நாளாக' கடைப்பிடிப்பு.



அருட்பிரகாச வள்ளலார் பிறந்த நாளான அக்டோபர் 5, 'தனிப்பெருங்கருணை நாளாக' கடைப்பிடிக்கப்படும்.



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு மண்டபம்.
மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம்.

# போற்றிய அரசு



அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14, ‘சமத்துவ நாளாக’ கடைப்பிடிப்பு



அயோத்திதாச பண்டிதருக்கு சென்னையில் மணிமண்டபம்.




பாரதியார் பிறந்த செப்டம்பர் 11, ‘மகாகவி நாளாக’ கடைப்பிடிப்பு உள்ளிட்ட 14 சிறப்பு அறிவிப்புகள்.



மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய “நீராரும் கடலுடுத்த” எனும் பாடல் தமிழ்நாடு அரசின் மாநில பாடலாக அறிவிப்பு.



வ.உ.சிதம்பரனார் - 150 ஆவது பிறந்தநாளுக்காக 13 சிறப்பு அறிவிப்புகள்.



காமராஜர் பெயரில் ரூ.1,000 கோடியில் கல்லூரிகளை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நாவலர் இரா.நெடுஞ்செழியனின் சிலை திறப்பு மற்றும் அவரது நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.





அரசு பள்ளிகளை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு ‘பேராசியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்’ என பெயர் சூட்டப்பட்டுள்ளது.




# மக்கள் முதல்வரால் தலைநிமிரும் தமிழகம்


























இலங்கை தமிழ் அகதிகள் முகாம்,
**இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்**
என்று அழைக்கப்படும்.










**வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன்காக்க**
**"புலம்பெயர் தமிழர் நல வாரியம்"**
**என்ற புதிய வாரியம் தோற்றுவிக்கப்படும்.**






# நாடும் மக்களும்





## பொதுமக்கள்:

அரிசி அட்டைதாரர்களுக்கு கொரோனா கால நிவாரணத் தொகையாக ரூ.4 ஆயிரம்

ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு

தனியார் மருத்துவமனைகளில் இலவச கொரோனா சிகிச்சை

பெட்ரோல் விலை ரூ. 3 குறைப்பு

கொரோனா காலச் சலுகையாக 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்பு

தைத்திருநாளுக்காக 21 பொருட்கள் அடங்கிய ‘பொங்கல் பரிசு’

## மகளிர்:

அரசு நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம்.

அரசுப் பள்ளிகளில் படித்து உயர் படிப்புக்காக கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை.

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கடன்கள் தள்ளுபடி.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்.

விதவைகளின் மகள்களுக்கான திருமணம், கலப்புத் திருமணம், ஆதரவற்ற பெண்களுக்கான திருமணம், விதவைகளின் மறுமணம் என நான்கு வகை திருமண உதவித் திட்டம்.

முதியோர் ஒய்வூதியத் திட்டம்:

குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

குழந்தைகள், பெண்களுக்கு எதிரானக் குற்றங்களைத் தடுத்திட சிறப்புச் சட்டங்கள்

## மாணவர்கள்:

அரசு நிதியுதவி பெறாத தமிழ் வழிக்கல்வி பயிலும் மாணவர்களுக்கும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கும் அனைத்து நலத்திட்ட சலுகைகளும் வழங்கப்படும்.

முன்னுரிமை அடிப்படையில் 7.5% ஒதுக்கீட்டில் கல்லூரியில் சேரும் மாணவர்களின் கட்டணத்திற்காக ரூ.204 கோடி ஒதுக்கீடு.

மாணவர்களின் தனித்திறமைகளை மேம்படுத்த ‘நான் முதல்வன்’ சிறப்புத் திட்டம்.





# பெற்ற நன்மைகள்

கற்றல் இழப்பை ஈடுசெய்ய ‘இல்லம் தேடிக் கல்வித் திட்டம்’.

அரசு முன்மாதிரிப் பள்ளிகளை உருவாக்குதல்.

பள்ளி, கல்லூரிகளை மேம்படுத்தும் திட்டங்கள்.

நூலகங்களை நவீனமயமாக்குதல்.

உலகத்தரம் வாய்ந்த வீரர்களையும், ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களையும் உருவாக்க “தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப்பதக்கத் தேடல்” திட்டம்.

மாணவர்களின் திறனை மேம்படுத்த உலகளாவிய பங்களிப்புடன் “அறிவுசார் நகரம்” உருவாக்குதல்.

## விவசாயிகள்:

வேளாண் துறைக்கென முதன்முறையாக தனி நிதிநிலை அறிக்கை

கூட்டுறவு சங்கங்களில் 4,800 கோடி ரூபாய் நகைக்கடன் தள்ளுபடி.

பயிர்க்கடன் தள்ளுபடி.

ஒரு இலட்சம் இலவச வேளாண் மின் இணைப்புகள்.

வட்டியில்லா பயிர்க்கடன்.

விளைபொருட்களை பாதுகாக்க குளிர்பதனக் கிடங்குகள்.

பாசனத்திற்கு நீர் தங்குதடையின்றி வழங்க 3,384 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

அணைகளை புனரமைக்க, பாதுகாக்க ரூ.300 கோடி.

குடிமராமத்துப் பணிக்காக ரூ.490 கோடி.

## தொழில் துறை:

தொழில் பூங்காக்கள் உருவாக்கி முதலீடுகள் ஈர்க்கப்படும்.

புத்தொழில் நிறுவனங்கள்.

முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு.

ஆதிதிராவிட, பழங்குடியின தொழில்முனைவோர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு கொள்முதல்களில் 5% ஒதுக்கீடு.

புதிய சிப்காட் தொழிற் பூங்காக்கள், சேமிப்புக் கிடங்குகள், இயற்கை உணவு பதப்படுத்தும் மண்டலம்.



குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 300 கோடி ரூபாய் மூலதன மானியம்.

ஏற்றுமதி நிறுவனங்களின் பொது கட்டமைப்புக்கு 100 கோடி ரூபாய் முதலீடு.

# 2022–2023
# நிதிநிலை அறிக்கை:



## துறை வாரியான நிதி ஒதுக்கீடு



பள்ளிக் கல்வித் துறை - ரூ.36,895.89 கோடி.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - ரூ.26.647.19 கோடி.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை - ரூ.20,400.24 கோடி.

எரிசக்தி துறை - ரூ.19,297.52 கோடி.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை - ரூ.18.218.91 கோடி.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை - ரூ.17,901.73 கோடி.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - ரூ.13,176.34 கோடி.

காவல் துறை - ரூ.10,285.22 கோடி.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை - ரூ.8,737.71 கோடி.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை - ரூ.7,474.94 கோடி.

நீர்வளத்துறை - ரூ.7,338.36 கோடி.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை - ரூ.5,992.40 கோடி.

உயர்கல்வித் துறை - ரூ.5,668.89 கோடி.

போக்குவரத்துத் துறை - ரூ.5,375.51 கோடி.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை - ரூ.4,281.76 கோடி.

தொழில் துறை - ரூ.3,267.91 கோடி.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை - ரூ.2,353.93 கோடி.

நீதி நிர்வாகத் துறை - ரூ.1,461.97 கோடி.

கால்நடை பராமரிப்புத் துறை - ரூ.1,314.84 கோடி.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை - ரூ.1,230.37 கோடி.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை - ரூ.911.50 கோடி.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை - ரூ.849.21 கோடி.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை - ரூ.838.01 கோடி.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை - ரூ.496.52 கோடி.

இந்து சமய அறநிலையத் துறை - ரூ.340.87 கோடி.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை - ரூ.293.26 கோடி.

சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத் துறை - ரூ.246.06 கோடி.

தகவல் தொழில்நுட்பவியல் துறை - ரூ.199.60 கோடி.

தமிழ் வளர்ச்சித் துறை - ரூ.82.86 கோடி.







# இந்த ஆட்சியை எப்படி பார்க்கிறேன்




















# ஒட்டுமொத்த இந்தியாவுக்கே வழிகாட்டும் அரசு

**ஆர்.நல்லகண்ணு**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

பிரிவினைவாதம், மதவாதம், பிற்போக்குத் தனமான அரசு மத்தியில் இருக்கிறது. அதற்கு துணைபோன அரசு தமிழகத்தில் இருந்தது. இந்தச் சூழலில் தான் ஆட்சிக்கு வர வேண்டுமென திராவிட முன்னேறக் கழகம் தேர்தலைச் சந்தித்தது.

தமிழகத்தின் முக்கியமான கட்சிகளை இணைத்து, தோழமைக் கட்சிகளுக்கான பிரதி நிதித்துவதை பகிர்ந்துகொடுத்து அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடந்துகொண்டார் திமுக தலைவர் ஸ்டாலின்.

அவரது அயராத உழைப்பு, கூட்டணி கட்சிகளின் பலமும் சேர்ந்து மதவாத, பிரிவினைவாத சக்திகளை தோற்கடித்து ஒரு மாபெரும் வெற்றியை திமுகவுக்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் மக்கள் அளித்தனர்.

ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் சந்தித்த முதல் சவால் கொரோனா பேரிடர். கடந்த ஆட்சியைப் போல் திணறாமல், ஒன்றிரண்டு மாதங்களிலேயே துரிதமாக செயல்பட்டு, அதற்கான அதிநவீன சிகிச்சை முறைகள், கொரோனா தடுப்பூசிகளை செலுத்தி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களை அதில் இருந்து காப்பாற்றினார் முதலமைச்சர்.

தேர்தல் வாக்குறுதிகளாக அவர் அளித்த ஒவ்வொன்றையும் படிப்படியாக நிறைவேற்றினார். நிறைவேற்றி வருகிறார். பெட்ரோல் விலை குறைப்பு, ஆவின் பால் விலை குறைப்பு, பெண்களுக்கு இலவச பேருந்து என வாக்குறுதியாக சொன்னதை உடனே செய்து காட்டினார்.

இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் போன்ற தொலைநோக்கு பார்வைகொண்ட திட்டங்களை உருவாக்கியிருக்கிறார். இந்த திட்டங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசின் முத்திரைகளாக வரலாற்றில் பதிக்கப்படும்.

அதுமட்டுமல்லாது, தமிழ்நாட்டின் எதிர்காலத்தை மனதில் வைத்து, மாநில உரிமைகளுக்காக போராடுகிறார். தமிழ் மொழி அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படுகிறார். மொழி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி என தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்கிறார் முதலமைச்சர்.

மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீடு, தமிழ்வழி படித்த மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு போன்ற சமூக நீதி போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற்றிருக்கிறது திமுக அரசு.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைத்து, மாநில உரிமைகளை மீட்க போராடுவதில் இந்தியாவுக்கே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதற்கு காரணமாக இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மக்களுக்கு நல்லாட்சி வழங்கி வரும் அவருக்கு என்னுடைய வாழ்த்துகள். இதே போன்று அவரது பணிகள் தொடர வேண்டும். தொடரும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. வாழ்த்துகள்.

# நம் முதல்வர் தமிழகத்தின் அடையாளம்



**ப.சிதம்பரம்** எம்.பி.
மேனாள் நிதி அமைச்சர், இந்திய ஒன்றியம்

**வா**க்களிக்கும் வயது வருவதற்கு முன்பு தொண்டராகத் தொடங்கி இன்று தமிழ்நாடு முதலமைச்சராக உயர்ந்தது வரை தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த உழைப்பு எனக்கு வியப்பைத் தருகிறது.

எந்தக்கட்சியாக இருந்தாலும், இன்று அரசியலுக்கு வரும் இளைஞர்கள் அதுபோன்ற உழைப்பைத் தரவேண்டும் என நான் பணிவோடு விரும்புகிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அமைச்சரவை தாக்கல் செய்திருக்கும் நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்தமாக கல்விக்கு 45 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள அறிவிப்பு என் மனதுக்கு மிக மிக பிடித்த ஓர் அம்சம்.

கல்விக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்களோ அதே அளவுக்கு கிராமப்புறங்களுக்கும், அவற்றின் ஆதாரமான விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

வேளாண் துறையின் முக்கியத்துவத்தை முதலமைச்சர் ஸ்டாலின் நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை அவருடைய பட்ஜெட் ஒதுக்கீடே அடையாளம் காட்டுகிறது.

மானியங்களை முழுமையாக ஒழிக்க வேண்டும் என ‘அறிவுஜீவிகள்’ சொல்லிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், ஏழைகள் நலம் பெறும் வகையில் 7500 கோடி ரூபாய் உணவு மானியம், 19,297 கோடி ரூபாய் மின்சார மானியம், 1520 கோடி ரூபாய் பெண்களுக்கான இலவச பேருந்து பயண மானியம், மாணவர்களின் இலவச பள்ளி பேருந்து பயணத்துக்கு 928 கோடி ரூபாய் மானியம், டீசல் மானியம் 1300 கோடி ரூபாய் என தேவையான மானியங்களை இன்றும் தொடர்ந்து வரும் முதலமைச்சரின் செயல்பாடு பாராட்டுக்குரியது.

மத்திய அரசு தமிழ்நாடுக்குத் தர வேண்டிய நிலுவை நிதிகளுக்காக போராடிக்கொண்டே, தமிழ்நாட்டின் சொந்த வருவாய் பெருக்கத்தை உறுதிசெய்ய பட்ஜெட்டில் மூன்று முக்கியமான காரியங்களை திமுக அரசு செய்துள்ளது.

ஒரே பட்ஜெட்டில் கடன் வாங்குவதையும் கூடுமானவரை குறைத்து, வருவாய் பற்றாக்குறையையும் கணிசமாகக் குறைத்து, நிதிப்பற்றாக்குறையையும் கணிசமாகக் குறைத்து ஒரே கல்லில் மூன்று மாங்காய் அடித்திருக்கிறது திமுக அரசின் பட்ஜெட்.

ஓராண்டுக்கு முன்பு நடந்த தேர்தலின் போது, மு.க.ஸ்டாலின் அவர்களை அவருடைய சொல்லை வைத்து எடைபோட்டு வாக்குகேட்டேன்; இன்று ஓராண்டு ஆட்சிக்குப் பிறகு அவருடைய செயலை வைத்து எடைபோட்டு பாராட்டுகிறேன்.

தான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளின், தான் அளித்த வாக்குறுதிகளின், தான் பொறுப்பேற்றிற்கும் மாநிலத்தின் அடையாளமாக இன்று அவர் திகழ்கிறார். ●



# ஊர் போற்றும் காட்சி பார் போற்றும் மாட்சி

பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன் M.A.,ExM.P.,
தேசிய தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

ஓராண்டு நிறைவு செய்யும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக நல்லாட்சி தமிழ் கூறும் நல்லுலகத்துக்குக் கிடைத்த பொற்கால ஆட்சி!

ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஆளும் அரசு பற்றி மதிப்பீடு செய்யும் ஜனநாயக நடைமுறை, இன்றைக்கு ஆண்டுக் கணக்கில் மட்டுமன்றி, மாதக் கணக்கில், நாள் கணக்கில் மதிப்பீடு செய்யும் நடைமுறையாகிவிட்டிருக்கிறது.

தமிழக முதல்வர் எங்கள் முதல்வர்: நமது முதல்வர். எங்களில் ஒருவர் மட்டுமல்ல: எங்களில் எல்லா வகையிலும் சிறந்தவர், தன்னை முதல்வராக கருதாமல், தமிழகத்தில் உள்ள எல்லோரும் ஏதோ ஒரு துறையில் முதல்வராகத் திகழ வேண்டும் என்று நாளும் உழைக்கும் நல்ல முதல்வர், மாநில முதல்வர், மற்ற மாநிலங்களில் சிறந்த முதல்வர் என்று ஊரார் போற்றினாலும், மற்ற மாநிலங்கள் மத்தியில் தலை சிறந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்த அல்லும் பகலும் பாடுபடும் அற்புதமான முதல்வர் என பெண்களும் ஆண்களும் பள்ளி மாணவ, மாணவியரும் போற்றிப் பாராட்டுவதை நாள் தோறும் பார்க்கிறோம்.

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் வெளியிடும் அறிக்கை, ஐந்தாண்டு காலத்தில் தங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் இவைகளை எல்லாம் செய்வோம் என்று கூறும் யூகமான உறுமொழித் திரட்டுத் தான்.

ஆனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது அறிக்கையில் 505 உறுதிமொழிகளை அறிவித்து, அவற்றில் சற்றொப்ப 75 சதவீதமான உறுதிமொழிகளை நிறைவேற்றியதை உறுதிபட, ஊர்மக்கள் பாராட்டும் வகையில், சாதனை படைத்துள்ளார்.

ஓராண்டு கால ஆட்சியில் உலக சரித்திரத்தை புதுப்பித்து, அதன் துவக்கத்தை காவேரி, வைகை, தாமிரபரணியில் இருந்து எழுத வேண்டிய கட்டாயத்தை தளபதி மு.க.ஸ்டாலின் அரசு உருவாக்கிவிட்டிருக்கிறது.

வின்செண்ட் ஸ்மித், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் ஒரு நூறாண்டாகப் பேசி வற்புறுத்தியபடி இந்தியாவின் வரலாறு தென்னகத்தில் தொடங்கி எழுத வேண்டிய நிலை இன்று உருவாகி விட்டது. தமிழக அரசு அதை உருவாக்கியிருக்கிறது.

வாழ்க செந்தமிழ்!

வளர்க நற்றமிழர்!

தமிழகத்தில் நடக்கும் நல்லரசு, பொற்கால அரசு, மக்கள் அரசு, விரைவில் இந்தியா முழுவதிலும் பிரதிபலிக்கும் அரசாக நாடே போற்றும் அற்புத அரசாகும் என்பதில் எல்லாருக்கும் நம்பிக்கை இருக்கிறது.

நேற்றைவிட இன்று நல்லது!

இன்றை விட நாளை மிக மிக நல்லது!

# மக்கள் நலம் பேணும் மறுமலர்ச்சி தொடரட்டும்!

தவத்திரு
பொன்னம்பல அடிகளார்



**மா**ண்புமிகு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஓர் ஆண்டு நிறைவு அடைய உள்ளது. அவர் இந்த ஓராண்டில் ஆற்றிய சாதனைகள் கணக்கில் அடங்கா.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் பேரிடர் கொரோனா என்ற கொடுந்தொற்று மக்களைத் தாக்காமல் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மனித உயிர்களைக் கொத்துக் கொத்தாய் அழித்த கொரோனா என்ற அரக்கனை அடக்கிய பெரும்பணியைச் செய்தது, மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு.

பெரும் மழையால் சூழ்ந்த பெருவெள்ளத்தை எதிர்கொண்டதும், புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணங்களைப் புயல் வேகத்தில் வழங்கிய பெருமையும் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சாரும்.

பெண்களுக்கான இலவசப் பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை உட்பட மகளிர் நல முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தி வருகின்றார்.

இந்து சமய அறநிலையத்துறை மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான பலகோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை மீட்பதற்கு அறநிலையத்துறை உயர்மட்ட ஆலோசனைக்குழு அமைத்து திருக்கோயில் வளர்ச்சிக்கான பணிகளை விரைந்து முடித்து சாதனைப் படைத்து வருகின்றார்.

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக் கெல்லாம் குடிநீர், சுகாதாரம், உணவு மற்றும் தங்கும் வசதிகளை அறநிலையத்துறை விரிவுப்படுத்திச் செம்மைப்படுத்தி வருகின்றது.

"அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளதும், திருக்கோயில் திருப்பணிகளைப் பழமை மாறாமல் புதுப்பித்து எண்ணற்ற ஆலயங்களின் குடமுழுக்குப் பெருவிழாக்களைச் சிறப்புடன் நிகழ்த்தி வருவதும் வரவேற்புக்குரியது ஆகும்.

அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கு மருத்துவப் படிப்பு, 7.5% இட ஒதுக்கீடு, நீட் தேர்வு விலக்கு, இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் எனச் சாதனைகளின் வரலாறாக அரசின் பணி தொடர்கின்றது.

விவசாயம், கல்வி, மருத்துவம், ஆன்மீகம், சுகாதாரம் என்று எல்லாத் துறைகளிலும் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, ஓராண்டில் ஆற்றியுள்ள பணிகள் ஒரு நூற்றாண்டு வளர்ச்சியினை எட்டிப் பிடிக்கும் சாதனைகளாகப் படைத்துள்ளது.

காட்சிக்கு எளியவராக, எப்பொழுதும் இன்முகத்தோடு அனைவரையும் வரவேற்று அன்புடன் குறை தீர்ப்பவராக நல்லரசாகிய கலைஞர் அரசை நடத்தி வரும் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகள் தொடரட்டும்!

மக்கள் நலம் பேணும் ஆட்சியால் தோன்றியுள்ள மறுமலர்ச்சி தொடரட்டும்!

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் இன்பத் தமிழகம் மலரட்டும்!



# திசையெட்டும் எட்டும் திராவிட ஆட்சி

கவிப்பேரரசு
**வைரமுத்து**

‘சொல் என்பது பித்தளை; செயல் என்பது தங்கம்’ என்பது உள்ளத்தை இறுக்கிப் பிடிக்கும் துருக்கிப் பழமொழி. சொல் என்பது மொழியின் இலவசம்; செயல் என்பதுதான் மனிதனின் விலாசம். சொற்களைவிடச் செயலுக்கு முன்னுரிமை தருவதுதான் தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசியல் வெளியிலும் ஆட்சி வெளியிலும் கூர்ந்து கவனிக்கப்படக் காரணம்.

ஓராண்டு நிறைவதற்குள் நீண்ட பல ஆண்டுகள் அவர் ஆண்டிருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார். மிக முக்கியமாய் நான் கவனிப்பது ஒன்று. இந்தச் சாதனைகளின் பெரும்புகழைத் தன்மேல் ஏற்றிக்கொள்ளாமல் ‘திராவிட மாடல்’ என்ற தத்துவத்திற்கே அவர் தாரை வார்த்திருக்கிறார். இது அவரது கொள்கையின் மாண்புக்குக் கிட்டிய கிரீடமாகும்.

பெரியார் ஒரு தமிழ்நாட்டைக் கனவு கண்டார்; அண்ணா அந்தத் திட்டத்திற்குக் கோடு கிழித்தார்; கலைஞர் அந்தக் கோடுகளில் வீடு கட்டினார்; தளபதி மு.க.ஸ்டாலின் அந்த வீடுகளில் தமிழர்களைக் குடியேற்றி ஒளியேற்றிக்கொண்டிருக்கிறார். முதலமைச்சர் செய்வது வெறும் நூறுநாள் திட்டமல்ல; நூற்றாண்டுகளின் திட்டம்.

அவர் ஆட்சிக்கு வந்தபோது வளமான தமிழ்நாடு அவர் கையில் வந்துசேரவில்லை. சுகாதாரம் – பொருளாதாரம் இரண்டும் நலிந்து நார் நாராய்க் கிழிந்துபோன நிலையிலேதான் அவர் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டார். கொரோனாவிலிருந்து தமிழ்நாட்டைக் குறைந்த பாதிப்புகளோடு அவர் மீட்டெடுத்தபோதே தகுதியான முதலமைச்சரைத்தான் தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்று வீட்டுக்கு வீடு பாராட்டப்பட்டது.

அவர் ஆட்சியில் பயன்பெறாத தரப்பினர் என்று எவருமில்லை. சூரியனின் கிரணங்கள் கடல் ஆழத்தில் வசிக்கும் உயிரினங்களுக்கும் உயிர்ப்பூட்டுவது போல, அவர் ஆட்சியின் நீட்சி தமிழ்நாட்டின் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்து தருகிறது.

ஆண்கள் – பெண்கள் – மூன்றாம் பாலினத்தார் – விலங்குகள் – வேளாண்மைத் தாவரங்கள் என்று எல்லா உயிர்களின் மீதும் அவர் ஆட்சியின் நன்மைகள் சென்று சேர்ந்திருக்கின்றன.

சமத்துவம் – சமநீதி – சமூகநீதி – சமவாய்ப்பு – சமநன்மை என்ற தத்துவங்களின் திரட்சிதான் திராவிட மாடல் என்று எட்டுத் திசைகளையும் எட்டும் வண்ணம் அவர் உரத்த குரலில் முழங்கிக் கொண்டிருக்கிறார்.


நீண்ட காலங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டிலிருந்து ஓர் இந்தியத் தலைவன் உருவாகிறான் என்ற முணுமுணுப்பு இந்தியாவின் எல்லா தேசிய மொழிகளிலும் கேட்கத் தொடங்கியிருக்கிறது.

மு.க.ஸ்டாலின் என்ற ஆளுமைமிக்க முதலமைச்சரால் இந்த நாடு மேலும் மேலும் பயன்பெறுவதற்கு ஒரே வழி, ஒட்டுமொத்தத் தமிழர்கள் அவரை உயர்த்திப் பிடிப்பதுதான்; அவருக்கு உற்சாகம் தருவதுதான். ஐந்தாண்டுகளில் ஆற்ற வேண்டிய பெரும்பணிகளையெல்லாம் ஐயிரு திங்களில் ஆற்றியிருக்கும் முதலமைச்சரை நானும் வரிசையில் நின்று வாழ்த்துகிறேன்.

முத்தமிழறிஞரே! மூதறிஞரே! என் தமிழாசான் கலைஞர் அவர்களே! உங்கள் மகனின் பெருஞ் செயல்களையும் பெரும் புகழையும் காண நீங்கள் இல்லையே என்ற ஒன்றைத் தவிர தமிழ்நாட்டில் குறையொன்றுமில்லை.

# அரசியல் சாத்தியப்பாடுகளின் எல்லை நிலம்

**இந்திரா பார்த்தசாரதி**
எழுத்தாளர்



'Politics is the art of the possible' என்பார்கள் ஆங்கிலத்தில். எவைஎவை சாத்தியமோ அவற்றைச் சீராக, நேர்த்தியாகச் சாதித்துக் காட்டுவதுதான் அரசியல்.இதை இது வரை மிகச் சிறப்பாகச் செய்து காட்டியிருக்கிறது அண்மையில் ஓராண்டுக் காலத்தில் பதவி ஏற்றியிருக்கும் தி.மு.க அரசாங்கம்!

நிர்வாகச் சாத்தியங்களையும் தேர்தல் வாக்குறுதிகளையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. பதவியேற்றதும் அப்பொழுது தமிழ்நாட்டு மக்களை அச்சுறுத்திய கொரோனா நோயை ஒரு கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தது தி.மு.க. ஆட்சி. இது ஒரு மாபெரும் சாதனை. அடுத்த நிலையில், தமிழகத்தை ஒரு பயங்கரமான கடன் சுமையுடன் நிதி நெருக்கடியில் விட்டுச் சென்ற அ.தி.மு.க ஆட்சியின் அலங்கோலத்திலும், இயன்றவரைப் பொருளாதார ரீதியாகக் கீழ் மட்டத் திலிருந்த மக்களுக்குத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வைத்திருக்கிறது இவ்வாட்சி.இது பாராட்டுதற்குரிய ஒரு நிகழ்வு.

மக்கள் உழைப்பும், அமைச்சரவை செயலாற்றலும், அரசாட்சி என்கிற ஒரு ஊர்தியின் இரு சக்கரங்கள். இரண்டு சக்கரங்களும் சரிவர இயங்கினால்தான் வண்டி சீராக ஓடும். 'இலவசங்கள்' மக்கள் உழைப்பை அவமதிப்பது போலாகும். இதைப் பெரும்பாலான தமிழ் மக்கள் சரிவரப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது, அண்மையில் நடந்த ஊராட்சித் தேர்தல் முடிவுகள் மூலம் புலனாகின்றது.

இலவசங்கள் ஒரு குறுகிய காலத்துக்கு அவற்றைப் பெறும் மக்களுக்கு இன்பத்தைத் தரலாம். ஆனால், இது தமிழகத்தின் பொருளாதார முன்னேறத்துக்கோ, அவற்றைப் பெறும் மக்களின் நீண்டகாலப் பொருளாதார மேம்பாட்டுக்கோ உதவப் போவதில்லை. இதை நன்குணர்ந்த நிலை யில்தான் இவ்வாட்சி இவ்வாண்டு வரவுசெலவு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறது. பாராட்டுக்கள்.

பெண்களுக்கு இக்காலச் சூழ்நிலையில் மிகவும் தேவைப்படுவது உயர்கல்வி. அதுவும், மிக முக்கியமாக, ஏழைப் பெண்களுக்கு. நேர் கொண்ட பார்வையும், தன் உரிமைகளைப் பாதுகாக்கவும், தன்னையே நம்பி இருக்கவும், இந்த உயர் கல்வி உதவும். ஆணோடு சரி நிகர் சமானமாக இருக்கக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த இந்த ஆட்சி, அரசுப் பள்ளிகளில் படித்த பெண்கள் அவர்கள் தேர்ந்தெடுக்கும் உயர்கல்வி முடியும் வரைப் படிப்புக்கு பண உதவி செய்ய இருப்பது மிகச் சிறந்த முடிவு. திருமண உதவியைக் காட்டிலும் இது மிகச் சிறந்தது.

கோயில்களில் சாதி வேறுபாடின்றித் தகுதியுடையவர்கள் அனைவரும் அர்ச்சகராகலாம் என்பது சமூக நீதிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் முதல் முறையாக இது நிறைவேறியிருக்கிறது. மேலும் இனி இறைவன் கருவறையில் தமிழ் ஒலிக்கும். 12 ஆம் நூற்றாண்டு சமூக நீதிக் காவலர் இராமாநுஜர் கண்ட கனவு நினைவாகும்.

இவ்வாறு பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கும் மாண்புமிகு முதல்வர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



# சமூகநீதியின் அடையாளம் இந்த ஆட்சி

நீதியரசர்
அரிபரந்தாமன்

1967–இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம், வரலாற்றில் ஒரு திருப்புமுனை. அன்று முதல், இந்திய அரசமைப்புச்சட்டத்தின் முகப்புரை கூறும் சமூகநீதி, தமிழக அரசால் பல்வேறு முனைகளிலும் தீவீரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சமூகநீதியை முன்னெடுப்பதில், அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக உள்ளது தமிழ்நாடு அரசு. எனவேதான், சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பை அறிவித்தார் தமிழக முதல்வர். சமூகநீதியை கண்காணிக்க குழு அமைத்த முதல்வர், சமூகநீதிக்காக வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17–ஐ சமூக நீதிநாள் என அறிவித்தார்.

நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட வலுவான சமூக நீதி அடித்தளம் தமிழ்நாட்டில் இருப்பதால்தான், அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் மருத்துவ மாணவர் சேர்க்கையில் “நீட்” தேர்விற்கு விலக்கு கோரி சட்டம் இயற்றியது தமிழக அரசு.

அரசமைப்புச்சட்டம் மாநிலங்களுக்கு வழங்கும் உரிமையை நிலைநாட்டும் வகையிலும், அடித்தட்டு மக்கள் மருத்துவராவதை உறுதி செய்யும் வகையிலும், நீட் விலக்கு சட்டத்திற்கு குடியரசு தலைவரின் ஒப்புதலை தமிழக அரசு பெறும் என்பதே தமிழக மக்களின் நம்பிக்கை.

இந்த சமூகநீதி அடித்தளமே, தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து நடத்திய தொடர் சட்டப்போராட்டத்தின் விளைவாக மருத்துவ மாணவர் சேர்க்கையில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பின்தங்கிய பிரிவினருக்கு இட ஒதுக்கீட்டை பெற வழிவகுத்தது.

இதனால், தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்தில் உள்ள பின்தங்கிய பிரிவை சேர்ந்த மாணவர்கள் மருத்துவ படிப்பை படித்து பயன் பெறுகின்றனர். இது சமூக நீதிக்கு கிடைத்த மேலும் ஒரு வெற்றி.


சமூகநீதியின் மிக முக்கிய கூறு பெண் விடுதலை. அதன் ஒரு பகுதியாகத்தான் உள்ளாட்சி நிர்வாகத்தில், பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கியது தமிழக அரசு. இதனால், 21 மாநகராட்சியில், 11 இல் பெண்தான் மேயர் என்ற சாதனை படைக்கப்பட்டது.

பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 40% இட ஒதுக்கீடு என்பதும் மகளிர் முன்னேற்றத்தில் முக்கிய மைல்கல். இதுபோன்ற ஒதுக்கீடு இந்தியாவில் வேறெங்கும் இல்லை. இந்தியாவிலேயே, தற்சமயம் 13 பெண் உயர் நீதிமன்ற நீதிபதிகள் தமிழ்நாட்டில்தான் உள்ளனர். வேறெந்த உயர்நீதிமன்றமும் இரட்டைப்படை எண்ணை எட்டவே இல்லை.

பெண்கள் அரசு பேருந்தில் கட்டணமின்றி பயணிக்கலாம் என்ற அறிவிப்பும், அரசு பள்ளியில் படிக்கும் மாணவிகள், கல்லூரி படிப்பை தொடர்ந்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பும் தமிழக அரசின் முக்கிய சாதனை... சாதனைகள் தொடரட்டும்...

# இது எமது அரசு

நடிகர்
**சத்யராஜ்**



**1967**ல் அறிஞர் அண்ணா திராவிட இயக்க ஆட்சியை இந்த மண்ணில் நிறுவி புவியியல் ரீதியாக தமிழர்களின் தாய் நிலப்பரப்பிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். நூறு ஆண்டுகளாக நாம் எப்படி இருக்க வேண்டும் என அயோத்திதாசர், தியாகராயர், பனகல் அரசர்,பெரியார், அண்ணா, கலைஞர் எனச் சிந்தித்ததைச் செயல்வடிவம் ஆக்கிக் காட்டினார்கள்.

நூறு ஆண்டுகால திராவிட இயக்கம், அரசியல் வரலாற்றில் 55 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆட்சி செய்திருக்கிறது. இந்த மண்ணில் செயல்படுத்தப்படும் சமூக நலத்திட்டங்கள், கல்வி வளர்ச்சி திட்டங்கள், நன்மை எது தீமை எது என்பதை பகுத்தறிந்து அதை தொடர்ச்சியாக திட்டங்களாக செயலாற்றுவது என அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் என அடுத்தடுத்து நம்மை ஆட்சி செய்தவர்கள் திராவிட இயக்க சிந்தனைக் கட்டமைப்பில் இருந்து விலகிச் சென்றதில்லை.

இன்று நாம் இந்தியாவின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது வளர்ச்சி அடைந்திருக்கிறோம். அது சிந்தனையின் வளர்ச்சி, கல்வியின் வளர்ச்சி, மனித வளக் குறியீட்டின் வளர்ச்சி, வாழ்க்கையின் வளர்ச்சி எனப் பார்க்கிறோம்.

இத்தனை ஆண்டுகால உழைப்பிற்குப் பின்னால் திராவிடம் என்ற கோட்பாடு இருந்தது. அதையே இப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "திராவிட மாடல்" என பெயர்சூட்டி அதை இந்தியாவுக்கு மாடலாக வைக்கிறார்.

முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வந்த இந்த ஓராண்டில் அவரது உழைப்பும் மக்களுக்காக அவர் அறிவிக்கும் திட்டங்களும் வியப்பை ஏற்படுத்துகிறது என்ற போதிலும், இந்த ஓராண்டில் என்னைக் கவர்ந்த சில திட்டங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்று தந்தை பெரியார் பிறந்த தினமான செப்டம்பர் 17ஆம் நாளை சமூக நீதி நாளாக தமிழ்நாடு அரசு கொண்டாடும் என்ற அறிவிப்பு மிக முக்கியமானது. தமிழ்நாட்டை அரண் செய்யும் சிந்தனையாளர் பெரியாரை மட்டும் கவுரவிப்பதல்ல இது. நமக்கிருக்கும் மாண்புகளைக் காப்பாற்றிக் கொள்ளும் அறிவிப்பு இது.

மிக முக்கியமான இன்னொரு அறிவிப்பாக நான் கருதுவது உயர்கல்வி படிக்கும் அனைத்து மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அறிவித்தமை.பள்ளிக் கல்வி முடித்து உயர்கல்விக்குச் செல்வோர் எண்ணிக்கை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம். 50 சதவிகிதமாக இருக்கும் இந்த கல்வி வளர்ச்சியை, இந்த திட்டம் நூறு சதவிகிதமாக உயர்த்தும் என நினைக்கிறேன்.

நான் எப்போதுமே இருப்பதில் சிறந்த ஒன்றை தெரிவு செய்வேன். இருப்பதில் சிறந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய ஆட்சி. அவர் இணக்கமாக இருக்கிறார். மக்களுடன் தன்னை ஒப்பந்தப்படுத்தியிருக்கிறார். சமுதாயம் நல்லிணக்கமாக இருக்க வேண்டும் என நினைக்கிறார். பெரியார், அண்ணா, கலைஞர் என்ற மரபின் தொடர்ச்சியாக இருக்கிறார். அதனால்தான் இதை நமது அரசு என்கிறோம்.



# தனி மனிதனாகத் தமிழ்நாட்டில் நல்லாட்சி செய்கிறார்

**சுகி சிவம்**
**சொற்பொழிவாளர்**

ஒரு பக்கம் கொரோனா... இன்னொரு பக்கம் காலியான கஜானா. இந்த சூழலில் தான் பதவியேற்றார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

கொரோனாவை மட்டுமல்ல தனது எதிரிகளையும் ஜெயித்து... காலியான கஜானாவையும் ஜெயித்து ஒரு புதிய வரலாறு படைத்து இப்போது கம்பீரமாக நிற்கிறார்.

நானும் முதல்வரும் கல்லூரித் தோழர்கள். அதனை அவரது சுயசரிதை புத்தகத்திலேயே எழுதி இருக்கிறார்.

ஆட்சியில் இல்லாதபோதே முத்தமிழ் பேரவையில் நடந்த ஒரு விழாவில் அவர் எனக்கு விருது வழங்கினார். என்னை, 'இந்து விரோதி' என்று கூறி நோகடித்தார்கள்.

ஆனால் எனக்கு இந்து சமய அறநிலையத் துறையின் ஆலோசகர் பதவி வழங்கி என்னுடைய மனப் புண்ணுக்கு மருந்து போட்டிருக்கிறார்.

முதல் நாள் புத்தக வெளியீட்டு விழாவில் 'உங்களில் ஒருவனாக' இருக்கிறார். அடுத்த நாள் ஒரு நிகழ்வில் 'நான் முதல்வனாக' இருக்கிறார்.

அந்தரத்தில் இருந்து முதல்வர் வருவதில்லை. உங்களில் இருந்துதான் ஒரு முதல்வர் வரவேண்டும் என்பதை இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்துச் சொல்கிறார்.

உண்மையில், வரலாறு தெரிந்தவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், அரசியல் விமர்சகர்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக... இப்படி ஓர் ஆட்சியை அவர் கொடுக்கப் போகிறார் என்று யாரும் கற்பனை கூட செய்து பார்க்கவில்லை.

பத்து ஆண்டுகள் எதிர்கட்சியாக இருந்த போதே, அடுத்து நாம் ஆட்சிக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருந்திருக்கிறார். இல்லையென்றால் இப்படி ஒரு ஆட்சியை அவரால் நடத்த முடியாது.

தனி மனிதனாக தமிழ்நாட்டை தலைமை தாங்கி ஆட்சி செய்தாலும்... யாரை குடைய வேண்டுமோ... எங்கே குடைய வேண்டுமோ அதற்கான கருவி வைத்திருக்கிறார்.

எதைத் திறக்க வேண்டும், எதை மூட வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறார். எந்தப் பிரச்சனையை எப்படிச் சரி செய்ய வேண்டும், எதனைத் தட்டினால் எது சரியாகும் என்கிற அத்தனையும் அவருக்கு அத்துப்படியாக இருக்கிறது.

ஸ்பைடர் மேன் சினிமாவில், மக்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் உடனே வந்து நிற்கும் ஸ்பைடர் மேனைப் போல இருக்கிறார் முதலமைச்சர்.

கற்பனை சினிமாவில் ஸ்பைடர் மேனை பார்த்த மக்கள், இப்போது நிஜ வாழ்க்கையில் தங்களைக் காக்க வந்த ஸ்பைடர் மேனாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பார்க்கிறார்கள்.

# எளிய மனிதர்கள் எட்டும் இடத்தில் இருக்கும் அரசு

**எஸ். ராமகிருஷ்ணன்**
எழுத்தாளர்



தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு இந்த ஓராண்டு காலத்திற்குள் வியப்பூட்டும் வளர்ச்சியை அடைந்துள்ளது.

வெளிப்படையான நிர்வாகம், சிறந்த செயல்திட்டங்கள். வழிநடத்தும் தேர்ந்த வல்லுநர் குழு, சீரான பொருளாதார வளர்ச்சி. தொழில், கல்வி, மருத்துவம், வேளாண்மை. பண்பாடு, சமூக நலன், மகளிர் மேம்பாடு என அனைத்து துறைகளிலும் புதிய திட்டங்களை உருவாக்கும் தமிழகம் இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உருக்கொண்டு வருகிறது.

தமிழ் மொழி மற்றும் இலக்கியம், பண்பாடு சார்ந்து தமிழக அரசு அறிவித்துள்ள புதிய திட்டங்கள் முன்மாதிரியற்றவை. சிறந்த எழுத்தாளர்களுக்கு இலக்கிய மாமணி விருது, உயரிய விருதுகளைப் பெற்ற எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம், மதுரையில் கலைஞர் நினைவு நூலகம், தகைசால் தமிழர் விருது, கீழடியில் கிடைத்துள்ள பொருட்களுக்கான அருங்காட்சியகம், மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சி, சென்னையில் நிரந்தரப் புத்தகப் பூங்கா, சிறந்த பத்திரிக்கையாளர்களுக்கான விருது, சிறந்த செய்தி ஊடகங்களுக்கான விருது, நூலகச் சீரமைப்பு குழு என மகத்தான திட்டங்களைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

தமிழையும் தமிழ் படைப்பாளிகளையும் கொண்டாடும் இந்த அரசினை மனம் நிறைந்து பாராட்டுகிறேன்.

இலக்கியம், திரைத்துறை, விளையாட்டு என எந்தத் துறையில் யார் விருது பெற்றாலும் அவர்களை உடனடியாக அழைத்துப் பாராட்டுகிறார் முதல்வர். எளிய மனிதர்கள் ஆட்சியாளர்களை எப்போதும் எட்ட முடியும் என்கிற நம்பிக்கையை விதைத்திருக்கிறது தமிழக அரசு.

ஓராண்டுக் காலத்திற்குத் தமிழக அரசு செய்துள்ள சாதனைகள் ஏராளம். பெருந்தொற்று காலத்திலிருந்து மீண்டு புதிய வளர்ச்சிப்பாதையில் தமிழகத்தை அழைத்துச் செல்கிறது இந்த அரசு.

அரசுப்பள்ளியில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4000 நிவாரண நிதி, நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவச பயணம், ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வித்திட்டம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என ஆணை, தொல்லியல் ஆய்வுக்கென்று ரூ. 5 கோடி ஒதுக்கீடு, வேளாண்மைக்கு என்று தனி பட்ஜெட் எனச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழக அரசின் நிகரில்லாத நிதிநிலை அறிக்கை தமிழகத்தின் வளர்ச்சியை அடுத்த நிலைக்குக் கொண்டு போகும் விதமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இது காகிதமில்லாத நிதிநிலை அறிக்கையாகும். கணினி வழியாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதன்முறை.

மாபெரும் கனவுகளுடன் தமிழகத்தை வளர்ச்சிப்பாதையில் நடத்திச் செல்லும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் தமிழக அரசினையும் மனம் நிறைந்து பாராட்டுகிறேன்.



# தமிழர் இயக்கத்தின் கட்டளை மையம்

ஓவியர்
**டிராட்ஸ்கி மருது**

மேலாதிக்கத்தின் வழியாக தமிழர்களின் அடையாளத்தை அழித்துவிட நினைக்கும் ஒரு பேராபத்து கண்ணுக்கு முன்னால் நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்து, அதை முறியடிக்கும் திசையிலும், தமிழர் அடையாளங்களை காப்பாற்றி வளர்த்தெடுக்கும் திசையிலும் இவ்வரசு பயணப்பட்டுவருகிறது. சமூகநீதியை முழுமையான செயல்வடிவத்துக்கு கொண்டு வருவதற்கான திமுக அரசின் முனைப்புகளே அதற்கு முக்கியமான சாட்சி.

- கலாப்பூர்வமான செயல்பாடுகள் மூலம் தெற்கின் வரலாற்றை நிலைநிறுத்தல்,
- காட்சிவடிவத்தில் வரலாற்றை கொண்டுவர வேண்டிய வரலாற்று அவசியத்தை நிறைவேற்றல்,
- கலை, கல்வி இரண்டையும் முழுமையாக நவீனமயப் படுத்துவதன் மூலம் உலக சமூகத்தோடு தமிழ் இனத்தை இணைத்தல்,
- பல்வேறு கலைகளுக்கு இடையிலான கூட்டுச் செயல்பாட்டுக்கும் புரிந்துணர்வுக்கும் புதிய வெளிகளை விரிவாக உருவாக்குதல்,
- சமகால கலைஞர்களை அந்த வெளியில் முழுமையாக இயங்கும் சுதந்திரக்கட்டமைப்பை உருவாக்குதல்,
- ஆவணப்படுத்தலின் அவசியத்தை மீட்டெடுத்து பூர்த்திசெய்தல்,

என கடந்த ஓராண்டு காலத்தில் இவ்வரசு மிக மிக நம்பிக்கை தரும் ஒரு திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

கலைஞர் இருந்தபோது முழுமையான தமிழ் இயக்கத்துக்கான ஒரு கட்டளை மையமாக இருந்தார். அந்த இடத்தை, உலக அரங்கில் தமிழரின் குரலாக உயர்ந்து நிற்பதன் மூலம் இன்று பூர்த்திசெய்துகொண்டிருக்கிறார் முதல்வர்.

ஒரு கலைஞனாக மகிழ்கிறேன் – பூரிக்கிறேன் – நம்பிக்கை கொள்கிறேன். தொடருங்கள் எம் முதல்வரே!

# பகைமை விதைக்காத பண்புள்ள அரசு

**பாரதி கிருஷ்ணகுமார்**
எழுத்தாளர்



ஓராண்டை நிறைவு செய்ய இருக்கிறது இந்த ஆட்சி. வாழ்த்துகிறேன். ஓராண்டுக்கு முன்னர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று அதிகாரத்திற்கு வர வேண்டும் என்று மனதார விரும்பினேன்.

வானவில்லைப் போன்ற வண்ணங்களும், எண்ணங்களும் கொண்ட இந்தத் தேசத்தின் பன்முகத் தன்மையைக் காப்பாற்றும் ஒரு அரசு அதிகாரத்தில் இருப்பதே சிறந்தது என்று பேராவல் கொண்டிருந்தேன். ஏனெனில், அது காலத்தின் கடமையாக, கட்டளையாக, கருத்தாகவும் இருந்தது.

பகைமைகளை மட்டுமே விதைத்து, நச்சுக் கனிகளை விளைவிக்கும் “மனிதர்களும்” அதிகாரம் பெற்று விட்ட சூழலில் நிழல் தந்து, சுவையான கனி தரும் மரமொன்று உள்ளூரில் பழுக்க வேண்டுமென்ற கனவைத் தமிழர்கள் நனவாக்கினார்கள்.

மதப் பகைமையை, சாதிப் பகைமையை மட்டும் இன்றி, எந்தப் பகைமையும் விதைக்காத பண்புள்ள அரசாக இந்த அரசு இயங்குகிறது.

ஏழைகளின் கல்வியைக் காக்கும் பொருட்டு, இல்லம் தேடிக் கல்வியைக் கொண்டு சேர்க்கும் ஆசிரியனாக இந்த அரசு உருவெடுத்திருக்கிறது.

“படித்தவனுக்குப் பரீட்சை வைக்கலாம். ஆனால் படிப்பதற்கே பரீட்சை என்னும் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு எதிராகத் தீரம் மிகுந்த தீர்மானங்களை நிறைவேற்றும் மேன்மையுள்ள அரசாகச் செயல்படுகிறது. அவைகள் ஒரு அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மட்டும் அல்ல. வரலாற்று ஆவணங்கள். வரலாற்றைத் திருத்தி எழுதப் போகும் தீர்ப்புகள்.

எல்லாவற்றிற்கும் இணையாக, எமது தாய் மொழியின் மேன்மைக்கு மேதமைக்கு அனைத்து வழிகளிலும் உயிர்த் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது தமிழக அரசு. இந்த அரசின் இதயத் துடிப்பில் தமிழ் தமிழ் என்று ஒலிப்பதால் தமிழர்கள் அதன் குருதியில் கலந்து நிற்பார்கள்.

நிறைவாக, என்னைப்போலத் தமிழின் மீது அன்பு கொண்டோர்க்கு, அவர்கள் விண்ணப்பிக்காமலே விருது தந்து அவர்களது சுயமரியாதையைக் காத்தது இந்த சுயமரியாதை இயக்க அரசு.

இந்தப் பன்முக செயல் திறனுக்காக களிப்புடன், காதலுடன், கனிவுடன் இந்த அரசைப் பார்க்கிறேன். நீடித்து நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.



# ஒரு போரை முடித்தார் இன்னொரு போரை தொடங்கினார்


**ஆர். விஜயசங்கர்**
ஆசிரியர் - ஃபிரண்ட்லைன்


உலகமே கொரோனா கொடுந்தொற்றுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில் திரு. மு.க. ஸ்டாலின் அரசு பதவியேற்றது. போர்க்களத்திலேயே பதவியேற்ற முதல் மாநில அரசு அதுவாகத்தான் இருக்கும்.

அதற்கு முன் நான்கு ஆண்டுகளாக சுயமரியாதையையும், மாநில உரிமைகளையும் காற்றில் பறக்க விட்டு செயல்பட்ட அரசு கடன் சுமையையும், காலியான கஜானாவையும் விட்டுச் சென்றிருந்ததால் புதிய அரசின் முன் சவால்கள் மலை போல் நின்றிருந்தன.

கொரோனா எதிர்ப்புப் போரில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துகளை பேசி வந்த மோடி அரசின் செயலின்மைக்கு நேர் மாறாக களத்திலேயே இறங்கி மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தினார் திரு ஸ்டாலின். முன்களப் பணியாளர்களுக்கு வானத்திலிருந்து பூத்தூவாமல் கவச உடை அணிந்து மருத்துவமனைகளுக்கே சென்று உற்சாகமளித்தார்.

அந்தப் போரில் வெற்றி கண்ட பின் மாநில உரிமைகளைக் காக்கவும், மதவாதத்தினை முறியடிக்கவும் ஒரு போரைத் துவக்கினார் முதல்வர். இப்படி ஒரு போரை முடித்தார். ஒரு போரைத் தொடங்கினார்.

அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் சென்று, பொது சுகாதாரச் சீரழிவிலினாலும் பொருளாதாரச் சிக்கல்களாலும் நலிவடைந்திருந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க திரு ஸ்டாலின் எடுத்து வரும் முயற்சிகளைத்தான் இந்த ஓராண்டின் முக்கிய சாதனையாகப் பார்க்கிறேன்.

# வள்ளுவர் வகுத்தது

பேராசிரியர் **ராஜன் குறை**
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்,
டெல்லி



கடந்த வருடம் சட்டமன்ற தேர்தல் சமயத்தில் நானும், 'ஸ்டாலின் அணி' என்ற செயலியை என் செல்பேசியில் தரவிறக்கம் செய்திருந்ததால், அடிக்கடி ஒரு பாடல் ஒலிக்கும்.

"ஸ்டாலின் தான் வராரு, விடியல் தரப் போறாரு" என்பதுதான் அந்த பாடல்.

அந்த நேரத்தில் அதை தேர்தல் பிரச்சாரமாகத்தான் உணர முடிந்தது. இன்று நினைத்துப் பார்த்தால் அது எதிர்காலத்தை கணித்துச் சொன்னதாக புரிகிறது. ஸ்டாலின் வந்துவிட்டார், விடியலை தந்துகொண்டிருக்கிறார்.

இந்த ஓராண்டில் இந்த ஆட்சி செய்துள்ள பணிகளை பாராட்டுவதென்றால் ஒரு நூலே எழுத வேண்டியிருக்கும்.

சுருக்கமாக சில அம்சங்களை கூறலாம்: சட்டமன்ற மாண்பினை மீட்டு அதில் அர்த்தமுள்ள செயல்பாடுகள் இடம்பெற செய்தது; அன்றாடம் அரசு இயந்திரத்தின் திறமையான இயக்கம், மக்கள் குறை தீர்த்தல்; சமூக நீதி, மாநில சுயாட்சி இலட்சியங்களை நோக்கிய பயணம்; பொதுமன்ற செயல்பாடுகள், சான்றோர் பணி போற்றுதல்.

அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது என்னவென்றால் தலைமைக்கு அழகென வள்ளுவர் வகுத்தது:

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.



# கொள்கைக் கோட்பாட்டின் ஆட்சி இது

பேராசிரியர்
சுப.குணராஜன்

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே ஆட்சியில் இருக்கும் கட்சி என்பது வியப்பாகத் தெரியலாம் சிலருக்கு.

கொள்கையடிப்படையில் ‘ஆட்சி = பொறுப்பு’ என்பதே கழகத்தின் வழி. அதேபோல பதவி என்பது பணி செய்யும் வாயப்பு என்பதே அண்ணாவின் அரசியல் தாரகமந்திரம். அதன் வழி நடந்து ‘திராவிட மாடல்’ ஆட்சி வடிவத்தைக் கட்டமைத்து, நவீன தமிழகத்தினைச் செதுக்கிய சிற்பி கலைஞர் எனும் இந்திய அரசியல் களத்தின் மாபெரும் ஆட்சியாளர்.

திராவிட மாடல் ஆட்சியின் மாபெரும் பலம் கலைஞரின் ஆட்சி சிந்தனைகள். ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிடினும், ‘ஆட்சியை’ நெறிப்படுத்தும் பணியை கழகமே மேற்கொள்ள வேண்டியதானது. பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் ‘கொள்கை வாரிசான’ முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், பத்தாண்டு காலம் நீண்ட இருள் நீக்கும் பணியேற்றிருக்கிறார். இந்த முறை தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுமைக்கும் அவர் தேவைப்படுகிறார்.

பகுத்தறிவு சார்ந்த சுயமரியாதை, சமூகநீதி கோட்பாடுகளில் தெளிவற்ற அல்லது தேவையான அளவில் சிந்தனை வளம் பெறாத அரசியல் கட்சிகள், அரசியல் என்பதை ஆட்சியதிகாரம் பெறும் வழி என்பதாக மட்டும் கருதும் போக்கில், மாற்றாரிடம் தொடர் தோல்வியைச் சந்திக்கின்றன.

திராவிடக் கோட்பாட்டு சட்டகங்களான, ‘சமூக நீதி’ (Social Justice), ‘இந்தியக் கூட்டாட்சிக் குடியரசு’ (Federal Republic of India) எனும் அறைகூவல்களை முன்வைத்து களமிறங்கியுள்ளார் முதல்வர் தலைவர் தளபதி. தமிழ்நாட்டு நலன் மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தின் நலனையும் காக்கும் அரசியல் கூட்டமைப்பை உருவாக்கும் பணியே இப்போதைய உடனடித் தேவை.

# எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்த முதலமைச்சர்

**பொன்வண்ணன்**
திரைக்கலைஞர்



கொரோனா பேரிடர் காலத்தில் இக்கட்டான சூழ்நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முன்னால் பல சவால்கள் இருந்த போதிலும்,

கடந்த காலங்களில் தமிழ்நாட்டை ஆட்சி செய்த முன்னால் ஆளுமைகள்.. மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள் பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் சாதனைகளைக் கடந்து தமிழகத்திற்கு சிறப்பான ஆட்சியை கொடுக்க வேண்டும் என்கிற மக்களின் எதிர்பார்ப்பு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்கு பெரிய சவாலாக இருந்தது.

ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே அவர் கையெழுத்திட்ட "மக்கள் திட்டங்களின்" மூலமாகவும்..

தான் நினைப்பதை செயல்படுத்த வேண்டுமானால், மக்களுக்கான ஆட்சியை வெற்றிகரமாக கொண்டு செல்ல வேண்டுமானால் அதற்கு முழுமுதற் காரணம் அதிகாரிகளும் அமைச்சர்களும்தான் என்பதை உணர்ந்து முதன்மை செயலாளர் தொடங்கி முதலமைச்சர் தனி செயலாளர்கள் வரை அனைத்து துறைகளிலும் நேர்மையான அதிகாரிகளை நியமித்ததின் மூலமாகவும் மக்களிடம் பேராதரவைப் பெற்றுவிட்டார்.

அனைத்து துறைகளிலும் தொலைநோக்குப் பார்வையுடன்,அடுத்த தலைமுறைக்கான சிந்தனையுடன், கல்வி, மருத்துவம், தொழில்துறை, சமூக நீதி என திராவிட அரசியலின் அடுத்த முகமாக....

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞரின் வரிசையில் அடுத்த அரசியல் தலைவராக தன்னைத் தானே செதுக்கிக்கொண்டிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்..!

மக்கள், விமர்சகர்கள்,ஊடகவியலாளர்கள் என அனைவரின் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் தந்துள்ள இந்த ஓராண்டு சாதனை தொடரட்டும்..!

முதலமைச்சருக்கும்.. நல்லாட்சிக்கு துணைபுரியும் அத்தனை பேருக்கும் என்னுடைய அன்பும் வாழ்த்துகளும்..!



# சோதனைகளை வென்ற ஆட்சி

பட்டிமன்றப் பேச்சாளர்
ராஜா

கடந்த ஓராண்டு காலத்தில் அனைத்து தரப்பு மக்களும் மனம் மகிழும் வண்ணம் பல சாதனைகளை செய்திருக்கிறது திமுக அரசு.

மகளிருக்கு நகர்ப்புற பேருந்துகளில் இலவச பயணம் என்பது என் பார்வையில் மிக முக்கியமான ஒரு அறிவிப்பு.

நிரந்தரமற்ற பணியாளர்களாக, அன்றாடக்கூலிகளாக, மிகக்குறைந்த ஊதியதாரர்களாக உழைத்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் சில நூறு ரூபாய்களை அவர்கள் சம்பாத்தியத்திலிருந்து மிச்சம் செய்து கொடுத்திருக்கும் சிறந்த திட்டம் அது.

அரசுப்பள்ளியில் படித்த மாணவிகள் பட்டப்படிப்புக்கு செல்லும்போது மாதம் 1000 ரூபாய் உதவித்தொகை என்பது உண்மையில் இந்த ஆட்சி செய்திருக்கும் சாதனைகளின் மகுடம் என்றே நான் நினைக்கிறேன்.

பல சோதனைகளைக் கடந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த திமுகவுக்கு, வந்த உடனே பற்பல சோதனைகள் காத்துக்கொண்டிருந்தன.

உலகையே உலுக்கிக் கொண்டிருந்த கொரோனா பெருந்தொற்று பிடி முதல் பெரும் சவால். அந்த சவால் தொடங்கி தன் முன்னால் இருந்த அத்தனை சவால்களையும் மிக நேர்த்தியாக வென்றது மட்டுமல்லாமல், மேலும் தன் நிர்வாகத்தால் பல சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கும் இந்த ஆட்சி போற்றுதலுக்குரியது.

# ஆலயச் சொத்து மீட்பும் மஞ்சப்பையும்



பட்டிமன்றப் பேச்சாளர்
**பாரதி பாஸ்கர்**

சமீபத்தில் திருவள்ளூர் மாவட்ட புத்தகக் கண்காட்சிக்கு சென்றிருந்தேன். அம்மாவட்டம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளாகிவிட்ட பிறகு, கால் நூற்றாண்டு காலத்தில் நடக்கும் முதல் புத்தகக் காட்சி அது.

மாவட்டம் தோறும் புத்தகக் காட்சிகளை நடத்த வேண்டும் என்ற திமுக அரசின் அரசாணை அங்கே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தது.

கலெக்டர் கண்காணிப்போடு நடந்த அக்காட்சியில் வழக்கத்துக்கு அதிகமான உற்சாகத்துடன் மக்கள் வந்து புத்தகங்களை வாங்கிச் செல்வதை என் கண்ணால் கண்டபோது அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன்.

ஒரு புத்தகக் காட்சி நடக்கும் போது வெறும் வியாபாரம் மட்டும் அங்கே நடப்பதில்லை. மாறாக, அறிவுப்பூர்வமான பண்பாட்டுச் செயல்பாடு நடக்கிறது. திமுக அரசினுடைய முயற்சிகளின் வெற்றிக்கு சாட்சி நான் கண்ட காட்சி.

மீண்டும் மஞ்சப்பை இயக்கம் என் மனம் கவர்ந்த மற்றொரு முக்கிய அறிவிப்பு.

‘சிவன் சொத்து, குல நாசம்’ என்பதை முழுமையாக நம்புபவள் நான்.

இன்று அத்தனை ஆலயங்களின் சொத்துகளையும் உடைமைகளையும் மீட்கும் மிகத்துரிதமான முயற்சியில் திமுக அரசு ஈடுபட்டிருக்கிறது.

ஒரு எழுத்தாளராய், ஒரு பேச்சாளராய் நான் மகிழ்வதற்கு இதற்கு மேல் என்ன வேண்டும்?



# குரலற்றவர்களின் குரலாக இருக்கிறார்

**செந்தில்வேல்**
ஊடகவியலாளர்

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்து ஓராண்டு ஆகிறது. முதலமைச்சராக பதவியேற்ற முதல் நாள் நிகழ்வில் இருந்தே தேர்ந்த அரசியல் நாகரீகத்தையும், மாண்பையும் வெளிப்படுத்தி தன் தேர்வு சரியானதே என்பதை மக்களுக்கு உணர்த்தினார் திரு.ஸ்டாலின்.

2016 தேர்தலில் ஜெயலலிதா அம்மையார் முதல்வராக பதவியேற்ற விழாவில் திரு.ஸ்டாலின் அவர்களுக்கு பின் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், 2021 இல் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பதவியேற்கும் போது அதிமுகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஓ.பி.எஸ்.க்கு தர வேண்டிய முக்கியத்துவத்தை தந்ததோடு ஆளுநர் உடனான தேநீர் விருந்தில் ஓ.பி.எஸ்.க்கும் இடம் கொடுத்து தனது அரசியல் நாகரீகத்தை எதிர்க்கட்சிகளுக்கு கற்றுத்தந்தார் திரு.ஸ்டாலின்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்ட போது சமூக நீதிக் கருத்தில் அவருக்கு இருக்கும் பிடிப்பு உறுதி செய்யப்பட்டது. பெண்களோடு சேர்த்து, திருநங்கைகளுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் நகரப்பேருந்தில் கட்டணமில்லா பயணம் உள்ளிட்டவற்றை அறிவித்த போது குரலற்றவர்களின் குரலாய் அவர் இருக்கிறார் என்பதை பார்க்க முடிந்தது.

வலிமையில்லாதவர்களாய் இருந்தாலும், நரிக்குறவர்களின் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்பட்ட போது, நேரில் சென்று உங்களோடு இருக்கிறேன் என்பதைச் சொன்னபோது, வாக்களிக்காதவர்களுக்கு மட்டுமல்ல, வாக்கு வலிமையே இல்லாதவர்களுக்கும் கூட நன்மை செய்யும் அரசாக இது இருக்க வேண்டும் என்ற அவரின் தீர்க்கமான பார்வை புரிந்தது.

சாதிய ரீதியில் ஒடுக்கப்படும் தலித் சமூகத்தில் இருந்து ஒருவர், அதிலும் பாலின ரீதியில் ஒடுக்கப்படும் பெண்ணாய் இருக்க வேண்டும். அதிலும், வாழ்விட ரீதியில் ஒடுக்கப்படும் வடசென்னையை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தியாவின் தொன்மையான மாநகராட்சியான சென்னை பெரு நகர மாநகராட்சிக்கான அவரின் மேயர் தேர்வு என்பது அதிகாரப் பரவல் குறித்த அவரின் விசாலமான பார்வையை உணர்த்தியது.

இப்படி அடுக்கிக் கொண்டே செல்லலாம். இப்போது. தமிழகத்தைத் தாண்டி இந்திய அரசியலில் அவர் தொடுத்திருக்கும் இந்த புதிய போரிலும் அவர் வெற்றி வாகை சூட வாழ்த்துகிறேன்.

# பேதங்களைக் கடந்து அனைவர்க்குமானவர்



**ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர் - இயக்குனர்

**தெ**ன்கோடி தமிழகத்தை இன்று தேசமே உற்று நோக்குகிறது எனில், ஒரே காரணம் மு.க.ஸ்டாலின் எனும் ஆறெழுத்து!

அது, வரலாறு காணாத வகையில் நாடாளுமன்றம் சட்டமன்றம் - உள்ளாட்சி எனும் மூவகைத் தேர்தலிலும் முடிசூடி நின்ற பேரெழுத்து! கூரெழுத்து!

"தன்னை வெல்வான்; தரணியை வெல்வான்" என பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞருக்கு அன்று சொன்னது போற்றுதலுக்குரிய இன்றைய முதல்வருக்கு நூற்றுக்கு நூறு பொருந்தி நிற்பதைக் காண முடிகிறது.

முற்றித் தெளிந்த ஞானிக்கே உரிய ஆழமான பொறுமையும் அகண்ட அவதானிப்பும் கொண்டு கட்சியையும் ஆட்சியையும் அவர் நடத்தும் பாங்கு பலருக்கு பாடமாகிறது.

பத்தாண்டுகளாய் பாதாளம் கண்டு விட்ட தமிழகத்தை, போர்க்கால நடவடிக்கையில் தூக்கி நிறுத்த விழையும் முதல்வரின் ஓட்டத்துக்கு ஈடு கொடுத்து உழைத்து, அவரிடம் நல்ல பெயர் வாங்கிவிட மாட்டோமா என ஒவ்வொரு துறையும் ஓயாது உழைப்பதைக் காண முடிகிறது. அதுவே தமிழக மக்களின் நம்பிக்கைக்கும், நிம்மதிக்கும் காரணமாகிறது.

குறிப்பாக கல்வித் துறையும், மருத்துவத் துறையும், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கவனம் பெறுகிறது. இல்லம் தேடிக் கல்வித் திட்டமும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டமும் வசந்தகால வரவுக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

தமிழகத்தின் தொழில்துறை வளர்ச்சிப் பாதையில் செல்வதை உலகம் கவனிக்கிறது. முதலீடுகள் தமிழ் மண்ணை நோக்கித் திரும்புகிறது. கொடுத்ததை வாங்கிவந்து அவல ஆட்சி செய்த காலம் மாறிவிட்டது.

எடுத்தது எங்கே? எமது பங்கெங்கே? எங்கள் மக்கள் நல்வாழ்வெங்கே என தட்டிக் கேட்கும் திமுக அரசாங்கத்தால் மாநில உரிமைகள் எழுச்சியோடு பாதுகாக்கப்படுகின்றது.

சாதி,மத, வர்க்க பேதங்கள் கடந்து அனைவருக்குமானவராக அரியணை காண்கிறார் வணங்குதற்குரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பொதுவுடைமை தந்தையான கார்ல் மார்க்ஸ் குறித்து மெய்யியலாளர் ஏங்கெல்ஸ் சொன்னார் "மார்க்ஸின் தத்துவத்திற்கு எதிர்ப்பாளர் இருக்கலாம். ஆனால், அவருக்கென்று எதிரி எவருமில்லை இங்கே."

மார்க்ஸின் பிம்பமாக வாழும் நமது முதலமைச்சர், தனது செயலூக்கம் கொண்ட அமைச்சரவை வழியே, சாதனைகள் பல படைத்து, திராவிட வரலாற்றை கௌரவப்படுத்துவார் என்பது நிச்சயம்.

காலை சூரியன் இயற்கையாய் எழும்தான். எனினும், கடமை கருதி கூரைக் சேவலும் கூவி வைப்பது போல, எளிய படைப்பாளன் நானும் தமிழின் உரிமை கொண்டு வணங்கி வாழ்த்தி நிறைகிறேன்!

வாழிய ஆறெழுத்தின் அரசாங்கம்!

வாழிய திராவிடப் பொன்னாடு!!

# அமைச்சரவையின்



# இலக்கு!





“நீர்மேலாண்மையை மையமாகக்கொண்டு செயல்படுகிறோம். விவசாயத்துக்காக மாநிலம் முழுவதும் ஆறுகள், ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கே சாத்தியமுள்ள இடங்களில் தடுப்பணைகள் மற்றும் கதவணைகளை கட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்”.

**திரு. துரைமுருகன் அவர்கள்**
**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்**



“சுத்தம், பசுமை, ஆரோக்கியச் சுற்றுச்சூழல், அடிப்படை வசதி, பொருளாதார வளர்ச்சி போன்றவற்றில் வெளிப்படைதன்மையுடன் செயலாற்றி அனைவருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவோம்”.

**திரு. கே.என்.நேரு அவர்கள்**
**மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்**



“ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் பணியிலும், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கியப் பங்காற்றி வருகின்றன”.

**திரு. இ.பெரியசாமி அவர்கள்**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்**



“உயர்கல்வி நிறுவனங்களை புதுமையான, சிறப்பு மற்றும் வளர்ச்சிக்கான மையங்களாக மாற்றுவோம். உலக அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு இணையான தரமான கல்வியை தமிழகத்தின் கிராமப்புற பின்னணியில் இருந்தும், ஒடுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்க அரசு முயற்சிக்கிறது.”

**திரு. க.பொன்முடி அவர்கள்**
**மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்**

“கிரேக்கர்களின் கட்டடக் கலைகள் தூய்மையான உதாரணம்; ரோமர்களின் கட்டடங்கள் அறிவியல் வளர்ச்சிக்கு சான்றாகும்; பிரெஞ்சுக்காரர்கள் கட்டடங்கள் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டு; தமிழர்களின் கட்டடங்கள் திராவிட நாகரிகத்தின் அடையாளம்.அத்தகைய கட்டடங்களை அமைப்போம்.சிறந்த சாலைகள் அமைப்பதே எங்கள் தலையாய வேலை.”

**திரு. எ.வ.வேலு அவர்கள்**
**மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்**





“தமிழ்நாடு எங்கும் பசுமை தழைத்தோங்க, ‘குடியானவன் வீட்டுக் கோழிமுட்டை அதிகாரி வீட்டு அம்மியாலும் உடையாத’ அளவிற்கு அவர்கள் வாழ்வு சமூகத்தில், பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும் என்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதுதான் வேளாண்மை நிதிநிலை அறிக்கை”.

**திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்**
**மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்**



"காலத்திற்கேற்ப மாறி வரும் மக்கள் நல அரசின் தேவைகளுக்கு இணங்க வருவாய்த்துறையும் பன்முக பொறுப்புகளை கொண்டுள்ள துறையாக மாறியுள்ளது. பேரிடர்களில் இருந்து காப்பதே பணி".

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள்**
**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்**



"பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தற்போது தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக விளங்கி வருகிறது. 2030-31 ஆம் நிதியாண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதை, ஒரு லட்சிய இலக்காக தமிழ்நாடு நிர்ணயித்துள்ளது."

**திரு. தங்கம் தென்னரசு அவர்கள்**
**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்**



"சட்டமானது சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பயன்பட வேண்டுமானால், அது சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மேம்படுத்திக் கொள்வதுடன் அதன் வேகத்துடன் இணைந்து செல்லவும் வேண்டும். அதற்கேற்ப இத்துறை முடுக்கிவிடப்பட்டுள்ளது".

**திரு. எஸ்.இரகுபதி அவர்கள்**
**மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்**



“தொழிற்சாலைகள், சுகாதாரம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, சுற்றுச்சூழல், கல்வி போன்ற துறைகளை ஒருங்கிணைத்து மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களை சுற்றி துணை நகரங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்”.

**திரு. சு.முத்துசாமி அவர்கள்**
**மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்**

“தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்க தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். அதற்காக, ஊரக வளர்ச்சித் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன”.

**திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்**





“குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய இயக்கிகளாக உள்ளன. குறைந்த முதலீட்டில் வாழ்வாதார மூலங்களை வழங்கி ஒட்டுமொத்த சமூகபொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் பங்கு வகிக்கின்றன”.

**திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்**
**மாண்புமிகு குறு, சிறு மன்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**



"அரசின் கொள்கைகளை விளக்கியும், அரசின் திட்டங்கள், விழிப்புணர்வுச் செய்திகள் ஆகியவற்றை முறையாக, விரைவாக கொண்டு சேர்க்கும் பணியைச் செவ்வனே செய்து வருகிறோம்".

**திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள்**
**மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்**



"பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், திருநங்கையர் போன்றவர்களின் சமூக – பொருளாதார பாதுகாப்பினை உறுதி செய்திட, தேவையான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து செயல்படுகிறோம்".

**திருமதி. பி.கீதா ஜீவன் அவர்கள்**
**மாண்புமிகு சமூக நலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர்**



"பயிர் வேளாண்மையை முழுமைப்படுத்த துணைபுரிவதுடன், பருவமழையின் மாறுபாடுகளால் பயிர் விவசாயம் தோல்வியுற்ற காலத்திலும் விவசாயிகளுக்கு தரவையும் பாதுகாப்பையும் கால்நடைகள் அளித்து வருகிறது".

**திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள்**
**மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**



"தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்துத் தந்த சமூக நீதிப் பாதையில் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு இவ்வரசு தொய்வின்றி பாடுபட்டுக் கொண்டிருக்கிறது".

**திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள்**
**மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

"இயற்கை வனங்களை பாதுகாத்து, வனங்களை நீடித்த நிலையான வகையில் மேலாண்மை செய்யவும், காடு உற்பத்தி மூலம் மாநிலத்தின் பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், தரம்குன்றிய காடுகளை மீளுருவாக்கம் செய்யவும் தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது".

**திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள்**
**மாண்புமிகு வனத்துறை அமைச்சர்**





"எவர் ஒருவரும் பசியுடன் இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்திட, அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்ட முறையை செயல்படுத்தி வருகிறோம்".

**திரு. அர.சக்கரபாணி அவர்கள்**
**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்**

“அனைத்து வகை மின் நுகர்வோர்களுக்கும் நிலையான, தரமான மற்றும் நியாயமான விலையில் மின்சாரத்தை வழங்கி வருகிறோம். எரிசக்தி தொலை நோக்கு திட்டங்களை இலட்சிய பார்வையுடன் உருவாக்கி வருகிறோம்”.

**திரு. வி.செந்தில் பாலாஜி அவர்கள்**
**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்**





“தமிழரின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் நவீனமும் கலந்த புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களை கொண்டு கைத்தறி நெசவாளர்களால் உருவாக்கப்பட்ட “தமிழ்த்தறி” என்ற புதிய ஆடைத் தொகுப்பு மாபெரும் வரவேற்பை பெற்றுள்ளது”.

**திரு. ஆர்.காந்தி அவர்கள்**
**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்**

“அரசு மருத்துவமனைகளில் சுகாதாரச் சேவைகளை பெற வரும் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருவது, அரசு மருத்துவமனைகள் வழங்கி வரும் சேவையில் பொதுமக்கள் அதிகம் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது”.

**திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள்**
**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**





“மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிக வரித்துறை விளங்கி வருகிறது. வெளிப்படையான மற்றும் விரிவான வரி நிர்வாகத்தை செயல்படுத்துவதில் வணிகவரித்துறை உறுதியாக உள்ளது”.

**திரு. பி.மூர்த்தி அவர்கள்**
**மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்**

“இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில் அதிகப்படியான வழித்தடப் பயன்பாட்டில் பேருந்துகளை இயக்கி வருகின்றன”.

**திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள்**
**மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்**





“பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருக்கோயில்களையும் அவற்றின் சொத்துகளை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் வெளிப்படைத் தன்மையுடன் தீவிர முனைப்புடன் செயல்படுகிறோம்”.

**திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள்**
**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்**

“தற்போது, நமது பொருளாதாரம் மீண்டும் எழுச்சி பெற்று வர, சமூக நலத்திட்டங்களில் எவ்விதக் குறையுமின்றி, நமது முன்னுரிமைகளை மறுபரிசீலித்து சமூகக் கட்டமைப்பு, வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றின் மீது அதிக கவனம் செலுத்தப்படும்”.

**முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள்**
**மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்**





“பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற பாலினை விரயம் செய்யாமல், பாதுகாத்து பதப்படுத்தி பெருநகர மக்களின் பால் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் வழங்குகின்ற பாலுக்கு நிரந்தர சந்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது”.

**திரு. சா.மு.நாசர் அவர்கள்**
**மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்**

“சிறுபான்மையினரின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதன் மூலமாக அவர்கள், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். அதனை இன்னும் மேம்படுத்திட தொடர்ந்து செயலாற்றி வருகிறோம்”.

**திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள்**
**மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்**





"அரசுப் பள்ளிகளில் உயர்தரமான உட்கட்டமைப்பு வசதிகளோடு அனைத்து குழந்தைகளுக்கும் எளிதில் கிடைக்கவல்ல தரமான கல்வியை வழங்கி, மாணவர்களை முழுமையான வளர்ச்சியை நோக்கி அழைத்துச் செல்வதே தமிழக அரசின் முதன்மையான இலக்கு".

**திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள்**
**மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்**

"தமிழ்நாட்டை காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளில் இருந்து மீட்டு, ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் இலக்குடன் செயல்படுகிறோம்".

**திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள்**
**மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்**





"தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்து, மாநிலத்தில் தொழில் நல்லிணக்கத்தையும், அமைதியினையும் உறுதி செய்கிறது தொழிலாளர் நலத்துறை".

**திரு. சி.வி.கணேசன் அவர்கள்**
**மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்**

‘‘தமிழகத்தின் வளங்களை மேம்படுத்தி தகவல் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முதலீட்டினைத் தமிழகத்திற்கு ஈர்க்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இது, நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடையவும் உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்’’.

**திரு த.மனோ தங்கராஜ் அவர்கள்**
**மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**





‘‘சுற்றுலா, மனிதர்களை இணக்கத்துடன் வாழ வைக்கிறது. மனித நேயத்தை வளர்க்கிறது. அன்பையும் பண்பையும் விளைவிக்கிறது. கற்றுக்கொள்ளத் தூண்டுகிறது. வேலைவாய்ப்பை அள்ளித் தருகிறது. அனைத்துத் தரப்பு மக்களையும் சுற்றுலா ஒற்றை இழையில் இணைக்கிறது’’.

**டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள்**
**மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்**

‘‘ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக – பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறோம்’’.

**திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள்**
**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**




Happy Birthday
TO
India No 1 CM

# திராவிட மாடல் எனும் அரசியல் மாடல்



தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து 'திராவிட மாடல்' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தி வருவதைக் காண்கிறோம். அது ஒரு சொல்லாட்சி மட்டுமல்ல!

அது ஒரு பொருளாதார வளர்ச்சி குறித்த மாடலா? அல்லது சமூக மாற்றம் குறித்த மாடலா? என்றால் எனது புரிதலில் 'திராவிட மாடல்' என முதலமைச்சர் குறிப்பிடுவது ஓர் அரசியல் மாடலையே!

ஏனென்றால், இவ்வினாவிற்கு விடைகாண வரலாற்றை சிறிது பின்னோக்கி காண்பது தேவை. நாடு அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறும் தருவாயில் நமக்கான அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு நாட்டிற்கு அர்ப்பணிக்கும் நாளன்று அச்சட்ட வரைவுக் குழுவின் தலைவர் மாமேதை அம்பேத்கர் அவர்கள் அவையில் ஆற்றிய உரை மிகமிக முக்கியமானது.

இந்த நாட்டின் நிலையை துல்லியமாக படம் பிடித்த உரை அது.

"இந்திய நாட்டில் படிநிலை சமூகம் நிலவியது. மேல் படிநிலையில் இருக்கும் சாதியை கீழ்ப் படிநிலையிலிருக்கும் சாதி கீழானதாகக் கருதப்பட்டது. உயர்ந்த படியில் இருப்பதாகக் கருதப்பட்டோர், அவர்கள் அந்த சாதியில் பிறந்ததாலேயே அங்கிருப்பதாக அந்தத் தர்மம் கூறியது.

இதனையொட்டியே மிகப் பெரும்பான்மையான அளவிற்கு பொருளாதார ஏற்றத் தாழ்வும் திகழ்ந்தன. இவை இரண்டின் விளைவாக சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றிற்கும் நமது சமூக அமைப்பிற்கும் மாபெரும் முரண் நிலவியது.

சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் என்பது நமது அரசியல் பாதைக்கு



பேராசிரியர்
**ஜெ.ஜெயரஞ்சன்**
மாநில கொள்கை வழிகாட்டுக் குழுத் துணைத் தலைவர்

நேரெதிரானவை. இம்முரணை அரசியல் சமத்துவம் பெற்ற நாம் (ஒருவருக்கொருவருக்கு சாதி, மதம், இனம், பணம் என்ற வேறுபாடின்றி இந்திய குடிமகன் அனைவருக்கும் வழங்கப்பட்ட வாக்குரிமையே அரசியல் சமத்துவத்தை அளித்தது) மற்ற சமத்துவத்தை விரைவில் உருவாக்கி நமது ஜனநாயகத்தைக் காப்பற்றிக் கொள்ள வேண்டும்'' என்று அவ்வுரையில் மாமேதை அம்பேத்கர் அவர்கள் வற்புறுத்தினார்.

இச்சமத்துவங்கள் வேண்டுமென்றும் இதனை ஏற்காத அமைப்புகள் மாற்றப்பட வேண்டுமெனவும் இம்மண்ணில் வரலாற்றின் பல கால கட்டங்களில் பல இயக்கங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. அவ்வாறு தோன்றி வளர்ந்த ஒரு இயக்கமே தமிழ்நாட்டில் திராவிட இயக்கம்.

திராவிட இயக்கம் சமூக மாற்றத்திற்கான அரசியல் இயக்கம். அதிலிருந்து தோன்றிய தி.மு.க. மாற்றத்திற்கான அரசியலை முனைப்பாக முன்னெடுத்துக் கொண்டே இருக்கிறது என்பதை அக்கட்சியை உற்று நோக்குவோர் அனைவருக்கும் தெரியும்.

வாய்ப்புகள் எந்த வகையில் மறுக்கப்பட்டிருந்தாலும் அம்மக்களுக்கு அந்தவாய்ப்பை உருவாக்கித் தருவது கழகத்தின் தலையாய அரசியல் நடைமுறை. இத்தகைய வாய்ப்புகள் மறுக்கப்படும்போது அதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதும் தி.மு.க.வே

நிலம், குடியிருப்பு, கல்வி, உணவு, சுகாதாரம், மொழி, கலை என்பவற்றை உள்ளடக்கி இவைகளில் அனைவரையும் பங்குபெற வைத்து இதன் வழியாக சமூக மாற்றத்தை உருவாக்கி அந்த மாற்றத்தின் விளைவாக பொருளாதாரத்தை உயர்த்திக் காட்டியுள்ள இயக்கம் தி.மு.க.

தமிழ்நாட்டின் 50 ஆண்டுகால வளர்ச்சியை எண்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியாது. சமுதாய மாற்றங்கள் வழியாக இந்த வளர்ச்சி எப்படி ஜனநாயகப் படுத்தப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு இந்த இயக்கத்தின் இயங்கு தத்துவத்தையும் புரிந்து கொண்டால்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அரசியலாக்கிவரும் திராவிட மாடல் என்பதன் பொருள் புரியும்.

பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே இது சாத்தியமில்லை என்பதை உணர்த்தி நிற்பவை தொழில்துறையில் நம்மோடு போட்டியிடும் குஜராத் மாநிலமும், மராட்டியமும் ஆகும்.

சமூக வளர்ச்சியனால் மட்டுமே இயலாது என்பதை உணர்த்தி நிற்பது கேரள மாடல். சமூக மாற்றத்தின் வழியே ஜனநாயகப்படுத்தப்பட்ட வளர்ச்சியே திராவிட மாடல். இதனைப் பலரும் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மாடல் என்கிறார்கள்.

> **“சமூக மாற்றத்தின் வழியே ஜனநாயகப் படுத்தப்பட்ட வளர்ச்சியே திராவிட மாடல்”**

கல்வியின் வாயிலாகவும், இடஒதுக்கீடு போன்ற முன்னெடுப்புகளின் வாயிலாகவும் வளர்ச்சியின் முகவர்கள் ஆகிவிட்ட அடுத்தடுத்த தலைமுறையினர் விண்முட்ட பறக்கத் துவங்கினால் சிறகுகளை முறிக்கக் கிளம்புகிறது சனாதனப் படை.

அதனை எதிர்கொள்ளும் வல்லமையும் அறிவும் அரசியல் அறமும் திமுகவிடம் மட்டுமே உள்ளது. இதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் 'திராவிட மாடல்' என்கிறார்.

மாமேதை அம்பேத்கரின் கனவான பொருளாதார சமூக விடுதலையை விழையும் அனைவருக்குமான மாடல்தான் திராவிட மாடல். இதன் வழியாக மட்டுமே இந்திய ஜனநாயகத்தை காக்க முடியும்.

திராவிடப் பேராசான் தந்தை பெரியாரின் கருத்தாக்கங்களின் செயல்வடிவமே திராவிட மாடல்.

# ஆளுமைத் திறத்தாலும் அணுகுமுறையாலும் இது நமக்கான அரசு



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**
பொதுச்செயலாளர்,
திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை

“இது வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்குமான அரசு” என்பதே பதவியேற்றவுடன் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மொழிந்த நேயமும், உறுதியும் கொண்ட சொற்கள்!

இது மிக நல்ல அணுகுமுறை என்பதை எல்லோரும் ஏற்பர். எனினும், நடைமுறையில் இதனை உண்மையாக்குவது மிகக் கடினமாகும். அப்படி உண்மையாக்கப்பட்டிருக்குமானால், இதனை நமக்கான அரசு என்று அனைவரும் கொண்டாடுவர்! இன்றையத் தமிழ்நாடு அரசை மக்கள் கொண்டாடுவதற்கு இதுவே காரணம்.

மேலே சொல்லப்பட்ட கூற்று, மூன்று வகைகளில் உண்மையாகியுள்ளது.

ஒன்று, நன்மை தரும் திட்டங்களை அறிவிப்பதில், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் எந்த பேதமும் வெளிப்படவில்லை. இரண்டு, சட்டமன்றத்தில் மட்டுமின்றி, பொது வெளிகளிலும் கூட நாகரிகமான விமர்சனங்கள் பொறுமையுடன் எதிர்கொள்ளப் படுகின்றன. மூன்று, தவறுகள் செய்பவர்கள் ஆளும் கட்சியினராகவே இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப் படுகின்றனர்.

இன்றைய அரசு பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திற்குள், தமிழ்நாட்டில் சிறியதும், பெரியதுமாக 300க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் 5108 தொழில் நிறுவனங்கள் பங்கேற்று, அந்த இடத்திலேயே நேர்காணலுக்கு வந்தவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 517 மாற்றுத்திறனாளிகள் உள்பட, இதுவரையில் நாற்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இந்த வேலைவாய்ப்பு முகாம்களில், எந்த விதமான கட்சி பேதமும், பரிந்துரைகளும் இல்லை என்பதை எதிர்க்கட்சியினரே அறிவார்கள் இது ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே! இப்படி ஆக்கப்பூர்வமான பல திட்டங்கள், அனைவருக்குமான திட்டங்களாய் நிறைவேறியுள்ளன.

எவ்வளவு நன்மைகள் செய்தாலும், எதிர்க்கட்சியினர் குறை சொல்வது இயற்கைதான். ஆனால் சற்றும் உண்மையில்லாத, நியாயம் இல்லாத குற்றச்சாற்றுகளைச் சொன்ன போதும், அவற்றை நிதானமாக உள்வாங்கி, அமைதியாக விடை சொல்லும் ஆளும் கட்சியின் பண்பினைச் சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியிலும் நம்மால் பார்க்க முடிகிறது.

நீட் தேர்வைத் தமிழ்நாட்டில் விலக்கிக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் சென்ற ஆட்சியிலேயே நிறைவேற்றப்பட்டது. இன்றைய ஆட்சியிலும் அதே தீர்மானம் இரண்டு முறை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், ஆளுநர் அதனைக் குடியரசுத் தலைவர் பார்வைக்கு அனுப்பவில்லை. அப்போதும் மிக நிதானமாக, நேரில் சென்று பார்த்தும், கடிதம் எழுதியும் பயனற்றுப் போனபிறகு, ஆளுநர் கொடுத்த தேனீர் விருந்தை அரசு புறக்கணித்தது.

செல்வி ஜெ.ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, ஆளுநரோடு நடந்த மோதல்கள் எவ்வளவு கடுமையானவை என்பதையும்,

எப்படித் தரம் தாழ்ந்த சொற்களாக இருந்தன என்பதையும் நாம் அறிவோம்! இன்றைய அரசின் அணுகுமுறை எவ்வளவு நாகரிகமானது என்பதை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, தம் கட்சியினர் தவறு செய்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கும் அரசாக இது உள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திமுக பெண் உறுப்பினரின் கணவர் ஒருவர், சட்டத்தை மீறி அதிகாரம் செய்யும் காட்சி காணொளியில் வந்த மறுநாளே, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே இந்த அரசு நம் அரசு! ஆளுமைத் திறத்தாலும், அணுகுமுறையாலும், இது நமக்கான அரசு!!



# சிறுபான்மையினர் நலம் காக்கும் நம் முதல்வர்




ஒரு நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை இன மக்கள் பாதுகாப்பாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன், பெரும்பான்மை மக்களுடன் இணக்கமாகவும் நல்ல உறவுடன் வாழ்கின்றனர் என்றால் அங்கு ஜனநாயகம் உயிர்ப்புள்ள, செழிப்பான ஜனநாயகமாகச் செயல்படுகிறது என்று பொருள்.

தேர்தல்கள் மட்டுமே மக்களாட்சியாகிவிட முடியாது. ஆட்சியாளர்களின் ஜனநாயக உணர்வும், ஜனநாயக நிறுவனங்களின் சிறப்பான செயல்பாடுகள் மட்டுமே தரமான ஜனநாயகத்தைத் தரமுடியும்.

அந்த அடிப்படையில் இன்று தமிழகத்தில் நமது முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடக்கின்ற நல்லாட்சியில், சிறுபான்மையினர் பாதுகாப்பாக பத்திரமாக இருப்பதுடன் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வாழ்கின்றனர் என்பது உண்மை.

கடந்த சில ஆண்டுகளாக சிறுபான்மை மக்கள் குறிப்பாக மதச்சிறுபான்மையினர் அச்சத்தோடு வாழக்கூடிய சூழ்நிலை இருந்தது. அன்றிருந்த அரசு அவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் வலதுசாரி சக்திகள் எவ்வித தயக்கமும் கூச்சமும் இன்றி சிறுபான்மை மக்களை அச்சுறுத்தி வந்தனர்



**பீட்டர் அல்போன்ஸ்**
**தலைவர்,**
**தமிழ்நாடு**
**சிறுபான்மையினர்**
**நல ஆணையம்**

புதிய அரசுபொறுப்பேற்றுக் கொண்டதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்தகைய வகுப்புவாத நடவடிக்கைகளைக் கடுமையாக கண்டித்ததோடு மட்டுமல்லாமல் அத்தகையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியருக்கும் காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்ட காரணத்தால் மதவெறி அரசியல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் திருத்தியமைக்கப்பட்டு, ஒரு முழுநேர IAS அதிகாரி செயலராக பணியமர்த்தப்பட்டு ஆணையம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மாவட்டந்தோறும், ஆணையம் சுற்றுப்பயணம் செய்து சிறுபான்மை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை நேரில் கேட்டு அறிந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து பேசி பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை கண்டு வருகின்றது.

பத்து மாவட்டங்களில் நடந்த இந்த ஆய்வுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். கடந்த நான்காண்டுகளாக செயல்படாமல் இருந்த சிறுபான்மை மக்களுக்கான சிறப்புதிட்டங்கள் இப்போது புதிய வேகத்துடன் செயல்படுத்தப்படுகின்றன.

இஸ்லாமிய மகளிர் உதவும் சங்கங்கள் மற்றும் கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு மாநிலஅரசின் இணைமானியங்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த சூழ்நிலையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் பழைய நிலுவைத்தொகைகளை கோடிக்கணக்கில் வழங்கியதோடு மட்டுமல்லாமல், இதுவரை மாவட்டத்திற்கு ஒரு சங்கம் என வரையறுக்கப்பட்டு இருந்ததை மாற்றி மாவட்டங்கள் தோறும் கூடுதல் சங்கங்களை அமைத்து கூடுதல் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

> **சிறுபான்மையினர் ஆணையத்தில் மதச் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பது போல மொழிச் சிறுபான்மையினரும் இடம்பெற வேண்டும்**

மாவட்டந்தோறும் ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலஅலுவலர் இருப்பது போல சிறுபான்மை மக்களுக்கும் மாவட்ட நல அலுவலர் வேண்டும் என்ற ஆணையத்தின் கோரிக்கையினை தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஐந்து மாவட்டங்களுக்கு ரூ.2.5 கோடி செலவினத்தில் சிறுபான்மை நலஅலுவலர்களை நியமிக்க உத்தரவிட்டுள்ளார்.

வரக்கூடிய ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து மாவட்டங்களுக்கு இத்தகைய அலுவலர்கள் நியமிக்கப்படுவர். இத்தகைய தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவதால் மாவட்ட அளவில் சிறுபான்மையினர் சிறப்புதிட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படும். தேவாலய பணியாளர்களுக்கான நலவாரியம் அமைப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதற்கான அடிப்படைப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சிறுபான்மையினர் ஆணையத்தில் மதச் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பது போல மொழிச் சிறுபான்மையினரும் இடம் பெறவேண்டும் என்ற ஆணையத்தின் கோரிக்கையினை ஏற்று அவர்களுக்கும் நான்கு உறுப்பினர்களும் ஒரு துணைத் தலைவரும் நியமனம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புசெய்து அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை சான்றிதழ் வழங்க ஒரு நடைமுறையினை செயல்படுத்தித்தர வேண்டும் என்ற ஆணையத்தின் வேண்டுகோளை விரைவில் நிறைவேற்றித் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

புராதன தேவாலயங்களை பழுதுபார்த்து புதுப்பிக்க நடப்பு



நிதி ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.12 கோடி வழங்கி உள்ளார். உலமாக்கள் நலவாரியம் சிறப்பாக செயல்பட்டு, உலமாக்களுக்கான அடையாள அட்டைகள் தாமதமின்றி வழங்கப்படுகின்றன.

ஒன்றிய அரசால் வழங்கப்படும் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை போதுமானதாக இல்லை என்ற செய்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது பற்றாக்குறையினால் விடுபட்டுப் போன அனைத்து மாணவர்களுக்கும் தமிழக அரசே கல்வி உதவித் தொகை வழங்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள "தலை நிமிரும் தமிழகம்" என்ற அறை கூவலை கல்லூரி மாணவர்கள் மத்தியில் எடுத்துச்செல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியுடன் தமிழ்நாடு சிறுபான்மை ஆணையம், அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியினை நடத்தி வருகின்றது.

தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் எழுச்சியினை ஏற்படுத்தும் முதல்வரின் அறைகூவலுக்கு கல்லூரி மாணவர்களை அழைத்து வரும் இப்பேச்சுப் போட்டிகளில் இருபால் மாணவர்களும் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டு நமது முதல்வரின் கரங்களால் பரிசுகள் வாங்க காத்திருக்கின்றனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சிறுபான்மை மக்கள் மீது கொண்டிருந்த அக்கறையும், கரிசனமும் சிறிதும் குறையாமல் சிறுபான்மை மக்களை தாயுள்ளத் தோடு கவனித்துக்கொள்ளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழக சிறுபான்மை மக்கள் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளனர்.


தீண்டாமை ஒழிப்பு

## முதல்வரின் பெயரை

# வரலாறு எழுந்து நின்று எழுதும்




கட்டுரையைத் தொடங்கு முன்னே காதில் ஒரு ரீங்காரம். இன்றைய தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை நினைத்தாலே 'பல்லாற்றானும் அவரோடொத்த இராஜராஜ சோழன்' கண் முன்னே தவிர்க்க முடியாமல் வந்து நின்றுவிடுகின்றான்.

இராஜராஜன் தஞ்சை பெரிய கோயில் கட்டி குடநன்னீராட்டு நடத்திய நாள் இரவில் ஒரு கனவு; இறைவன் முன் நிற்கின்றான்; 'இறைவா! மனநிறைவு தானே!' என்று கேட்கின்றான். இறைவன், 'மிக மிக மனநிறைவு; அதிலும் கிழவி நிழல் சுகம்!' என்கிறான். 'கிழவி நிழலா? நானல்லவா கோயில் கட்டினேன்; நான் கிழவி இல்லையே' என்று சிந்திக்கிறான். பிறகு விசாரித்ததில் உண்மை புலனாகிறது.

கோயில் கட்டுமானம் நடைபெறும் போது ஆண்டுக் கணக்கில் பணியாளர்கள் அனைவருக்கும் கைம்மாறு கருதாது மோர் கொடுத்து தாகம் தணித்தாளாம் ஒரு கிழவி. பணி முடிகிற போது பணியாளர்கள் கிழவிக்கு நன்றி சொன்னார்கள். 'பாட்டி! பதிலுக்கு என்ன கைம்மாறு செய்வது?' என்று கேட்டார்கள். கிழவி சொன்னாள்: 'இந்தக் கோயில் கட்டுமானத்தில் என் பங்காக எதிரில் உள்ள பாறையை வெட்டி எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!' என்றாள். சிந்தித்த பணியாளர்கள் அந்தப் பாறையை வெட்டி கோயிலின் உச்சி விமானம் ஆக்கிப் பதித்துவிட்டார்கள். அதன் கீழே இருப்பதால் இறைவன் கிழவி நிழல் சுகம் என்றானாம்.

இன்று இறைவன் யார் கனவிலேனும் வந்தால், 'தளபதியின் நிழல் தனிச்சுகம்!' என்பான். காரணம், ஒன்றா, இரண்டா? ஆயிரம் கோயில்களின் குடநீராட்டுக்கு ரூ.100



முதுமுனைவர்
**மு.பெ.சத்தியவேல் முருகனார்**
உறுப்பினர் - அறநிலையத்துறை உயர்நிலை ஆலோசனைக்குழு.

கோடி ஒதுக்கிப் பணிகளை இவர் மேற்கொண்டால் அப்படிச் சொல்ல இறைவனுக்குக் கசக்குமா என்ன? இதில் எந்தவித மிகையுமில்லை; புனைவின் புகையுமில்லை.

இராஜராஜனின் எல்லாச் செயலிலும் அறிவு மிளிரும். அவன் கட்டிய கோயிலின் இலிங்கம் 12 அடி. – இது தமிழின் பன்னிரு உயிரெழுத்துக்கள்; கருவறை கோபுர உயரம் 216 அடி. – இது உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை; கோபுரத்தின் நிலைகள் 13. – இது எல்லை இல்லா உச்சரிப்பிற்கு இடம் கொடுக்கும் 13வது ஆய்த எழுத்து; கருவறைக்கும் நந்திக்கும் உள்ள தூரம் 247 அடி. – இது உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய், எழுத்துக்களின் கூட்டெண்ணிக்கை. ஆக அவன் கட்டிய கோயிலே தமிழ் எழுத்துக்களால் கட்டப்பட்ட கோயில்; அங்கே தமிழே முழங்க வேண்டும் என்று 40 ஓதுவார்களை நியமித்தான்.

அந்த ஒரு கோயில் மட்டுமல்ல; தமிழ்நாட்டுக் கோயில்கள் அனைத்திலுமே அருந்தமிழே முழங்க வேண்டும் என்று அன்னைத்தமிழில் அர்ச்சனை என்பதை நடைமுறைப்படுத்தியவர் இன்றைய முதல்வர். அத்துடன் அனைத்து வழிபாடுகளிலும் கூட அன்னைத் தமிழே ஆர்ப்பரிக்க வேண்டும் என்று தமிழ் அர்ச்சகர்களை பணிக்கு அமர்த்தி பணி ஆணை வழங்கியவர் இவரே!

இராஜராஜன் அவையில் ஐம்பெரும் குழுவும் எண்பேராயமும் சூழ இருந்து ஆழ உணர்ந்து ஆலோசனைகள் வழங்கினர் என்பர்; அதே போன்று இந்து சமய அறநிலையத்துறை செவ்வியல் நடையில் சிறப்புற வளர உயர்நிலை ஆலோசனைக்குழு அமைக்கும் போது அதில் அலுவல் சாரா உறுப்பினர்கள் 13 பேர் – ஓ! ஐம்பெரும் குழுவும் எண்பேராயமுமாக அந்த 13 பேரா இவர்கள் எனப் புரிந்து புன்முறுவல் செய்கிறோம்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து தேர்வதில் இவர் இராஜராஜனுக்கு நிகர். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு தான் இன்றைய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு பி.கே.சேகர்பாபு அவர்கள்.

இவரை நினைக்கும் போது சங்க காலத்து மன்னன் ஒருவன் நினைவில் வந்து நேர் நிற்கின்றான். முதற் கடல்கோளில் குமரிக்கண்டம் முழுகிட அவ்வொளி நாட்டில் வாழ்ந்த அருந்தமிழர்கள் வடக்கே பெயர அவர்கள் வாழிடத்திற்காக நிலங்களைப் பண்படுத்தி வளம்படத் தந்தவன் ஒரு பாண்டியன் என்று தமிழ்ச் சங்கங்கள் வரலாறு கூறும் இறையனார் அகப்பொருள் இயம்புகின்றது. அவன் மக்களுக்கு நிலத்தை மீட்டுத் தந்ததால் அவன் பெயர் நிலந்தரு திருவிற் பாண்டியன்.

அது போல முடக்கி, மடக்கி, முழுங்கி ஏப்பம் விட்டவர்களிடமிருந்தெல்லாம் பல கோடி மதிப்புறு கோயில் நிலங்களை இறைவனுக்கே மீட்டுத் தந்தவர் இவர். இவர் தான் இக்கால நிலந்தரு திருவிற்பாண்டியன். இவர் பெயரை ஆர்வமுடன் தாராளமாக ஆலய நிலந்தரும் அருமைப் பாண்டியன் என்று அழைக்கலாம். ஒரு சோழ முதல்வருக்கு ஒரு பாண்டிய அமைச்சர்!

இவ்வாண்டொன்றில் நிகழ்ந்தவை, நிகழ இருப்பவை ஆகிய பணிகளின் வளர்ச்சியும், பணிப் பெருமைகளும் பட்டியலின் கட்டியலில் அடங்காதவை எனினும் ஒரு சிலவற்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்:

> **தமிழ்நாட்டுக் கோயில்கள் அனைத்திலுமே அருந்தமிழே முழங்க வேண்டும் என்று அன்னைத்தமிழில் அர்ச்சனை என்பதை நடைமுறைப் படுத்தியவர் இன்றைய முதல்வர்**

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின் கீழ் 58 தமிழ் அர்ச்சகர்கள் நியமனம்.

725 திருக்கோயில்களுக்குத் திருப்பணி ஆற்றிட அனுமதி.

கோயில் தோறும் அன்னைத் தமிழில் அர்ச்சனை.

ஒரு கால பூசைக்குரிய நிதியை 1 லட்சத்தில் இருந்து 2 லட்சம் ஆக்கியது; அர்ச்சகர்க்கு ஊக்கத் தொகை ரூ.1000.




ரூ.1689 கோடி மதிப்புள்ள திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு.

திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள்.

100 கோயில்களில் திருத்தேர், திருக்குளத் திருப்பணி.

(3.6.2021) கலைஞர் பிறந்த நாளிலிருந்து தலங்கள் தோறும் தலமரக்கன்று நடும் திட்டம்.

10 கல்லூரிகள் தொடங்கும் திட்டத்தில் 4 கல்லூரிகளில் ஏற்கெனவே 500 மாணவர்கள் பயன் பெற்று வருதல்.

கோயில் தோறும் அன்னதானத் திட்டம்.

முடிக்கும் முன் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ‘‘சரித்திரம் பல பேரரசர்களை அமர்ந்து குறித்துக் கொண்டது; ஆனால், இராஜராஜனைக் குறிக்கும் போது மட்டும் எழுந்து நின்று வணங்கி குறித்துக் கொண்டது’’ என்று ஒரு மேனாட்டு வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

ஒட்டுப் போடாதவர்களுக்கும் சேர்த்தே நான் ஒட்டு மொத்த முதல்வர் என்று பொறுப்போடு பேசிய தமிழக முதல்வரை வரலாறு குறிக்கும் போதும் எழுந்து நின்றே எழுதும் என்பது திண்ணம். அவரது மேலாண்மையில் இந்து சமய அறநிலையத்துறை கோயில்கள் அனைத்தும் பல்லாற்றானும் வளர்ந்தெழுந்து வானோங்க வாழ்த்துவோமாக!


அண்ணாதுரை
15-9-1909

# திராவிட மாடலுக்கு வலிமை சேர்ப்போம்




**நோ**பல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், ஒரு கதையை கூறினார். அது சமூக நீதித் தொடர்பானது. "ஒரு புல்லாங்குழல் தரையில் கிடக்கிறது, அதற்கு மூன்று சிறுவர்கள் உரிமை கோருகிறார்கள். ஒரு குழந்தை, இந்தப் புல்லாங்குழலை எனக்கு மட்டுமே வாசிக்கத் தெரியும், எனக்குத் தருவது தான் சரி என்று கேட்கிறது. மற்றொரு குழந்தை, என்னிடம் விளையாடுவதற்கு எந்தப் பொருளும் கிடையாது. வாங்கித் தரும் நிலையில் எனது பெற்றோர்களும் இல்லை. எனக்குத் தாருங்கள் என்று கேட்கிறது. மூன்றாவது குழந்தை, இந்தப் புல்லாங்குழலை நானே எனது உழைப்பில் உருவாக்கி தவற விட்டுவிட்டேன், எனக்குத் தான் தர வேண்டும் என்று கேட்கிறது. இந்த மூன்று குழந்தைகளும் தங்களுக்கான நீதியை பேசுகின்றன. மூன்றிலும்



விடுதலை
**இராஜேந்திரன்**
பெரியாரிய செயற்பாட்டாளர்

நியாயம் இருக்கிறது. ஆனால், இதை யாருக்கு வழங்குவது என்பதை எப்படி முடிவெடுப்பது''? என்ற கேள்வியோடு அமர்த்தியா சென் முடித்துக் கொள்கிறார். திராவிடர் இயக்கம் இதை எப்படித் தீர்மானிக்கும்? மூன்று குழந்தைகளின் சமூகப் பின்னணியை ஆராயும், காலம் காலமாக புல்லாங்குழலை வாசிக்கத் தெரிந்த குழந்தையை விட அதை வாசிக்கத் தடை போட்டிருந்த சமூகப் பின்னணியில் எந்த குழந்தை வந்தது? அந்தக் குழந்தைக்கே முன்னுரிமை என்பதே திராவிடர் இயக்கத்தின் பார்வையாக இருக்கும்.

நீதி மறுக்கப்பட்ட சமூகங்கள், உலகம் முழுவதும் இருக்கின்றன. ஆனால், பிறப்பின் அடிப்படையில் ஜாதிய ஏற்றத்தாழ்வு கட்டமைப்போடு, நீதியை வழங்க மறுத்த சமூகம் இது. இதை எதிர்த்துப் பிறந்தது தான் "திராவிடர் இயக்கம்''.

நீதிக் கட்சி தனது ஆட்சிக் காலத்தில், வகுப்புவாரி பிரதிநிதித்துவம், பெண்களுக்கு ஓட்டுரிமை, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்று தனது பயணத்தைத் தொடங்கியது. ஆனால், இந்தத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளும் வலிமை, பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு இருந்தால் மட்டுமே அதன் பயன்களை அவர்களால் எட்டிப்பிடிக்க முடியும், என்று சமூகநீதிப் பார்வை அடுத்தக் கட்டம் நோக்கி நகர்ந்தது.

பகல் உணவு, சத்துணவு, இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவச பாடநூல், படிப்பு உதவித் தொகை என்று விளிம்பு நிலை சமூகத்தை வலிமைப்படுத்தும் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. வகுப்புவாரி பிரதிநிதித்துவம், நீதிமன்றத்தால் முடக்கப்பட்டபோது, வீதிமன்றத்தில் போராடி, முதன் முதலாகச் சட்டத்தை திருத்த வைத்தது பெரியாரும், அண்ணாவும். இன்று அனைத்து மாநிலங்களும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பெறும் வாய்ப்புக் கதவுகளை திறந்து விட்டது திராவிடர் இயக்கம்.

நாடாளுமன்றத்தில் சட்டம் வருவதற்கு முன்பே, தமிழ்நாட்டில் பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர். இட ஒதுக்கீடுகளை மேலும் ஜனநாயகப்படுத்த, உள் ஒதுக்கீடுகளைக் கொண்டு வந்ததும் திராவிடர் இயக்கம் தான். தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் முதலமைச்சரான பிறகு, சமூகநீதியில் முப்பெரும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டது தான் திராவிட மாடல். இது பண்டைக்கால மன்னராட்சியின் பழைமைவாதக் கோட்பாடு அல்ல. சமகால மானுட விழுமியங்களை உள்ளடக்கிய நவீனத்துவ சிந்தனை. மருத்துவக் கல்லூரியில் அகில இந்திய கோட்டாவில் 27% இட ஒதுக்கீடு தொடர்பான வழக்கில் அதை நியாயப்படுத்தி உச்சிநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். சமூக நீதிக்கு நவீன சொல்லாடல்களை அத்தீர்ப்பு வழங்கி இருக்கிறது. திராவிட மாடலுக்கு வலிமை சேர்க்கின்ற தீர்ப்பு என்றே இதை சொல்ல வேண்டும். உதாரணத்திற்கு சிலவற்றைச் சுட்டிக் காட்டுவோம்.

**1) சமூகப் பன்மைத்துவம்** (Social Diversity)

சமூகப் பன்மைத்துவம் சமூகப் பாகுபாடுகளுக்கு (Social Discrimination) முற்றிலும் எதிரானது. பாகுபாடுகளைத் தகர்த்து, சம தளத்தில் மானுடத்தை நிறுத்தச் செய்வது. ஒற்றைப் பண்பாடு, ஒற்றை மதம், ஒற்றை உணவு முறை, என்ற பாசிச சிந்தனைகளை மறுப்பது.

**2) கட்டமைப்புத் தடைகள்** (Structural Barriers)

ஜாதியக் கட்டமைப்பு, சமூகப் பின்னணி, வறுமைச் சூழல் ஆகிய பின்னணி கொண்ட சமூகத்தை, கல்வி, சுயமரியாதை உரிமைகளைத் தடுத்து காலம் காலமாக தடுக்கப்பட்டு வந்த அநீதிகளைத் தகர்ப்பதே இந்தக் கட்டமைப்புத் தடை. அவர்கள் தங்களுக்கான சொல்லாடல்களாக, தகுதி, திறமை, மதிப்பெண், நிர்வாகத்திறன் என்று பேசிய அனைத்தும் நேர்மையற்றவை என்று உச்சநீதிமன்றம் தெளிவு படுத்தியிருக்கிறது.



**3) கலாச்சார மூலதனம்** (Cultural Capital)

இது இந்தியாவின் ஜாதிய சமூகத்திற்கு மட்டுமே உள்ள தனித்துவமான சுரண்டல். பொருள் மூலதனம் இதற்குத் தேவையில்லை. உயர் குடிப் பிறப்பு மட்டுமே போதும். கலாச்சார மூலதனவாதிகள் சமூகத்தோடு உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள மறுத்தனர். உயர் ஜாதி சமூகப் பின்னணியில் இருந்து வந்த பிரிவுக்கு சமூகவியலாளர்கள் பயன்படுத்திய சொல் ‘சமூக மூலதனம்’ (Social capital) என்பதாகும். உச்சநீதிமன்றம், சமூக மூலதனம் என்ற சொல்லுக்கு மாற்றாக ‘கலாச்சார மூலதனம்’ என்று துல்லியமாக வரையறை செய்திருக்கிறது.

**4) அர்த்தமுள்ள சமத்துவம்** (Substantial Equality)

சமத்துவத்துக்கான முன் நிபந்தனை சம உரிமை. சம உரிமைகளைப் பகிர்ந்து அளிக்காமல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ள சமத்துவம், உயிர் பெற்றுவிடாது. தேர்தலில் அனைவருக்கும் ஒரே ஓட்டு என்பது சமத்துவம் தான். ஆனால், ஒவ்வொரு ஓட்டையும் செலுத்துகிற குடிமகன் – குடிமகள் சம உரிமைக்குரியவராக இருக்கிறார்களா? என்றக் கேள்விக்கான விடை தான் அர்த்தமுள்ள சமத்துவம்.

இந்தக் கருத்தியல்களை மேலும் விரிவாக்கி திராவிட மாடலை செழுமைப்படுத்த வேண்டிய கடமை, திராவிட இயக்க ஆய்வாளர்கள், சிந்தனையாளர்களுக்கு இருக்கிறது. ‘சமூகப் பிறப்படுத்தப்பட்டத் தன்மை’ (Social Backwardness ) என்பதை நிர்ணயிப்பதற்குப் பிறந்த ஜாதி முதன்மையான அளவுகோல் என்றாலும், ஜாதியுடன் தொடர்புடைய 20 க்கும் மேற்பட்ட பொருளியல், வாழ்வாதார நடைமுறைகளைப் பொருத்தித் தான், மண்டல் ஆணையம் சமூகப் பிற்படுத்தப்பட்டத் தன்மையை ஆராய்ந்தது.

அதேபோல், தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகநீதிக்கான அளவுகோலாக தமிழ்வழிக் கல்வி, அரசுப் பள்ளி மாணவர்கள் என்ற இரண்டு காரணிகளையும் இணைத்திருக்கிறார். மொழி பண்பாட்டு அடையாளம் என்றாலும், பிற மாநிலத்தவர் தமிழர் வேலைவாய்ப்புகளை அபகரிப்பதை தடுக்கும் சமூக நீதிக் கருவியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

திராவிட மாடல் பேசும் சமூக நீதி, விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்துதல், மாநில உரிமைகளை மீட்டெடுத்தல், சுயமரியாதை பண்பாட்டை வாழ்வியலாக்குதல், தமிழ்நாட்டை சுயசார்பு பொருளாதாரம் நோக்கி வளர்த்தெடுத்தல் என்ற நான்கு முக்கிய உள்ளடக்கங்களோடு தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுத்து வருகிறார். கட்சி அரசியலைக் கடந்த ‘திராவிட மாடல்’ என்ற தமிழ்நாட்டின் தனித்துவத்திற்கு நாம் வலிமை சேர்ப்போம். இது காலத்தின் தேவை. ●



# செங்கதிர்ச் செல்வன் ஆட்சியில் செம்மொழித்தமிழ்





முனைவர்
**ம.இராசேந்திரன்**
மேனாள் துணைவேந்தர்

மாண்புமிகு முதலமைச்சர், ஆட்சிக்கு வந்து ஓராண்டில் யாரும் எண்ணிப் பார்க்க இயலாத இடங்களில் எல்லாம் தமிழை ஏற்றி வைத்துப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார். இதைப் பார்க்கும்போது, உன்னால் சாதிக்க முடியாத ஒன்றும் உள்ளதோ என்று "அரியவும் உளவோ நினக்கே" என்று பாண்டியன் நன்மாறனை நக்கீரர் பாராட்டுவது நினைவுக்கு வருகிறது.

கூடவே,

"அங்கண் விசும்பின் ஆரிருள் அகற்றும்

வெங்கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்

தண்கதிர் மதியம் போலவும்

நின்று நிலை இய உலகமோடு உடனே" என்றும் அவர் வாழ்த்திப் பாடுகிறார்.

வானத்து இருளைப் போக்கும் உதயசூரியன் போலவும் சந்திரன் போலவும் எல்லாக் காலத்தும் உலகோடு நிலைத்து நிற்பாயாக என்று அவர் பாண்டியனை வாழ்த்துவதைப்போல முதலமைச்சரை வாழ்த்தத் தோன்றுகிறது.

சூரிய வெப்பத்தை அடிமடியில் காப்பாற்றி, வாழும் உயிர்களின் இரத்த ஓட்டத்தில் கலந்து வளர்க்கிறது பூமி. கடந்த காலச் சிந்தனை வெளிச்சத்தைக் காப்பாற்றித் தமிழர்களின் மன ஓட்டத்தில் கலந்து வளர்க்கிறது தமிழ். இப்படித் தமிழர்களின் வாழ்க்கையை உதய சூரியனும் தமிழும் ஒளிமயமானதாக மாற்றிக்கொண்டு வருகின்றன.

இதனால் தமிழர்கள் சூரியனையும் தமிழையும் கொண்டாடி வருகிறார்கள். தமிழ் சூரியனைப் பாடுகிறது: சூரியன் தமிழை வளர்க்கிறது.

ஆம்! ஆட்சியில் உதய சூரியன் இருக்கும் போதெல்லாம் தமிழ் வளர்கிறது.

வளர்ச்சி என்பது வாழ்வதின் அடையாளம்; ஒன்று வாழ வேண்டுமானால் அது வளர வேண்டும்; வாழவும் வளரவும் வேண்டிய ஒன்றை இயற்கையும் அரசியலும் வளர விடாதபோது அது வளர்க்கப்படும்; வளர்க்கப்பட வேண்டும்.

ஒன்றை வளர்க்க வேண்டும் என்றால் பாதுகாக்க வேண்டும்; தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்றால் பயன்பாட்டிற்குத் தேவைப்படுவதாக இருக்க வேண்டும். பயன்படாத ஒன்று பாதுகாக்கப்படாமல் போய்விடும்; பாதுகாக்கப்படாத ஒன்று வாழாது; வளராது.

தமிழ், தொடர்ந்து வாழ்ந்து வளர்ச்சியடைந்து வருகிற மொழி; வளர்க்கப்பட்டு வருகிற மொழி. தமிழ் வளர்ச்சி வரலாற்றின் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் பதவியேற்ற 2021 மே 7ஆம் தேதி முதல் ஆற்றியுள்ள தமிழ்ப் பணிகள் அரசியல் கடந்து மாற்றாரையும் கைகுவிக்க வைத்திருக்கின்றன.

- கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கப்படாமல் முடங்கிக் கிடந்த கலைஞர் செம்மொழி விருதினை ஒவ்வொருவருக்கும் பத்து இலட்சம் என்று பத்துத் தமிழறிஞர்களுக்கு ஒரு கோடி ரூபாய் ஆண்டுதோறும் மூன்று பேருக்கு, ஒவ்வொருவருக்கும் ரூபாய் 5 இலட்சம் என்று இலக்கிய மாமணி விருதுகள்
- விருது பெறும் அறிஞர்களுக்கு ஆண்டுக்குப் பத்து பேருக்குக் கனவு இல்லம்
- ஜெர்மனி நாட்டின் கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம்
- எட்டுத் தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கல்
- ஆண்டுதோறும் குறள் முற்றோதல் செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை வரம்பு நீக்கப்பட்டு அனைவருக்கும் குறள் பரிசு
- நவி மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டிற்கு ரூபாய் 25 லட்சம்
- தீராக் காதல் திருக்குறள் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ரூபாய் 25 லட்சம்




- அயல்நாடு மற்றும் வெளி மாநிலத் தமிழர்களுக்காகத் தமிழ் பரப்புரைக் கழகம் உருவாக்க ரூபாய் ஒரு கோடி
- சங்க இலக்கிய தத்துவங்களையும் கருத்துக்களையும் காஃபி மேசைப் புத்தகமாக வெளியிடல்
- தலைவர்கள், தமிழறிஞர்களின் காணொலிப் பொழிவுகள் இலக்கியங்களை ஒலி நூல்களாக வெளி யிடல் திருக்கோயில்களில் திருக்குறள் வகுப்புகள்
- சங்க இலக்கியங்கள், திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூல்கள் வெளியிடல்
- பாரதி நினைவு நூற்றாண்டு விருதுகள் வழங்கிட ரூபாய் 18 லட்சத்து 60 ஆயிரம், பாரெங்கும் பாரதி என்ற தலைப்பில் இணைய வழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம்
- தமிழறிஞர்கள், பிறந்த நாளன்று இலக்கியக் கூட்டங்கள் விருதுத் தொகையை ரூபாய் 2 இலட்சமாக உயர்த்துதல்
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதல் நூலாக கால்டுவெலின் “A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages” நூல் வெளியீடு
- பாரதியின் கையெழுத்துப் பிரதிகளைச் செம்பதிப்பாக வெளியிடுதல், பாரதியின் வாழ்வைச் சித்திரக் கதை நூலாக்குதல், நூறு பாடல்களை ஓவியங்களுடன் வெளியிடுதல்
- பிறநாட்டு இலக்கியங்களைத் தமிழ் மொழியில் வெளியிடல்; கி.ரா.வின் படைப்புலகமும் படைப்பு மொழியும் என்னும் பொருண்மையில் பயிலரங்கம்
- “பன்முக ஆளுமையாளர் கலைஞர்” என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம்; தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ரூபாய் 28 கோடியே 44 லட்சத்து 65 ஆயிரத்து 337
- நல்கை தமிழ்ப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை; தமிழ் இலக்கியங்களை உலகமொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடல்
- புதிய கலைச்சொற்கள் இணையவழியில் அறிமுகம், சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள் போன்றவை விக்கிப்பீடியா, விக்கி மூலத்தில் பதிவேற்றம் செய்தல்...

இப்படி தமிழ்நாடு அரசின்... முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘தமிழ்’ மொழிக்கான பணிகளும் சாதனைகளும் கழக ஆட்சியில் வளரும்; வளர்ந்து கொண்டே இருக்கும்!


வாய்மையே வெல்லும்
விழுப்புரம் மாவட்டம்

# உலகின் மிகப் பெரிய திட்டம்



**வீ**டு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
- மகாகவி பாரதியார்

“நான், தஞ்சாவூர் எல்லை அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள என் வீட்டில் இல்லம் தேடிக் கல்வி மையம் நடத்தி வருகிறேன். ஆரம்பத்தில் 10 மாணவர்கள் வந்தனர். தற்போது 18 மாணவர்கள் விடுப்பின்றி வருகை புரிகின்றனர். இரு மாணவர்கள் பள்ளி செல்ல விருப்பமில்லாமல் இருந்தனர். இவர்களை பள்ளி செல்ல ஊக்கப்படுத்தினேன். இப்பொழுது தொடர்ந்து பள்ளி செல்கின்றனர்” என்கிறார் தஞ்சையைச் சேர்ந்த தன்னார்வலர் கா. வள்ளி.

இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் வெற்றி எது எனக் கேட்டால் இதுதான். இது முதலமைச்சரின் கனவுத் திட்டம். அவரது தனிக் கவனத்திலும் கண்காணிப்பின் கீழும் உருவான திட்டம். ஓராண்டு நிறைவடைவதற்கு முன்பே இந்த திட்டம் லட்சக்கணக்கான அரசுப்பள்ளி குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறது.

பள்ளிகள் செயல்படாத நிலையில் பெரும்பாலான அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வீட்டிலிருந்து இணையவழியில் கற்பதற்கான வசதி வாய்ப்புகள் அமையாததால் மாணவர்களிடத்தில் கற்றல் இழப்பை ஏற்படுத்தி இருந்ததை அரசு உணர்ந்து இருந்தது. இந்த இழப்பு ஆரம்பக் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

பெருந்தொற்று குறைந்து மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட்ட நிலையில் மாணவர்களை பயமின்றி, தன்னம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் மீண்டும் பள்ளிக்கு வரவழைத்து கற்றல் இடைவெளியின்றி வயதுக்கேற்ற வகுப்பில் தொடரவைப்பது அரசுக்கு மாபெரும் சாவாலாக இருந்தது.

பள்ளிக்கும் மாணவர்களுக்கும் இடையில் உருவான இந்த இடைவெளியை சரி செய்ய சமூக பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் மாணவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று கற்பிப்பதற்கான ஒரு சிறப்பு திட்டமாக இல்லம் தேடிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

இல்லம் தேடிக் கல்வியின் உயரிய நோக்கங்கள் 92,297 குடியிருப்புகளில் 1 முதல் 8 வகுப்புகள் வரை பள்ளிகளில் பயிலும் 34,05,856 அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் இடைவெளி, கற்றல் இழப்புகளை ஈடுசெய்வது மற்றும் இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பதாகும்.

இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில் அக்டோபர் 27, 2021 இல் தொடங்கி வைத்தார்.

அறிவொளி இயக்கம் தமிழ்நாட்டின் எழுத்தறிவு மேம்பட பெரும்பங்காற்றிய இயக்கம். அதே போன்று இல்லம் தேடிக் கல்வித் திட்டம் ஊரடங்கால் உருவான கற்றல் திறன் இழப்பை, பள்ளிக்கூடத்திற்கும் குழந்தைகளுக்கும் இடையில் உருவான இடைவெளியை சரி செய்து, குழந்தைகளை மறுபடியும் பள்ளிகளுக்கு அழைத்து வருவது என்ற உன்னதமான நோக்கத்தைக் கொண்டது.

இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை கலை வடிவங்களில் கிராம மக்களுக்கு உணர்த்தியது தமிழ்நாடு அரசு. இந்த திட்டத்தின் சிறப்பே தன்னார்வலர்களை இந்த திட்டத்தில் இணைப்பதுதான். இணைய வாயிலாக 6.83 லட்சம் பேர் இதுவரை தன்னார்வலர்களாக பதிவு செய்துள்ளார்கள்.

12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற தன்னார்வலர்கள், 1 முதல் 5 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கும் பட்டப்படிப்பு முடித்த தன்னார்வலர்கள் 6 முதல் 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கும் கற்பிக்க தகுதியுடையவர்கள் என்பதை அரசு தீர்மானித்தது. பள்ளி மேலாண்மைக்குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட இந்த தன்னார்வலர்களுக்கு உரிய பயிற்சிகளும் அரசால் வழங்கப்படுகிறது.

அந்தந்த பகுதிகளில் உள்ள பெண் தன்னார் வலர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவர்கள் பள்ளிக்கும் சமூகத்துக்கும் ஒரு இணைப்புப் பாலம் போல செயல்படுகிறார்கள்.

முதல்வரால் மரக்காணத்தில் துவங்கிய இந்த கல்வி முயற்சி இன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இல்லம் தேடிக் கல்வி மையங்களில்



மாணவர்கள் மகிழ்வுடன் வந்து கற்றலின் இனிமையை உணர்கிறார்கள். கல்வி பயின்ற தன்னார்வலர்களுக்கு இல்லம் தேடிக் கல்வி மையங்கள் சமுதாயப்பணி செய்ய வாய்ப்பு அளிக்கக் கூடிய களமாக திகழ்கின்றன.

இந்த திட்டத்தின் சிறப்பே பள்ளிகளுடன் இணைந்து சமூகத்தின் பங்களிப்புடன் குழந்தைநேய கற்றல் சூழலை உருவாக்குவது தான். அரசுத்துறையும் பள்ளி மேலாண்மைக் குழுவும் இணைந்து செயல்படுவதால் இந்த திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

கற்றலில் மிக முக்கியம் கல்விக்காக வரும் குழந்தைகளுக்கு உற்சாகத்தையும், கற்றுக் கொடுக்கும் தன்னார்வலர்களுக்கு போதிய திறனையும் உருவாக்குவதுதான். அந்த வகையில் நுட்பமான கற்பித்தல் கருவிகளைச் செய்து புதுமையான கற்பித்தல் முறைகளை தன்னார்வலர்கள் கடைபிடிக்கிறார்கள்.

இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் கற்றல் கற்பித்தல் கருவிகள், சென்னை புத்தகக் காட்சி உள்ளிட்ட அனைத்து புத்தக கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுகிறது. பல்வேறு பகுதிகளிலிருந்து தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் செய்துள்ள கற்றல் கற்பித்தல் கருவிகளை குழந்தைகளுக்கு செய்து காண்பிக்கின்றனர். புத்தகக் காட்சிகளில் குழந்தைகளைக் கவரும் முக்கிய அரங்கமாக இல்லம் தேடிக் கல்வி அரங்கு விளங்குகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித்துறையின் கண்காணிப்போடும் நடைமுறைப்படுத்தப்படும் இல்லம் தேடிக் கல்வித் திட்டம் மிகக் குறுகிய காலத்தில் பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்களின் பாராட்டுதலையும் பெற்றதால் மேலும் ஓராண்டுக்கு இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

பலரும் இந்த திட்டம் பற்றி சந்தேகங்களை எழுப்பிக் கொண்டிருந்தபோது 1.81 லட்சம் கற்றல் மையங்களில் 19 கோடி மணி நேரம் கற்பித்தல் நிகழ்வு நடந்திருக்கிறது. உலக அளவில் 30 இலட்சம் மாணவர்களின் கல்விக்காக தன்னார்வலர்களைக் கொண்டு நடத்தப்பட்ட உலகின் மிகப்பெரிய திட்டம் இல்லம் தேடிக் கல்வித்திட்டம்தான். இந்த திட்டம் தமிழக கல்வி வரலாற்றில் ஈடில்லாத ஒரு இடத்தைப் பெறும்!

**- பள்ளிக் கல்வித் துறை**



# 'நீட்' விலக்கு போராளியே முதல்வர்



வெட்ட வெளியில், கொட்டும் மழையில், இராபின்சன் பூங்காவில், தொடங்கப்பட்ட நாளிலேயே போராட்ட அறிவிப்போடு தொடங்கப்பட்ட இயக்கம் திமுக என்பதை உலகறியும்.

போராடவே பிறப்பெடுத்து, போராடியே வளர்ந்து, போராட்டங்களாலேயே வென்ற இயக்கத்தின் மரபில், போராட்டங்களை தன் வாழ்வாக வகுத்துக்கொண்டவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இந்திய துணைக்கண்டத்து தேர்தல்களில் சாதி, மதம், பணம், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், மூடத்தனங்கள் என்று பிற்போக்கு அம்சங்கள் மையப்பிரச்சனையாக உருவெடுத்து, ஜனநாயகத்தின் அடிப்படைகளை தகர்த்து வரும் போக்கை நாம் கண்ணெதிரே கண்டு வருகிறோம்.

ஆனால் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில்புதிய கல்விக்கொள்கை, நீட் தேர்வு போன்ற கல்விப் பிரச்சனைகள் உள்ளிட்ட முற்போக்கு அம்சங்கள் தேர்தலின் பிரதான பிரச்சனைகளாக பேசப்பட்டன. ஒருவகையில் ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு தமிழ்நாடு அளித்த கொடை அது.

போராட்ட அறிவிப்போடு தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தின், செயல் தலைவராக பொறுப்பேற்ற பொதுக்குழுவிலேயே 'நீட்' தேர்வுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றினார் நமது முதலமைச்சர் அவர்கள்.



மருத்துவர்
**எழிலன் நாகநாதன்**
சட்டமன்ற உறுப்பினர்.

மாநிலம் முழுக்க மனிதச் சங்கிலி போராட்டம், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், தமிழ்நாடு முழுக்க நீட் தேர்வின் தீமைகள் விளக்க கருத்தரங்கங்கள், பொதுக்கூட்டங்கள் என்று நீட் தேர்வுக்குஎதிராக, ஒத்த கருத்துடைய எல்லோரையும் ஒருங்கிணைத்து அவர் உழைத்த உழைப்பு, மாநிலத்தின் மக்களை விழிப்படைய வைத்து, கடந்த சட்டமன்ற தேர்தலில் எதிரொலிக்கவும்வைத்தது.

திமுகவின் தேர்தல் அறிக்கையிலும், பரப்புரைகளிலும் நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவது முதன்மைப்படுத்தப்பட்டு, தேர்தல் வெற்றியின் வழியாக தமிழ்நாட்டு மக்களின் ஒப்புதலும் பெறப்பட்டது.

கழக அரசு அமைந்தவுடன், நீட் தேர்வுக்கு எதிராக அதுவரையில் மக்கள் மன்றத்தில் அரசியல் ரீதியாக கட்டமைத்த போராட்டத்தை, சட்டமியற்றும் மன்றங்களில் அரசின் போராட்டமாக மாற்றினார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அரசு அமைந்த பிறகான முதல் ஆளுநர் உரை யிலேயே, நீட் தேர்வுக்கு எதிரான அரசின் நிலைப்பாட்டை தெளிவுற இடம்பெற செய்தார்.

முதலமைச்சராக டெல்லிக்கு சென்ற முதல் பயணத்தில், பிரதமருடனான சந்திப்பிலும் நீட் தேர்வுக்கு எதிரான நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

மாநில சுயாட்சியை மீட்டெடுக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைத்த இராஜமன்னார் ஆணையம் தொடங்கி, கிராமப்புற மற்றும் விளிம்பு நிலை மாணவர்களின் உயர்கல்வியை சாத்தியப்படுத்த, மாநில நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்ய உதவிய அனந்தகிருஷ்ணன் ஆணையம் வரையில் இந்த இயக்கம் கண்ட வரலாற்று வெற்றிகள் எல்லாவற்றுக்கு பின்னாலும் உடைக்க முடியாத தரவுகளும், சட்டத்தின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் உள்ளன.

அந்த வகையில், ஆட்சி பொறுப்பேற்ற ஒரு மாதத்தில் ஜூன்10 – 2021 அன்று, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டை காக்க, உரிய தரவுகளையும் பரிந்துரைகளையும் வழங்க நீதியரசர்ஏ.கே.இராஜன் அவர்களின் தலைமையிலான உயர்மட்ட ஆய்வுக்குழுவை அமைத்தார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

கல்வியாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என்று 86,342 க்கும் மேற்பட்டோரின் கருத்துகள், திரட்டப்பட்ட எண்ணற்ற தரவுகள், சட்ட ஆலோசனைகள் ஆகியவற்றை உள்ளடக்கி, 165 பக்கங்கள் கொண்ட அறிக்கையை நீதியரசர் ஏ.கே.இராஜன் அவர்களின் தலைமையிலான ஆணையம், ஜூலை14 – 2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கியது.

ஆணையத்தின் தரவுகள் மற்றும் பரிந்துரைகளின் மீது சட்டம் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை மேற்கொண்டு, செப்டம்பர் 13 – 2021 அன்று மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் விலக்கு கோரும் மசோதாவை, ஒருமனதாக நிறைவேற்றியது நம்முடைய அரசு.

நீட் தேர்வின் கொடுமையால் தற்கொலைகள் தொடராமல் தடுக்கும் நோக்கில், மாணாக்கர்களோடு இந்த அரசு வலுவோடு நிற்பதை எடுத்து கூறி, செப்டம்பர் 15 – 2021 அன்று நெகிழ்வான அறிக்கை ஒன்றை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெளியாட்டார்.

‘கல் நெஞ்சங்கொண்டோரை கரைப்போம், மனம் தளராதீர்கள் மாணவர்களே, உங்களை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம்’ என்று மாணவர்களிடம் கோரிக்கை வைத்த அதே அறிக்கையில், ‘நீட் எனும் அநீதியை ஒழிக்கும் வரை நாம் ஓயமாட்டோம்’ என்கிற உறுதியை மீண்டும் வழங்கினார்.

அதை தொடர்ந்து, நீட் தேர்வுக்கு எதிராக தேசிய அளவிலான கருத்துருவாக்கம் மற்றும் அணிசேர்க்கை முயற்சியாக 12 மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு, அக்டோபர் 10, 2022 அன்று நமது முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார். ‘கல்வித்துறையில் மாநில அரசுகளின் முதன்மையை மீட்டெடுப்போம்’ என்கிற மாநில சுயாட்சி முழக்கத்தை,



சுயமரியாதை சாரத்தை தாங்கிய அந்த கடிதத்தையும், நீட்தேர்வின் பாதகங்களை விளக்கும் தரவுகளை தாங்கிய நீதியரசர் ஏ.கே.இராஜன் அவர்களின் அறிக்கையையும், கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், 12 மாநிலங்களின் முதலமைச்சர்களையும் நேரில் சந்தித்து வழங்கினர்.

நீட் விலக்கு மசோதாவின் மீது முடிவெடுக்க மாண்புமிகு ஆளுநர் அவர்கள் காலதாமதம் செய்ததை அடுத்து, நவம்பர் 27 – 2021 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து, மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க கோரினார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

அதன் பிறகும் காலதாமதம் தொடர்ந்த நிலையில், டிசம்பர் 28 – 2021 அன்று மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்த, நாடாளுமன்ற மக்களவை யின்தி.மு.க குழுத் தலைவர் திரு.டி.ஆர். பாலு அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயன்றனர். பின்னர் குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து, மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க உள்துறை அமைச்சகத்திற்கு உடனடியாக அனுப்பப்பட்டது.

இந்நிலையில் ஒன்றிய உள்துறை அமைச்சர்

அவர்களை சந்திக்க முயன்ற தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு நேரம் ஒதுக்காமல் தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதிகளை, மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் சந்திக்க மறுப்பது மக்களாட்சியின் மாண்புக்கு எதிரானது என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஜனவரி 06–2022 அன்று, 110 விதியின் கீழ் அறிக்கை வெளியிட்டு, அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

அதை தொடர்ந்து, ஜனவரி 08–2022 அன்று கூட்டப்பட்ட சட்டமன்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில், 'சட்டமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு சட்டமுன்வடிவை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் இருப்பது சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்தையே கேள்விக்குறியாக்கும் வகையிலும்; மக்களாட்சித் தத்துவத்துக்கும் சட்டமன்ற இறையாண்மைக்கும் எதிராகவும் உள்ளது' என்று உரையாற்றினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கழக அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டில் கலந்துகொண்ட முதல் அரசு நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் நீட் விலக்கு கோரிக்கையை, பொது நிகழ்வில் நேரடியாக மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தி பேசினார்.

இந்நிலையில், தமிழ்நாட்டு மக்களுக்கு கவலை தரும் வகையில், சட்டமன்றத்தின் மாண்புக்கு எதிராக, நீட் விலக்கு சட்ட முன்வடிவை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பிப்ரவரி 03 – 2022 அன்றே அனைத்துக் கட்சி கூட்டத்திற்கான அழைப்பை விடுத்தார்.

உள்ளாட்சித் தேர்தல் பரபரப்பிற்கு இடையில் பிப்ரவரி 05 – 2022 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில், சட்ட முன்வடிவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து கூட்டப்பட்ட, தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்பு கூட்டத்தில், திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவை திருத்தம் இல்லாமல் மீண்டும் நிறைவேற்றி மாண்புமிகு ஆளுநருக்கு அனுப்பியது நம்முடைய அரசு.

வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள் என்று குறிப்பிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவை, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு உடனடியாக அனுப்பும்படி, மார்ச்15 – 2022 அன்று மாண்புமிகு ஆளுநரை சந்தித்து வலியுறுத்தினார்.கடந்த மார்ச் 31 – 2022 அன்றுமாண்புமிகு இந்திய பிரதமரை சந்தித்தபோதும், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரி வலியுறுத்தியுள்ளார்.

இவ்வளவுக்கு பிறகும் போராட்டம் தொடர்கிறது என்றால், அதற்கு அடிப்படையான காரணம் கல்வியை மாநில அதிகார பட்டியலில் இருந்து, ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றியது தான்என்பதை முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிவார். அதனால் தான் கல்வியை மாநில அதிகார பட்டியலுக்கு மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அவரது வழியில் பயணிக்கும் நாங்கள், 'அறம் செய்ய விரும்பு' என்கிற அறக்கட்டளையின் வழியாக, கல்வியை ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றிய 42வது அரசமைப்பு சட்டதிருத்தத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்துள்ளோம். ஏப்ரல் 07–2022 அன்று வெளியிட்ட, 'திராவிட மாடல் அரசின் சமூகநீதி வெற்றிப்பயணம்' என்கிற அறிக்கையில்கூட, நீட் தேர்வுக்கு எதிரான கழக அரசின் போராட்டங்களை முதன்மையாக குறிப்பிட்டுள்ளார் நம் முதலமைச்சர் அவர்கள்.

நூற்றாண்டு திராவிட இயக்கம் பெற்ற உரிமைகளை எல்லாம் பறிகொடுத்து நின்ற நாளில், நம்பிக்கையாக வந்து சேர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். தன் அயராத உழைப்பால், போராட்டங்களால் இன்றைக்கு ஒவ்வொன்றாக மீட்டு வருகிறார். நீட் தேர்வை ஒழித்து, நம் மாணவர்கள் இழந்து வரும் உரிமைகளையும் அவர் தான் மீட்கப்போகிறார்.

விடியல் அரசு நீட் தேர்வை விரட்டியடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# மாபெரும் கனவின் மகத்தான துவக்கம்



ஒரு அரசின் செயல்முறையில் அடிப்படையான நான்கு அம்சங்கள் இருக்கின்றன.

1) ஒரு அரசு எப்படிச் செயல்படுகிறது?
2) எத்தகைய பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது?
3) யாருக்காகச் செயல்படுகிறது?
4) எத்தகைய தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது?



**மனுஷ்ய புத்திரன்**
எழுத்தாளர்

இந்தக் கேள்விகளுக்கான பதிலில் இருந்துதான் ஒரு மாநிலத்தில் நடைபெறுவது நல்லாட்சியா என்ற முடிவுக்கு வரமுடியும். ஏன் தமிழக முதல்வரை இந்தியா முழுக்க இருக்கும் ஊடகங்கள் முதல்வர்களில் முதன்மையானவராக கொண்டாடு கின்றன என்பதற்கான பதிலும் இதில்தான் அடங்கியுள்ளது.

கழக அரசு பதவியேற்றவுடன் அது மக்களுடன் நெருக்கமாக இருக்கும் அரசு என்ற நம்பிக்கையை மக்களிடம் விதைத்தது. முதல்வரே முன் நின்று அந்த நம்பிக்கையை நிறுவினார். மக்களின் குறைகளைக்கேட்டு அவற்றை நிவர்த்திப்பதற்கான திட்டவட்டமான வழிமுறைகள் உருவாக்கப்பட்டன.

வெளிப்படையான மக்கள் நலன் நாடும் நிர்வாகம் ஒன்றை மக்கள் பத்தாண்டுகளுக்குப் பிறகு கண்ணால் கண்டனர். முக்கியமாக கொரோனா தடுப்பூசி செலுத்துதல், கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் எடுக்கப்பட்ட முன்முயற்சிகள் பெருமளவு உயிரிழப்புகளைத் தடுத்தன. ஒரு மாநில அரசின் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் வளங்களை வைத்துக் கொண்டே ஒரு அரசு அதிகபட்சமாக எப்படிச் செயல்பட முடியும் என்பதை தமிழக அரசு நிரூபித்துக்காட்டியது.

நிர்வாகத்திறன் மிக்க தொலை நோக்குள்ள ஒரு முதல்வரின் தலைமையில் திறன் வாய்ந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் கொரோனாவுக்கு எதிரான போரில் வென்று மக்கள் நலம் காத்து நின்றனர். இதே பொறுப்புணர்வை கடந்த ஆண்டு இறுதியில் நிகழ்ந்த பெருமழைப் பேரிடரிலும் கண்டோம்.

ஒரு அரசின் நம்பகத்தன்மை அதனுடைய பொறுப்புணர்விலிருந்து வெளிப்படுகிறது. சவால்களையும் எதிர்பாராத இடர்பாடுகளையும் சமாளிப்பது மட்டுமல்ல, நீண்ட கால நோக்கில் திட்டங்களைத் தீட்டுவதும் தேர்தல் வாக்குறுதிகளை ஆளும் கட்சி நிறைவேற்றுவதும் அதில் மிக முக்கியமானது.

அந்த வகையில் தொழில் வளர்ச்சிக்காகவும், அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காகவும் மிகப்பெரிய முன்னெடுப்புகளை இந்த அரசு செய்துவருகிறது. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமல்ல, இளைஞர்களின் திறனை மேம்படுத்துகிற பணியையும் இந்த அரசு செய்து வருகிறது. சமூக வலைத்தளங்களில் வெளிப்படுத்தப்படும் கோரிக்கைகளைகூட முதல்வர் நேரடியாக அழைத்து தீர்க்கிறார். ஒரு அரசு விழிப்புடனும் பொறுப்புடனும் செயல்படுவதன் பொருள் இதுதான். வீண் ஆடம்பரங்கள் இல்லை. வெற்று புகழுரைகள் இல்லை.

மூன்றாவதாக, ஒரு அரசு யாருக்காக செயல்படுகிறது என்பது மிக ஆதாரமான கேள்வி. அது எல்லோருக்குமாக செயல்படவேண்டும். சமூகத்தின் அனைத்துதரப்பினருக்கான நீதியையும் சமத்துவத்தையும் அது வழங்க வேண்டும். இன்றைய அரசு எல்லா நிலைகளிலும் அதை முழுமையாகச் செயல்படுத்தி வருகிறது.

கொள்கை முடிவுகள் மட்டுமல்ல, தமிழக அரசு தாக்கல் செய்த இரண்டு பட்ஜெட்டுகள் அதற்கு சிறந்த உதாரணம். சமூகத்தின் எல்லாதரப்பினரின் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப வரையப்பட்ட நிதிநிலை அறிக்கைகளாக பொது நிதி நிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை இரண்டுமே இருந்தன.

வளர்ச்சி என்பது அனைவருக்குமான ஒருங்கிணைந்த வளர்ச்சியாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இருக்கும் இடைவெளிகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் குறைக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மக்கள் நலம் நாடும் அரசின் இலக்கணங்களை இந்த அரசு பூர்த்தி செய்து வருகிறது.

> **சமூக வலைத் தளங்களில் வெளிப்படுத்தப்படும் கோரிக்கைகளை கூட முதல்வர் நேரடியாக அழைத்து தீர்க்கிறார்.**






எந்த அரசின் செயலுக்கும் பின்னால் ஒரு தத்துவம் இருக்கும். அந்தத் தத்துவம்தான் அந்த அரசை வழி நடத்தும். இடது சாரி பொருளாதாரக் கொள்கைகள், வலது சாரி பொருளாரக் கொள்கைகள். கலப்பு பொருளாதாரக் கொள்கைகள் என பல நிலைகளில் தத்துவங்கள் அரசின் செயல்பாடுகளையும் அதன் வளங்களை பகிர்ந்தளிப்பதையும் தீர்மானிக்கின்றன.

அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ‘திராவிட மாடல் அரசு’, ‘திராவிட மாடல் பொருளாதாரம்’ என்பதாகும். இந்த திராவிட மாடல் என்றால் என்னவென்பதை மாண்புமிகு முதல்வர் தொடர்ந்து தேசிய அளவில் முன்வைத்து வருகிறார். சமூக நீதி, மாநில சுயாட்சி என்ற இரண்டு அச்சாணிகளின் மேல் இந்த திராவிட மாடல் பயணிக்கிறது.

மாநில உரிமைகளைப் பொறுத்தவரை ஒன்றிய அரசிடமிருந்து மாநிலங்களுக்கான நிதி மற்றும் அதிகார பகிர்வினைக் கோருவதை தனது முக்கிய கருதுகோளாக கொண்டிருக்கிறது. இந்த திராவிட மாடல் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான மாடல். சரியான வளர்ச்சி பாதையில் செல்ல விரும்புகிற, அனைவருக்குமான நீதியை வழங்க விரும்புகிற எந்த அரசும் இந்த திராவிட மாடலையே முன்னுதாரணமாக கொள்ளக்கூடிய நிலை உருவாகி உள்ளது.

தமிழகத்தில் ஓராண்டு கழக அரசு ஒரு நவீன மக்கள் நல ஜனநாயக ஆட்சியின் அடையாளமாக மாறியுள்ளது. இந்த ஆட்சிக் காலம் இந்திய ஜனநாயகத்திற்கும் மக்களாட்சித் தத்துவத்திற்கும் தமிழகம் அளித்திருக்கும் கொடையாகும்.



# சமூகநீதியின் முதல்வர்



முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற பெயரில் இருக்கும் அரசியல் சமூக நீதியின் தொடர்ச்சியைத் தான் நாம் இப்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம்!

தமிழ்நாடு என்ற இந்த நிலப்பரப்பில் வாழும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தமிழ்நாடு மக்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட திராவிட இயக்கத்தின் தொடர்ச்சிதான் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள். சமூக நீதியைக் காப்பற்ற வேண்டும் என்ற நோக்கில்தான் 55 ஆண்டுகால வரலாற்று சிறப்பு மிக்க, திராவிட இயக்க ஆட்சிக்கு



**பி.வில்சன்**
மாநிலங்களவை உறுப்பினர்

'திராவிட மாடல்' என பெயர் வைத்து அதை இந்தியாவுக்கு முன் மொழிந்திருக்கிறார்.

தெற்கில் விதைக்கப்பட்டு வேர் விட்டு வளர்ந்துள்ள திராவிட மாடலை இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்க முக்கியமான சில காரணங்கள் உள்ளது.

திராவிட இயக்கத்தின் அளப்பரிய தியாகமும், மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் சமூக ஒற்றுமையும், பண்பாட்டுத் தளத்தில் மக்களை மனித மாண்புள்ளவர்களாக மாற்றுவதிலும் அது அடைந்துள்ள வெற்றியைக் காப்பாற்றுவதுமே முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியாகும்.

அந்த வகையில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், ஆகியோரின் வழித்தோன்றலான தலைவர் முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி ஒரு மூத்த வழக்கறிஞராக எனது சிறிய பங்களிப்பினை மூன்று முக்கியமான வழக்குகளில் நான் செய்துள்ளேன்.

தமிழ்நாட்டில் நாம் முன் வைக்கும் கோரிக்கைகள் இன்றைய காலக்கட்டத்தில் வெறும் தமிழ்நாடு சார்ந்ததாக மட்டுமில்லாமல் இந்தியா முழுமைக்கும் எப்படி சமூக நீதியை விரிவுபடுத்துகிறது என்பதையும் முக்கியமான ஒன்றாக கருதுகிறேன்.

மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் மாநிலங்கள் தரும் இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) கடந்த 2006ல் இருந்து இட ஒதுக்கீடு வழங்கப்படாமல், மாணவர்கள் வஞ்சிக்கப்பட்டு வருவதை பற்றியும், இது சமூக நீதிக்கு எதிரானது என்றும் கூறி இடஒதுக்கீட்டின் அவசியத்தை வலியுறுத்தி எங்களுக்கு சட்டப் போராட்டம் நடத்த தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இட ஒதுக்கீட்டை வென்றே ஆக வேண்டும் என்ற வேகத்தோடு மக்களவை, மாநிலங்களவை மட்டுமின்றி, நீதித்துறை, மக்கள் மன்றம் என பல முனைகளிலும் இட ஒதுக்கீட்டிற்கான குரலை கூர்மைப்படுத்தினார். இறுதியாக சட்டப் போராட்டத்தை மேற்கொள்ள முடிவுசெய்தார்.

2020 மே மாதம் 28ஆம் தேதி அகில இந்திய மருத்துவ படிப்பில் இடஒதுக்கீடு முறையாக பின்பற்றப்படவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் திமுக சார்பில் நான் வழக்கு தொடர்ந்தேன். 11.06.2020 அன்று உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றத்தை நாடச் சொன்னது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதில் தவறு இல்லை என்ற என்னுடைய வாதங்களுக்கு தலைமை நீதியரசர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு – கடந்த 27.07.2020 அன்று, 2021ஆம் ஆண்டு முதல் ஓபிசி மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு தரப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தது.

அந்த தீர்ப்பில் ஒரு குழுவை அமைத்து இட ஒதுக்கீடு அளிக்க முடிவு செய்து இந்த உத்தரவை 2021 ஆண்டு முதல் செயல்படுத்த வேண்டும் என நீதிமன்றம் சொன்ன போது, குழுவை அமைத்தவர்கள் அந்தக் குழுவின் அறிக்கையை அமல் படுத்தவில்லை.

உயர்நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து அப்போதைய தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்தது. ஆயினும், உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்ற தீர்ப்பினை 2021 முதல் நடைமுறைப்படுத்த உத்தர விட்டது. நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த ஒன்றிய அரசு மறுத்ததால் தி.மு.க சார்பில் நான் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்து நீட் அட்மிஷனே கூடாது என்ற உத்தரவை பெற்றேன்.

அதன்பேரில் தான் ஒன்றிய அரசு கடந்த

> **"இந்தியா முழுமைக்குமான ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒளிவிளக்குகள் இவை. இதனை ஏற்றிய கரங்கள் தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது கரங்கள்"**

29.07.2021ல் 27 சதவீத இடஒதுக்கீட்டை ஓபிசி மாணவர்களுக்கு கொடுக்க முன் வந்தது. இந்த 27% இடஒதுக்கீட்டின் மூலம் 4022 இடங்கள் மருத்துவ படிப்பிலும் 1000 இடங்கள் பல் மருத்துவ படிப்பிலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும்.

29.07.2021 அன்று ஒன்றிய அரசு கொடுத்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சில மருத்துவர்கள் வழக்கை தொடர்ந்தார்கள். தலைவர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் அனுமதியுடன் இவ்வழக்கில் தி.மு.க தன்னை ஒருதரப்பாக இணைத்துக்கொண்டு மனு செய்தது. இறுதியாக 2022 ஜனவரி 7ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் சந்திரசூட், கோபண்ணா ஆகியோர் அடங்கிய அமர்வு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது.

அடுத்தது கிராமப்புற மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில், அரசு மருத்துவர்களுக்கு உயர் சிறப்பு மருத்துவக்கல்வியில், 50 சதவிகித உள் இடஒதுக்கீட்டை செயல் படுத்த வேண்டும் என்று 2020ம் ஆண்டு முதல் தொடர்ந்து அரசு மருத்துவ மாணவர்கள் சார்பில் ஆஜராகி வாதாடிய தன் விளைவாக, 2020ல் உயர் நீதி மன்றத்தின் உத்தரவின் பேரில், 50% உள் ஒதுக்கீட்டை அரசு அனுமதித்தது. ஆனால் உச்ச நீதி மன்றம் 20.20.2021 ஆண்டில் செயல்படுத்த தடை விதித்தது.

தலைவர் எனக்கு உத்தரவிட்டார். மறுபடியும் நான் 2021–2022 ஆம் ஆண்டில் அரசு மருத்துவ மாணவர்கள் சார்பில் ஆஜராகி வாதிட்டேன். 2021–2022 ஆம் ஆண்டில் 50% உள் இடஒதுக்கீடு அரசு மருத்துவர்களுக்கு உயர் சிறப்பு மருத்துவ கல்வியில் தரப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் உத்தரவும் பெற்றேன். அப்போது, மீண்டும் சில மருத்துவர்கள் அது போன்ற உள் ஒதுக்கீடு தரப்படக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தை அனுகினர்.

நான் அரசு மருத்துவர்களுக்காக ஆஜராகி வாதாடினேன். அரசு தரப்பிலும் அதை ஆதரித்து வாதிட்டார்கள். எங்களுடைய வாதங்களை கேட்ட பிறகு உச்சநீதிமன்றம் 2021–2022 ஆம் ஆண்டு முதல் 50 சதவிகித உள் இடஒதுக்கீடு தரவேண்டும் என்று உத்தரவிட்டது.

நீட் தேர்வில் வெற்றி பெறும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புகளில் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை முந்தைய ஆட்சியாளர்கள் கொண்டு வந்தார்கள். அதை அப்போதைய ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் கிடப்பில் போட்டிருந்தார். எதிர்க்கட்சி தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள் அவரை நேரில் சந்தித்து மனுக் கொடுத்தும் அவர் அசைந்து கொடுக்கவில்லை.

பின்னர் ஆளுநர் மாளிகை முன்னால் மாபெரும் மக்கள் போராட்டம் அறிவித்த பின்னர் அந்த மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தார்.

முதல்வராக தளபதி அவர்கள் பதவியேற்ற பின்னர் இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டபோது பொது நல வழக்கு என்ற பெயரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த இடஒதுக்கீட்டிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்கள். அரசுத் தரப்பில் தலைமை வழக்கறிஞர் கபில்சிபல் அவர்களும், உயர் கல்வித்துறை சார்பில் நானும், ஆஜராகி வாதங்களை முன்வைத்தோம். மாபெரும் சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் அதுவும் சாத்தியமானது.

கடந்த ஓராண்டில், தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியின் கீழ் சமூக நீதி நிலைநாட்டப்பட்ட மூன்று முக்கியமான வழக்குகள் இவை. மூன்று சாதனைகள் இவை. இவை தமிழ்நாட்டுக்கானவை மட்டுமல்ல இந்தியா முழுமைக்குமான ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒளிவிளக்குகள் இவை. இதனை ஏற்றிய கரங்கள் தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது கரங்கள்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும், தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தாலும் சமூக நீதியையும், சமத்துவத்தையும் காக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் கொண்டவர் அவர்.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரை வீழ்த்தி இந்த உலகத்திற்கு அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வந்த ரஷியப் புரட்சியாளர் ஸ்டாலினைப் போல பாசிச சக்திகளை வீழ்த்தி இந்திய மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வர தெற்கில் இருந்து நம்மை வழி நடத்துகிறார் திராவிட இயக்க அரண் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள். ●


முத்தமிழ் அறிஞர்
தலைவர் கலைஞர்
சிலை திறப்பு விழா
தோற்றம் :
03.06.1924
மறைவு :
07.08.2018
சிலை திறப்பாளர் :
கழகத் தலைவர்
திருமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்

# ஆதிதிராவிடர் – பழங்குடியினரின் ஒளிவிளக்கே இந்த ஆட்சி




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு அடித்தட்டு மக்களின் கோரிக்கையின் நியாயம் உணர்ந்து செயல்பட்டு வருகிறதுது.

வன்கொடுமை தடுப்புச்சட்ட வழக்குகளை விசாரிப்பதற்காக தனி நீதிமன்றம் அமைத்திருந் தாலும் உரிய காலத்திற்குள் தீர்ப்புகள் வெளிவரு வதில்லை. தாமதமாக்குதல், சாட்சிகள் – பிறழ் சாட்சிகளாக மாறுதல் போன்ற பல்வேறு காரணங்களினாலும் தாமதம் ஏற்படுகிறது. இதனை முற்றிலுமாக தவிர்க்க அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ளார்கள்.

இதனைக் கண்காணிப்பதற்காக முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்ட வேண்டும் என்கிறது சட்டம். அதனை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக அமைத்தார்கள்.

மாநில அளவிலான உயர்மட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஆண்டுக்கு 2 முறை கூட்டப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக இக்கூட்டத்தை கூட்டினார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையிலான உயர்மட்ட மாநில கண்காணிப்புக் குழுக் கூட்டம் 19.08.2021 அன்று நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல மாநில ஆணையம் அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து மிக விரைவில் ஆணையம் அமைக்கப்படும் என்று உறுதி அளித்தார். அவர் உறுதி அளித்ததற்கு ஏற்ப தமிழ்நாடு சட்டம் 17/2021 என்கின்ற ஒரு சட்டத்தினை இயற்றி அதன் அடிப்படையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் அமைக்க உத்தரவிட்டார்கள்.

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.பெ.ரா.சிவகுமார் அவர்களைத் தலைவராகவும், திரு. புனிதப் பாண்டியன் துணைத் தலைவராகவும், அலுவல் சாரா உறுப்பினர்களாக வழக்கறிஞர் சு. குமாரதேவன், திருமதி லீலாவதி தன்ராஜ், வழக்கறிஞர் பொ. இளஞ்செழியன், முனைவர் கொ. இரகுபதி ஆகியோர் நியமிக்கப்பட்டு கடந்த ஜனவரி 3ஆம் தேதி முதல் ஆணையம் எண்:31, செனடாப் 2ஆவது சந்து, தேனாம்பேட்டை, சென்னை 18 என்கிற முகவரியில் உள்ள தாட்கோ அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.



வழக்கறிஞர்
**சு.குமாரதேவன்**
உறுப்பினர்,
தமிழ்நாடு ஆதிதிராவிடர்
மற்றும் பழங்குடியினர்
மாநில ஆணையம்

பாதிக்கப்பட்டவர்களின் மனுக்கள் மீதான விசாரணை தொடர்ச்சியாக ஆணையத்தின் முன் நடந்து வருகிறது. பாதிக்கப்பட்டவர்களின் மனுக்கள் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, ஆணையத்தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விசாரணை செய்து தீர்வு காண்கிறார்கள். 08.04.2022 வரையில் கீழ்க்காணும் வகையில் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

ஆணையத்தில் பெறப்பட்டவை 703. அதில் சாதிச் சான்று கோரியது 105; வன்கொடுமை சம்பந்தமானது 64; நிலம் தொடர்பானது 84; இதர பரிகாரங்கள் தொடர்பானது 450; விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் 258; ஆஜரான மனுதாரர்கள் 96 அரசு அலுவலர்களுக்கு அறிக்கை கோரப்பட்டது 191; அரசு அலுவலர்களின் அறிக்கை பெறப்பட்டது 73; தீர்வு காணப்பட்டவை 183; நிலுவைகளில் உள்ளவை 520;

ஆணையத்தின் சிறப்பான செயல்பாடுகளை இந்த புள்ளிவிபரமே சொல்லும்.

‘சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்‘ என்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிக்கேற்ப 2022–2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 4,281.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்வி உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டும் மற்றும் உணவுக் கட்டணத்தையும் அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முற்றிலுமாக ஏற்றுக் கொண்ட நம் தமிழக அரசு, உயர்கல்வி உதவித் தொகைக்காக 1,963 கோடி ரூபாயும் உணவுக் கட்டணத்திற்காக 512 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொழில் அதிபர்களாக உருவாகுவதற்கு தமிழ்நாடு புத்தொழில் மற்றும்

புத்தாக்க இயக்கத்திற்கு 30 கோடி ரூபாய் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

பண்டைய பழங்குடியினத்தைச் சேர்ந்த இருளர்கள் போன்ற பழங்குடியினர் விளிம்பு நிலையிலிருந்து மேலே வருவதற்காக இன்னமும் பழைய குனிந்து செல்லும் கூரை வீடுகளிலிருந்து கான்கிரிட் வீடுகளில் குடியமர்த்த ஏதுவாக 443 வீடுகள் கட்டப்படும் என்றும், அதற்கு 20.7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும் மேலும் வரும் நிதியாண்டியில் 1000 புதிய வீடுகள், பட்டியல் பழங்குடியினருக்கு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித்தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்ஜட் உரையில் சொன்னவற்றை செயல்படுத்தும் விதமாக கடந்த 11.04.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்கள் ரூ.18.42 கோடியில் புதிய விடுதிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலி மூலம் திறந்து வைத்தார்.

பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள், 1995 பிரிவு 16இன் படி மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு நலக் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இரண்டாவது முறையாக 12.04.2022 அன்று கூட்டப்பட்டது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கணனோட்டத்துடன் அணுகி அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தை ஆற்றும் முயற்சியாக, முறையாக நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

வன்கொடுமை வழக்குகள் அதிகம் நிலுவையில் உள்ள சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கூடுதல் நீதிமன்றங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்கள்.

சென்னை சைதாப்பேட்டையில் 1961ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சைதை எம்.சி. ராஜா மாணவர் விடுதி தற்போது காலியாக உள்ள இடத்தில் 75,000 சதுரஅடி பரப்பளவில் 5 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதியாக 40கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

அனைத்துத் துறைகளிடமிருந்தும் தொகுதிவாரியாகப் பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் அரசுப்பணிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குறைவுப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டு அவற்றை நிரப்புவதற்கு அரசாணை வெளியிடப்படுமென்றும் அறிவித்தார்கள்.

டாக்டர்.கலைஞர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அம்பேத்கர் மணிமண்டபத்தில் அவரது உருவச் சிலை அமைக்கப்பட உள்ளது.

டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் சமத்துவ நாளாக அறிவிக்கப்பட்டு அந்த நாளில் தீண்டாமை மற்றும் சாதிப்பாகுபாட்டிற்கு எதிரான உறுதிமொழியினை எடுக்க வேண்டிய அரசாணையையும் பிறப்பித்து, சமத்துவ சிந்தனை அனைவர் மனதிலும் நிலை நிற்க ஆவன செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

ஒரு பக்கம் சமத்துவபுரம், இன்னொரு பக்கம் சமூகத்தில் அனைவரும் சமம் எனும் கோட்பாட்டை சட்டத்தின் வாயிலாகவும் விழிப்புணர்வு, பரப்புரைகளின் வாயிலாகவும் தனது அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதிபட செயல்படுத்தி வருகிறார்.

பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோரின் சமத்துவச் சிந்தனைகளை நாடு முழுக்கப் பரப்புவதையும், அதற்காக ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' என்று எத்தனை முறை அழைத்தாலும் அது அப்படியே இவருக்குத் தான் பொருந்தும்.


NATIONAL HEALTH MISSION
தேசிய நலவாழ்வு குழுமம்
தமிழ்நாடு
இன்னுயிர் காப்போம் திட்டம்
மணி நேரம்
தொடங்கி வை
இன்னுயிர்
காப்போம் திட்டம்
நம்மைக்காக்கும் - 48
சரவணா
ஆடியோ'ஸ் செ-12

# கை அசைப்பு அல்ல; கரம் கோர்ப்பு




மக்கள் விரும்பிய ஒரு ஆட்சி மாநிலத்தில் அமைந்து ஓராண்டு ஆகிறது. ஒன்றிய அரசின் சூழ்ச்சியின் காரணமாக, மாநிலத்தில் கல்வித் துறை மிகப் பெரும் திண்டாட்டத்தை சந்தித்து வந்த சூழலில், சமூகநீதித் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த மாநில அரசு, சூழ்ச்சிகளை முறியடித்து கல்வித் துறையை சீர்செய்து சமமான கற்றல் வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டிய சவால் மிக்க பணியை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

பெருந்தொற்றுக் காலத்தில் முடங்கிப் போன பள்ளி வளாக செயல்பாடு பெரும் உத்வேகத்துடன் மீண்டும் செயல்பட தொடங்கி உள்ளதே சிறப்புச் செய்திதான்.

“ஒன்றியம்” என்ற கோட்பாட்டை மறைத்து “ஒற்றையாட்சி” கோட்பாட்டை நோக்கி இந்திய அரசு பயணிக்க முயல்கின்ற போது, அத்தகைய போக்குக்கு வாய்ப்பு அளிக்காமல் மாநில அரசின் உரிமையை பாதுகாத்திடும் வகையில் “மாநிலக் கல்விக் கொள்கை” வகுத்திடக் குழு அமைத்துள்ளதை இந்தியா முழுக்க உள்ள கல்வியாளர்கள் வரவேற்றுள்ளனர்.

சமமான கற்றல் வாய்ப்பை உறுதிப்படுத்த தாய் மொழி வழியில் அருகமைப்பள்ளி அமைப்பில் பொதுப் பள்ளி முறைமையை உருவாக்குவதின் முதல் படியாக சமச்சீர் கல்வியை கலைஞர் அறிமுகப்படுத்தினார்.

கலைஞரின் கனவு மெய்ப்பட அவரின் அருமைப் புதல்வர் திரு.





**பு.பா.பிரின்ஸ் கஜேந்திர பாபு**
பொதுச் செயலாளர்
பொதுப் பள்ளிக்கான மாநில மேடை

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சமத்துவச் சமூகத்தை கட்டமைத்திட அடிப்படைத் தேவையான சமமான கற்றல் வாய்ப்பை தரும் மாநிலக் கல்விக் கொள்கையை வென்றெடுப்பார் என்ற நம்பிக்கையை இந்த ஓராண்டு விதைத்துள்ளது.

நோய்த்தொற்றுப் பாதிப்பால் பெற்றோரை இழந்து தவித்த குழந்தைகளின் கல்வி தொடர, கண்ணியமிக்க குழந்தை பருவத்தை, ஆதரவற்று தவிக்கும் குழந்தைகளுக்கு உறுதிசெய்திட நிதியுதவி, கல்வி உதவி ஆகியவற்றை அறிவித்ததின் மூலம் தாயுமானவராக தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் பரிணமிக்கிறார்.

“பெண்கட்குக் கல்வி வேண்டும் கல்வியைப் பேணுதற்கே” என்றார் பாவேந்தர் பாரதிதாசன். கலைஞர் அவர்கள் பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில் எட்டாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு சமூகநலத் துறையின் மூலம் திருமண காலத்தில் ஊக்கத் தொகை அறிவித்தார்.

அதன் அடுத்த பரிணாமமாக அத்திட்டத்தை பெண்கள் உயர்கல்வி ஊக்கத் தொகை திட்டமாக திரு. மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு அறிவித்தது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பெண்கள் பட்டப் படிப்பை முடித்து தொடர் ஆய்வுப் படிப்பு, உயர் வேலைவாய்ப்பு ஆகிய முயற்சிகள் மேற்கொள்ள இந்த திட்டம் பெரும் ஊக்கத்தை அளிக்கும். இத்தகையத் திட்டத்தில் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களையும் இணைத்திட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

வெறும் கை அசைக்கும் முதல்வர் அல்ல. கரம் கோர்த்து வாழ்கையை உயர்த்தும் முதல்வர் என்பதை தனது முதலாண்டில் தன் செயல்பாடுகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் நமது முதல்வர்.

செல்ல வேண்டிய தொலைவு மிக அதிகம். பாதை மிகவும் கரடுமுரடானது. நெஞ்சில் உறுதியும், நேர்மைத் திறமும், ஆர்ப்பரிப்பு உணர்வும் கொண்ட முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் தனது அனைத்து முயற்சியிலும் வெற்றி பெற வேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.



# நீர் வளத்துறையில் ஓராண்டு சாதனை



ஆட்சி அமைந்த ஓராண்டில் எந்தத் துறையிலும் இமயத்தின் உச்சியைத் தொட முடியாது தான். ஆனாலும், அரசின் தற்போதைய அறிவிப்புகள் பல நீண்ட கால பாசன திட்டங்களுக்கு வழிவகை செய்யும் என நம்பலாம்.

நீர் வளத்துறையின் பராமரிப்புப் பணிகள் அன்னியில் பின்வரும் அறிவிப்புகள் மிக மிக அவசியம்.

- சென்னை மற்றும் அண்டை மாவட்டங்களில் வெள்ளத் தணிப்புப் பணிகளுக்கு 434 கோடி ரூபாய் ஒதுக்கீடு, இரண்டு கட்டமாக நிறைவேற்றப்பட உள்ள இப்பணிகள் அடையாறு, கொசஸ்தலை ஆறுகளினால் ஏற்படும் வெள்ளச் சேதத்தை தணிக்க உதவும்.
- சிவகங்கை, திருப்பூர் மாவட்டங்களில் சிறுபாசன ஏரிகளின் புனரமைப்பிற்கு ரூ.33.50 கோடி.
- கோதையாறு, கொள்ளிடம், வெண்ணாறு, பரம்பிக்குளம் ஆழியாறு வடிநில பாசனக் கட்டமைப்புகளை சீரமைக்க விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்க 31.15 கோடி ரூபாய் ஒதுக்கீடு. இது தொலை நோக்கு திட்டமாகும்.
- நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பை துல்லியமாக கண்டறிய செயற்கைக்கோள் உதவியுடனான திட்டத்திற்கு ரூபாய் 5.50 கோடி.
- கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் 4 நீர்த்தேக்கங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்ய ரூபாய் 9.50 கோடி.
- திருநெல்வேலி மாவட்டம் கஸ்தூரி ரெங்காபுரத்தில் புதிய ஏரி அமைக்கும் பணிக்கு ரூபாய் 35 கோடி.
- காஞ்சிபுரம், சிவகங்கை, தென்காசி மாவட்டங்களில் புதிய அணைகள் கட்ட ரூபாய் 84.30 கோடி.
- ராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில் நிலநீர் செறிவூட்டலுக்கான ஆற்றுப் படுகையின் கீழ் அமைய உள்ள தடுப்பணைகளுக்கு ரூபாய் 88 கோடி.
- கோவை, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, திருப்பத்தூர் உட்பட 8 மாவட்டங்களில் பாசனக் கட்டுமானங்கள் புனரமைப்பிற்கு ரூபாய் 215 கோடி.
- தூத்துக்குடி மாவட்டம் கடம்பாகுளம் மிகைநீர் போக்கி சீரமைப்பிற்கு ரூ.37.20 கோடி.
- கோவை, திண்டுக்கல், பெரம்பலூர், சேலம், திருப்பூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் தடுப்பணைகள் கட்ட ரூபாய் 70.95 கோடி.



- வெள்ளத்திற்கு உட்படும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ள பாதிப்பை குறைக்க ரூபாய் 70 கோடி.
- மேலே உள்ள பணிகள் தவிர 150 ஏரிகளின் பழுதுபார்ப்பு, புனரமைப்பு, சீரமைப்பு (Repair, Renovation, and Restoration) பணிகளுக்கு ஒன்றிய அரசின் 40 விழுக்காட்டுடன் கூடிய திட்டத்திற்கு சுமார் ரூபாய் 118 கோடி.

புரட்சிகரமான இந்த திட்டங்கள் தவிர கடைமடை கதவுகள், நீர்வள நிலவள திட்ட நீட்சி போன்ற பல திட்டங்கள் கட்டுரையின் விரிவு கருதி விடுபட்டன. ஓராண்டு சாதனை வருங்காலங்களில் இமாலய சாதனையாகும் என்பதில் ஐயமில்லை.

கலைஞர் ஆட்சியில் சுமார் 50 நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டன. காங்கிரஸ் ஆட்சியில் துவங்கி முடிவடையாமலிருந்த பல நீர்த்தேக்கங்கள் கலைஞர் ஆட்சியில் முடிவடைந்து பலனளித்து வருகின்றன. இதற்கு மேலும் நீர்த்தேக்கங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. வாய்ப்புள்ள இடங்களை கண்டறியும் முயற்சியில் இன்றைய அரசு முனைப்புடன் செயல்படுகிறது.



**சோ. திருநாவுக்கரசு,**
உதவி செயற்பொறியாளர் [ஓய்வு],
நீர்வளத்துறை

இனிவரும் காலங்களில் கலைஞர் ஆட்சியில் மாவட்டம் தோறும் நடைபெற்ற பாசன மாநாடுகள், கருத்தரங்குகள் போல இன்றைய கழக அரசும் செய்ய வாய்ப்புள்ளது.

கலைஞர் ஆட்சியில் திரு. திருமலை, இ.ஆ.ப., தலைமையில் அமைந்த பாசனம் மற்றும் நீர்வளக்குழு (Standing Irrigation and Water Resources Committee) மாவட்டம் தோறும் தயாரித்த புத்தக வடிவிலான அறிக்கையை, புதிய தகவல்களை சேர்த்து புதுப்பிக்க வேண்டிய பணியையும் இன்றைய அரசு செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# இந்தியாவிற்கு வழிகாட்டும் திராவிடம்



முதல்வராக பதவியேற்பு நாளில் தன் பெயரை ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ என அறிவித்து ஒரு நொடி நிமிர்ந்து பார்க்கிறார். தமிழகமே தலை நிமிரத் தொடங்கும் தருணமாக அது அமைந்தது.

அரசின் முதல் ஆணை, முதல்வர் கையொப்பம் இடுகிறார். தேர்தல் வாக்குறுதியில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்பினை செயலாக்கும் வகையில், தமிழகம் முழுவதும் உள்ள அரசு போக்குவரத்து கழகத்தின் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம்

செய்யும் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல், பேருந்து பயண அட்டை இல்லாமல் மறுநாள் முதல் பயணம் செய்ய முதல்வர் பிறப்பித்த முதல் ஆணை. சேமிப்பு என்பதைக் கடந்து சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக பெண்கள் முன்னேற்றம், மேம்பாடு (EMPOWERMENT) அடைய வழிவகுக்கும் புரட்சிகர திட்டமாகத் துவங்குகிறது.




**கோ.கருணாநிதி**
பொதுச் செயலாளர்,
அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு


தமிழகத்தின் விடியலுக்கான முழக்கம் என்ற பெயரில் திருச்சியில் திமுகவின் பிரமாண்ட தேர்தல் சிறப்பு பொதுக்கூட்டம் 2021 மார்ச் 7ல் நடைபெற்றது. "ஸ்டாலினின் 7 உறுதிமொழிகள்" என்ற தலைப்பில் தொலைநோக்கு திட்டத்தை, அன்றைய தினம் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதில் சமூக நீதி எனும் உறுதி மொழி சிறப்பாக குறிப்பிடப்பட்டது. ஆம். திராவிட இயக்கத்தின் அடித்தளமே சமூக நீதியில் கட்டமைக்கப்பட்டது தான்.

நீதிக்கட்சியின் ஆட்சியில் வெளியிடப்பட்ட (கம்யூனல் ஜி.ஓ.) ஆணையின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் நாளில் (செப் 16, 2022), அரசின் வேலைவாய்ப்பு, பதவி உயர்வு மற்றும் கல்வியில் சமூக நீதியை உறுதி செய்ய, "சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவை" தமிழ்நாடு அரசு அமைக்கும் என்ற சிறப்புமிகு அறிவிப்பை வெளியிட்டார் முதல்வர். ஒன்றிய அரசு மட்டுமின்றி, வேறு எந்த மாநில அரசும் இதுபோன்ற ஒரு அமைப்பை இதுவரை உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவிப்புக்கு முன்பு, இன்னொரு அறிவிப்பு. தன் வாழ்நாள் முழுவதும் சமூக நீதி, சுயமரியாதை, பகுத்தறிவு மற்றும் சமத்துவம் ஆகிய சித்தாந்தத்தை மக்களிடம் விதைத்திட்ட சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியார் பிறந்த நாள் 'சமூக நீதி நாளாக" கொண்டாடப்படுவதோடு, அது குறித்த உறுதிமொழி அரசு அலுவலர்கள் அனைவரும் ஏற்க ஆணை பிறப்பித்தார்.

தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் என முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தெரிவித்து, அனைவரும் அர்ச்சகராகும் சட்டம் இயற்றினார். நீதிமன்ற தடைகள் இல்லை என்ற நிலையிலும், உரிய பயிற்சி பெற்ற 247 அர்ச்சகர்களுக்கு கடந்த பத்தாண்டு அதிமுக ஆட்சியில், நியமனம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் இல்லை.

தற்போது நமது முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற நூறு நாட்களில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் வரும் கோவில்களில் பயிற்சி பெற்ற 208 அர்ச்சகர்கள் நியமனங்களோடு, ஓதுவாராக பெண் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் பணி நியமனக் கடிதமும் வழங்கப்பட்டது.

1970இல் முத்தமிழறிஞர் கலைஞரால் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் தற்போது 51 ஆண்டுகளுக்கு பிறகு நிறைவேற்றப்பட்டுள்ளது. இது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக நீதி சாதனை மகுடத்தில் சேர்ந்திருக்கும் வைரக்கல் ஆகும்.

2022 ஜனவரி 26 குடியரசு தினத்தன்று, சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பை உருவாக்குவதாக அறிவித்தார் தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த கூட்டமைப்பில் ஒத்த எண்ணம் கொண்ட அரசியல் கட்சியின் தலைவர்கள், சமூக அமைப்புகள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகோள் விடுத்தார். அகில இந்திய அளவில் சமூக நீதி, மாநில உரிமை என்பதே தேசிய அரசியலாக இருக்க வேண்டும் என்பதன் அறிவிப்பாக இதனை அரசியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

மாநில இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓபிசியினருக்கு 27% இடஒதுக்கீடு பெறுவதற்கான போராட்டம் குறித்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "இதற்கு திமுக மகத்தான பங்களிப்பை வழங்கியதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். திமுக மே 2020 இல் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. ஒன்றிய அரசாங்கம்

ஜூலை 2021 இல் மட்டுமே இதை ஏற்றுக்கொண்டது” என்றார்.

கடந்த பத்தாண்டுகளாக மருத்துவப் படிப்பில் அகில இந்திய தொகுப்பு இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு கிடைக்கப்பெறாத இட ஒதுக்கீடு தமிழகத்தைத் தாண்டி இந்தியா முழுமைக்கும் கிடைத்திட சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்ட தமிழ்நாடு முதல்வர் எங்களுக்கும் முதல்வர் என வடமாநிலத்தவரும் பெருமை கொள்கின்றனர்.

> **“திராவிட மாடல் எனும் மக்களுக்கான அரசியலை, அனைவரையும் உள்ளடக்கிய அரசியலை கவனமாக முன்னெடுத்துச் செல்கிறார்.”**

நீட் விலக்கு மசோதாவுக்கு பாஜக அல்லாத ஆளும் மாநிலங்களின் 12 முதல்வர்களுக்கு அக்டோபர் 2021ல் கடிதம் எழுதினார் தமிழக முதல்வர். மாநில அரசுகளின் உரிமையை மீட்டெடுக்க ஒன்றுபட்ட முயற்சிக்கான அவரது வேண்டுகோள் இது என்பது குறிப்பிடத்தக்கது. நீட் விலக்கைத் தொடர்ந்து “கியூட்” எனப்படும் பொது நுழைவுத் தேர்வுக்கு சட்டமன்றத்தில் தீர்மானத்தை முன்மொழிந்து ஏனைய மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது கழக அரசு.

மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்திய தொகுப்பு இடங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு (ஓபிசி) 27 சதவீத இட ஒதுக்கீடு, கிராமப் பகுதிகளில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் உரிமை, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் இதர தொழிற் படிப்புகளில் 7.5 விழுக்காடு குறுக்குவெட்டு ஒதுக்கீடு என அனைத்தையும் சட்டப் போராட்டத்தின் மூலம் பெற்று, ‘ஹாட்ரிக்’ அடித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

சமூக நீதி மட்டுமல்ல, மாநில உரிமையையும் நிலைநாட்டிய செயல்பாடு இது என்பதை ஏனைய மாநிலங்களுக்கும் உணர வைத்துள்ள வெற்றி. திராவிட ஆட்சி முறை என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதைத் தவிர வேறில்லை என்று தெளிவுபடுத்துகிறார் தமிழக முதல்வர்.

முதல்வராக பதவி ஏற்றவுடன், தனது புதுப்பிக்கப்பட்ட ட்விட்டர் கணக்கில், தான் திராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுகிறார். நாடாளுமன்றத்தில் 1962ஆம் ஆண்டு முதல் முறை உரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள், தன்னை ‘திராவிடியன் ஸ்டாக்’ என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். முதல்வரின் ட்விட்டர் பதிவு, தான் அண்ணாவின் கொள்கை வாரிசு என்பதை உணர்த்துவதாக அமைகிறது.

மக்களை பிளவுபடுத்தி ஒடுக்கப்பட்ட மக்களை அதிகார மையத்தில் இருந்து அன்னியப்படுத்தும் சித்தாந்தத்திற்கு மாற்றாக திராவிட மாடல் எனும் மக்களுக்கான அரசியலை, அனைவரையும் உள்ளடக்கிய அரசியலை கவனமாக முன்னெடுத்துச் செல்கிறார் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின்.

கடந்த ஓராண்டு கழக ஆட்சியில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதையெல்லாம் கடந்து இந்தியா முழுமைக்குமான அரசியல் திசை, ‘திராவிட மாடல்’ எனும் சமூக நீதி, சமத்துவ கோட்பாட்டையும், அரசமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவில் கூறப்பட்டுள்ள, இந்தியா, மாநிலங்களின் ஒன்றியம் தான் என்பதை அழுத்தம் திருத்தமாக அனைத்து மாநிலங்களுக்கும் உணர்த்தும் விதமாக, மிகச் சரியாக, தெளிவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதுதான் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக ஆட்சியின் ஓராண்டு நிறைவில் தமிழ் நாட்டுமக்கள் மட்டுமல்ல, வடபுலத்து மக்களும், தலைவர்களும், அறிஞர்களும் அளிக்கும் நற்சான்று.

ஓராண்டு நிறைவு செய்யும் தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக அரசுக்கு நமது வாழ்த்துகள். தொடரட்டும் இந்த சமூக நீதி வெற்றிப் பயணம்.

திராவிடம் வெல்லும் –

இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும். ●


மீண்டும்
மஞ்சப்பை
மீண்டும்
மஞ்சப்பை
MEENDUM
MANJAP PAI

# எழுத்தாளர்களுக்கு இந்திய அளவில் முன்மாதிரி அரசு

தமிழக அரசு, ‘தமிழ் எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம்’ என்றொரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. சாகித்திய அகாதெமி விருது உள்ளிட்ட நான்கு முக்கிய விருதுகளைப் பெற்ற எழுத்தாளர்களில் ஆண்டுக்குப் பத்துப் பேர் வீதம், அவர்கள் விரும்பும் மாவட்டத்தில், விரும்பும் ஊரில் ஐந்து சென்ட் நிலத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்றும், சென்னை மாநகரத்தில் உயர் அதிகாரிகளுக்கான வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கப்படும் குடியிருப்பில் வீடு வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறது தமிழக அரசு.

டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளான வரவிருக்கிற ஜூன் 3ஆம் தேதியன்று திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. இன்றைக்குள்ள கட்டுமான செலவீனங்களையும் கணக்கில் கொண்டு அதற்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையையும் அறிவித்துள்ளது தமிழ் வளர்ச்சித் துறை.

வீடு என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் ஆத்மார்த்தமான இடம். மனித உடலுக்குள் இதயம்போல், புறவாழ்க்கையில் வீடு மனித ஆதர்சம். மூதாதையர்கள் கட்டிய வீட்டில் வாழ முடிந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள். மூதாதையர்களின் வீட்டை விரிவுபடுத்தி, பழுதடைந்த வீடுகளைச் சீரமைத்து வாழ்பவர்கள் குறைந்தபட்ச பாக்கியவான்கள். பழைய வீட்டை இடித்துவிட்டு, அங்கிருந்தே மண்ணெடுத்துப் புதிய வீடு கட்டிக்கொண்டு வாழ்கிறவர்கள், மரபைத் தொலைத்த நிந்தனைக்கு உள்ளாகாதவர்கள்.





**அ.வெண்ணிலா**
எழுத்தாளர்

புதிய மண்ணில், புதிய வீட்டில் வாழ நேர்ந்தவர்கள் புத்தம் புதிய மரபின் முதல் கண்ணியாகிறவர்கள்.

வாழ்நாளில் சொந்தமாக ஒரே ஒரு வீடு கட்டிக்கொள்ள முடியாமல் ஏக்கத்துடன் வாழ்ந்து மறைந்தவர்கள் தான் லட்சக்கணக்கானோர். வாங்கிய வீட்டுக் கடனுக்காக ஆயுள் முழுவதும் கடன் சுமையைச் சுமந்தே தளர்ந்து போனவர்கள் பெரும்பான்மையோர். வீடென்பது எத்தனை இன்பமோ அத்தனை சுமை. வீட்டின் இன்பத்தை அனுபவிக்க பல நெருப்பாறுகளைச் சுமக்க வேண்டியுள்ளது ஒவ்வொருவரும்.

வீடு வெறும் கல்சுவர்களால் ஆனது என்றாலும் அதற்கு கடுமையான விதிகள் உள்ளன. புதிய வழக்கங்கள், நடைமுறைகள், மாற்றுச் சிந்தனைகள், முற்போக்கு எண்ணங்கள் நுழைந்துவிட அனுமதிக்காது. அதற்கென்று காலங்காலமான வழிமுறைகளில் சென்றால் மட்டுமே வீடு சொர்க்கம். நூலிழைத் தவறினாலும் வீடு பெரும் நரகம்.




எழுத்தை விரும்பி ஏற்றுக் கொள்பவர்களைப் பெரும்பாலும் ஏளனமாகப் பார்ப்பதுதான் வீட்டின் இயல்பு. பொருளாதார பலம் கொண்ட எழுத்தாளர்களுக்கும் வீடு நன்மதிப்பைத் தருவதில்லை.

பொதுவாக தமிழகத்தின் எழுத்தாளர்களுக்கு வீட்டில் எழுதுவதற்கும் படிப்பதற்கும் என்று தனி அறை கிடையாது. காற்றோட்டமான, கற்பனையைக் குலைக்காத அமைதியான சூழல் இல்லை. 'என்னுடைய அறை இது. இதில்தான் நான் எழுதவும் வாசிக்கவும் செய்கிறேன்' என்று சொல்கிற சிலர் இன்றைய தலைமுறையில்தான் இருக்கிறார்கள்.

எழுதுவதற்கு நல்ல தாள், நல்ல எழுதுகோல், நல்ல கணினி என்பதெல்லாமே பலருக்கு கனவுதான். எழுத்தாளர்களைக் கொண்டாடும் குடும்பமும் வீடும் தமிழ்ச் சூழலில் அபூர்வம். எழுத்துக்குக் கிடைக்கும் மிகக் குறைந்த அங்கீகாரம், கவனிப்பு, பொருளாதார முக்கியத்துவமின்மையால் எழுத்தாளர்களைக் குடும்பங்கள் அங்கீகரிப்பதில்லை. வீட்டுக்குத் தெரியாத ரகசியக் காரியம்போல் எழுதுகிறவர்களும் உண்டு. 'எழுதுவீங்களா?' என்று குடும்பத்தினர் கேட்கும் கேள்விக்கு, 'என்னமோ கிறுக்குவேன்' என்று தன் பெருமையை வெளிப்படுத்திக் கொள்ளாமல் தன்னைக் கோமாளியாக்கிக் கொள்ளும் எழுத்தாளர்கள் உண்டு.

அரசர்களும் புலவர்களும் கூடி, அமர்ந்து, விவாதம் செய்த நிலம் தமிழ் நிலம். ஆட்சியாளர்கள், கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு ஆதரித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

சங்க மரபின் தொடர்ச்சியாக, தாய்மையின் அணுக்கத்துடன், எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் விதமாக 'கனவு இல்லம்' திட்டத்தை தமிழக அரசு அறிவித்திருக்கிறது அரசு கொடுக்கப் போகிற கனவு இல்லம், எழுத்தாளருக்கு அவர் சொந்தக் குடும்பத்தினர், உறவினர் மத்தியில் நன்மதிப்பையும் பெருமையையும் நிச்சயம் வாங்கித்தரும். அரசு தரும் அங்கீகாரம், எழுத்தாளரின் வீட்டில்




அவருக்கான எழுத்து நடவடிக்கையை மேம்படுத்திக்கொள்ள துணை நிற்கும்.

வீடு என்பது அரசு கொடுக்கும் கொடை மட்டுமல்ல, எழுத்தாளருக்குக் கிடைக்கப் போகும் சுய அடையாளம். மேடைகளில் முழங்கிவிட்டு, சமகால இலக்கியப் போக்குகளை விவாதித்து, நண்பர்களிடம் விடைபெற்று வீடு சென்றால், அங்கே சத்தமின்றி, ஓரத்தில் ஒதுங்கிக்கொள்ள வேண்டியவராகப் பெரும்பாலும் எழுத்தாளர் இருப்பார். எழுத்தாளராக இருக்கும் பெண்களுக்குச் சொல்லவே வேண்டியதில்லை.

கனவு இல்லம் திட்டத்தைப்போல், தமிழ் வளர்ச்சித் துறை, 'இலக்கிய மாமணி' என்ற விருது, ஆண்டுக்கு மூன்று பேருக்கு தலா ரூ.5 லட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது.

இன்றும் ஒரு சிறுகதைக்கு மிகக் குறைந்த தொகையாக ரூ.500, ரூ.1000 கொடுக்கும் இதழ்கள் இருக்கின்றன. பணமே கொடுக்க முடியாத இதழ்களும் உள்ளன. இலக்கியத்துக்காக வழங்கப்படும் விருதுத் தொகைகளில் லட்சத்தைத் தொடுபவை ஒன்றிரண்டுதான்.

விருது என்பது பணத்துடன் மட்டும் தொடர்புடையது அல்ல என்றாலும், விருதுத் தொகை, விருதின் மதிப்பைக் கூட்டுகிறது என்பதுதான் உண்மை. 400 பக்கமுள்ள ஒரு புத்தகத்தை அச்சிட, இன்றைய காலத்தில் குறைந்தது ஒரு லட்சம் தேவைப்படுகிறது.

தமிழ் எழுத்தாளர்களுக்குச் சாகித்திய அகாதெமி உள்ளிட்ட முக்கிய விருதுகள் அறிவிக்கப்பட்டவுடன் முதல்வர் வாழ்த்துச் செய்தியைப் பகிர்வதும், எழுத்தாளர்களைச் சந்திக்க நேரம் ஒதுக்குவதும் இந்திய அளவில் முன்மாதிரி நடவடிக்கைகள்.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன், ஆய்வாளர் பேரா தொ.பரமசிவன், தமிழறிஞர் இளங்குமரனார் ஆகியோரின் மறைவுக்கு, அரசு மரியாதை செய்தது தமிழக அரசின் உயரிய நடவடிக்கையாகும்.

நல்ல எழுத்தும் நல்ல எழுத்தாளர்களும் அங்கீகரிக்கப்படும்போது, நல்ல இலக்கியச் சூழல் உருவாகும். சுதந்திரமான எழுத்தாளர்கள் அதிகரிப்பார்கள். அரசின் அங்கீகாரம் எழுத்தாளரைவிட எழுத்துக்கு முக்கியம். நல்ல எழுத்தை அரசே அடையாளம் காட்டி முன்னிறுத்துவது ஆகச் சிறந்த நடவடிக்கை அல்லவா?

மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களும் முன்னெடுக்கும் எழுத்தாளருக்கு மேன்மை சேர்க்கும் அறிவிப்புகளும் நடவடிக்கைகளும் பாராட்டுக்குரியன. வாழ்த்துக்குரியன.



தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU




பள்ளிக் கல்வித்துறை
முத்தமிழறிஞர்
கலைஞர் திரு. மு.கருணாநிதி
நினைவு நூலகக் கட்டடம், மதுரை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
அவர்களால்
அடிக்கல் நாட்டப்பட்டது.
நாள்: 11.01.2022




# கடல் கடந்த தமிழர்களின் கலங்கரை விளக்கம்

**கோவி.லெனின்**
மூத்த பத்திரிகையாளர்
தமிழ்நாடு அரசின்
இலங்கைத் தமிழர் நலன்
ஆலோசனைக் குழு உறுப்பினர்

தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக உயர்த்துவது என்ற உறுதியுடன் செயலாற்றி வரும் மாண்புமிகு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள தமிழர்களின் நலனையும் தாயுள்ளத்துடன் கவனிப்பதற்கான செயல்திட்டங்களை வகுத்துள்ளது. வெளிநாடுவாழ் தமிழர்களுக்கெனத் தனி வாரியம் அமைக்கப்படும் என்பதை 2011ல் அப்போதைய முதல்வர் கலைஞர் தலைமையிலான அரசு அறிவித்தது. ஆட்சி மாற்றத்தால் அது நிறைவேறவில்லை. 10 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அது செயல்வடிவம் பெற்றுள்ளது.





வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை என்பது உருவாக்கப்பட்டு, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன்மறுவாழ்வுத்துறை அமைச்சர் கே.எஸ். மஸ்தான் அவர்களின் பொறுப்பில் அத்துறை அளிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் என 13 உறுப்பினர்களைக் கொண்ட 'புலம் பெயர் தமிழர் நல வாரியம்' உருவாக்கப்படும் என சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கென சட்ட உதவி மையம் அமைக்கப்பட்டு, தூதரகங்களுடன் தொடர்பினை உருவாக்கி, அயலகத் தமிழர்களின் நலன்காப்பதே இதன் முதன்மை நோக்கமாகும். இதற்காக ஒரு தரவுத் தளம் முழுமையாக உருவாக்கப்படும்.

இந்த வாரியத்தின் மூலதன செலவினமாக 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கும்.

திரைகடலோடி திரவியம் தேடலாம் என்ற நம்பிக்கையுடன் கடல் கடந்து செல்லும் தமிழர்கள் அங்கே எதிர்பாராத விதமாக இறக்க நேரிட்டால், அவர்களின் உடலை இங்கே கொண்டு வருவதில் தொடங்கி, அவர்களுடைய குடும்பத்தின் எதிர்காலம் வரை பெரும் கேள்விக்குறியாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, வெளிநாடு வாழ் தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்தினருக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை ஆகியவற்றை இந்த வாரியம் வழங்கும்.

அதுமட்டுமின்றி, புத்தாக்கப் பயிற்சி, கட்டணமில்லாத் தொலைபேசி, அலைபேசி செயலி, வெளிநாடு வாழ் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கான ஏற்பாடு ஆகிய வசதிகளும் செய்துதரப்படும். பல்வேறு நாடுகளில் செயல்படும் தமிழர் நலச்சங்கங்களை ஒரு

குடையின் கீழ் ஒருங்கிணைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

வெளிநாட்டில் பணியாற்றிவிட்டு தமிழ்நாடு திரும்புவோர் குறுந்தொழில் தொடங்குவதற்காக மானியத்துடன் கடன் பெற்றிட ஏதுவாக, 6 கோடி ரூபாய் வழங்கிட மாண்புமிகு முதல்வர் ஆவன செய்திருக்கிறார்.

வெளிநாட்டில் ஈட்டிய பொருளைக் கொண்டு தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட முன்வருவோருக்கானப் பாதுகாப்பான முதலீட்டுச் சூழல் உருவாக்கப்பட்டு, தங்களின் சொந்த ஊருக்கு நன்மை செய்ய நினைப்போருக்காக 'எனது கிராமம்' திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

அயல்நாடு வாழ் தமிழர்களுக்கானப் பாதுகாப்பு, அவர்கள் வாயிலாக தமிழ் நாட்டுக்கான வளர்ச்சி என்கிற இருவழி உறவுப்பாலம் அமைத்திருக்கிறார் மாண்புமிகு முதல்வர். அதுமட்டுமின்றி, இலங்கையிலிருந்து தாய்த் தமிழகம் நோக்கி வந்துள்ள தமிழர்களின் நலனுக்காக 317.40 கோடி ரூபாயில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

போர்க்காலத்தில் தாய்த் தமிழகம் நோக்கி வந்த இலங்கைத் தமிழர்களுக்காகத் தமிழ்நாட்டில் 106 முகாம்கள் உள்ளன. அகதி முகாம்கள் என அழைக்கப்பட்டு வந்த இந்த முகாம்களை, 'இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்' எனப் பெயர் மாற்றம் செய்து அறிவித்தார் மாண்புமிகு முதல்வர். அது பெயர் மாற்றமாக மட்டும் இருக்கக்கூடாது, செயல் மாற்றமாக உருவாகவேண்டும் என்ற அடிப்படையில் இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதனை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு அமைச்சர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மறுவாழ்வுத்துறை ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை கொண்ட செயல்பாட்டாளர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

2021 நவம்பர் 2ஆம் நாள் வேலூர் மாவட்டம் மேலமொணவூர் மறுவாழ்வு முகாமில், முதல்வரே நேரில் சென்று சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து அனைத்து முகாம்களிலும் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்டோர் இதனை செயல்பாட்டுக்கு கொண்டுவந்தனர்.

குடியிருப்பு வசதி, உள்கட்டமைப்பு மேம்பாடு, கல்வி வசதி, வேலைவாய்ப்பு முகாம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, மாத ஊக்கத்தொகை உயர்வு, சுயஉதவிக்குழு உள்ளிட்ட 12 துறைகள் சார்ந்த திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முகாம்களில் வாழும் 58,688 இலங்கைத் தமிழர்களுக்கும், முகாம்களுக்கு வெளியே தனிப்பதிவில் வசிக்கும் 34,123 இலங்கைத் தமிழர்களுக்கும் அவர்கள் விருப்பப்படி இந்தியக் குடியுரிமை அல்லது தாயகம் திரும்பிட ஏற்பாடு செய்வதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையின் பொருளாதாரச் சூழலால் பாதிக்கப்பட்டு தாய்த் தமிழகம் வருவோருக்கும் பாதுகாப்பினை உறுதி செய்திட மாண்புமிகு முதல்வர் தலைமை யிலான தமிழ்நாடு அரசு உரிய ஏற்பாடுகளை செய்துள்ளது.

ஆண்டுதோறும் ஜனவரி 15ல் அயலகத் தமிழர் நாள் கடைப்பிடிக்கப்படும் என அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்தியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடல் கடந்த தமிழர்களின் நல்வாழ்விற்கு ஒளிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கிறார்.

> **“அயல்நாடு வாழ் தமிழர்களுக்கானப் பாதுகாப்பு, அவர்கள் வாயிலாக தமிழ் நாட்டுக்கான வளர்ச்சி என்கிற இருவழி உறவுப்பாலம் அமைத்திருக்கிறார்”**

# குழந்தைகள் நல அரசு



2021ஆம் ஆண்டில் முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற போது உலகம் கொரோனா காலத்தில் இருந்தது. வெற்றியை கொண்டாடும் வாய்ப்பு தொண்டர்களுக்குக் கூட இல்லை.

அந்தளவுக்கு கொரோனா பேரிடரின் இரண்டாவது அலை உருவாக்கிய பேரவலத்தின் தாக்கம் தமிழ்நாட்டிலும் மோசமாக இருந்தது. தமிழ்நாடு அரசின் முதல்வராக பதவியேற்ற ஸ்டாலின் அவர்கள் தன் முதல் பணியாக கொரோனா ஒழிப்புப் பணியை முடுக்கி விட்டார்.

போர், இயற்கை பேரிடர்கள், பெருந்தொற்று உருவாக்கும் பேரிடர் என எதை எடுத்துக் கொண்டாலும் முதலில் பாதிக்கப்படுகிறவர்கள் குழந்தைகள். சர்வதேச அளவில் குழந்தைகளை கொரோனா பெருந்தொற்றில் சூப்பர் ஸ்பிரெட்டஸ் என வகைப்படுத்தியிருந்தனர். பல காரணங்களுக்காக கொரோனா தொற்றுக்குள்ளாகும் இடத்திலும் தொற்றை பரப்பும் இடத்திலும் குழந்தைகள் இருப்பது இயல்பானது, இயற்கையானது.

குழந்தைகளுக்கென்று தனி வார்டுகளை உருவாக்கி கொரோனா சிகிச்சை முறையை திட்டமிட்டு செய்தது தமிழக அரசு. பெரியவர்கள் சிகிச்சை பெறும் ஒரே இடத்தில் குழந்தைகளையும் அடைத்து வைக்காமல் குழந்தைகளுக்கென்று தனியே சிகிச்சை அறைகளை உருவாக்கி அதற்கான வழி காட்டு நெறிமுறைகளையும் வெளி யிட்டதை முதல் சிறப்பாக நான் பார்க்கிறேன்.

நோய் பாதிப்பு, அதனூடாக உளவியல் பாதிப்பு ஏற்படாத வண்ணம் சிறப்பு மருத்துவர்களும், நிபுணத்துவம் பெற்றவர்களும்

உருவாக்கப்பட்டார்கள். தங்கி சிகிச்சை பெறும் இடத்தில் உணவு உட்பட அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தது அரசு.

கொரோனா பேரிடர் உருவாக்கிய இன்னொரு பேரவலம் பெற்றோரை இழந்த குழந்தைகள். அப்படி பெற்றோரை இழந்த 315 குழந்தைகளுக்கு பதினைந்தே முக்கால் கோடி ரூபாயை அரசு ஒதுக்கியது. அதாவது ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தலா ஐந்து லட்ச ரூபாய் வங்கியில் டெப்பாசிட் செய்து அவர்களின் வாழ்க்கை, கல்வி உரிமையை பாதுகாத்தது அரசு.

அதே போன்று தாய் அல்லது தந்தையை மட்டும் இழந்த 9 ஆயிரத்து 147 குழந்தைகளுக்கு 270 கோடி ரூபாய்க்கு மேல் டெபாசிட் செய்தது. மேலும் 308 குழந்தைகளுக்கு 84 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

கொரோனா பேரிடர் இந்தியா முழுவதையும் ஆட்டிப்படைத்தாலும் இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களும் இது போன்று குழந்தைகளுக்காகத் திட்டமிட்டு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

இழப்புகளையும், மரணங்களையும் திரை போட்டு மறைத்துக் கொண்டிருந்த பல மாநில அரசுகளுக்கு மத்தியில் பேரிடரை எதிர்கொண்டு குழந்தைகளை பாதுகாத்தது முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு.

பெற்றோர் இருவரையும் அல்லது பெற்றோரில் எவரேனும் ஒருவரைக் கூட இழந்து விடும் குழந்தைகளுக்கு பல ஆபத்துகள் உள்ளது. ஒன்று அவர்களின் கல்வி இடை நிற்றல் ஆகி விடலாம் அல்லது பாலியல் ரீதியாக பாதுகாப்பற்ற சூழல் உருவாகும் நிலை ஏற்படலாம். இப்படியான ஆபத்து உருவாவதை கருத்தில் கொண்டு 18 வயது வரை அவர்களின் கல்வி பாதிக்காத வண்ணம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அதிகாரியின் நேரடி கண்காணிப்பின் கீழ் தமிழ்நாடு முழுக்க இந்த குழந்தைகளைக் கொண்டு வந்தது அதன் சிறப்பான செயலாக்கங்களில் ஒன்று. பெற்றோரை இழந்த குழந்தைகள் உயர் கல்வி வரை பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்பது அரசாணை.



**தேவநேயன்**
**குழந்தை உரிமைகள் செயற்பாட்டாளர்**

மேலும், குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமையை தடுக்கும் நோக்கில் போக்சோ சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் அச்சட்டத்தின் கீழ் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் நிதியை வழங்காமல் இருந்து வந்தனர். அப்படி நிதி பெறாமல் இருந்து வந்த குழந்தைகளுக்கு 372 கோடி ரூபாயை ஒதுக்கி நிதி பெறாமல் இருந்து வந்த குழந்தைகளுக்கு வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

இந்தியாவில் 2013 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை உருவாக்கப்பட்டது. ஆனால் இச்சட்டம் பெரிய அளவு செயல்படாமல் இருந்து வந்த நிலையில், இச்சட்டத்தை நிறைவேற்ற இந்த கொள்கையை நடைமுறைப்படுத்த கண்காணிப்புக் குழுவை தமிழ்நாடு அரசு உருவாக்கியது.

மண்டல அளவிலான பல்வேறு அரசுத்துறைகளை ஒருங்கிணைத்து குழந்தைகளின் சமூக நலன் கலந்தாய்வு அரங்கத்தை நடத்தியது. இதில் 35 க்கும் மேற்பட்ட துறைகள் பங்கேற்றன. அதன் மூலம் வளர்ச்சி என்பது குழந்தைகள் நலனோடு தொடர்புடையது என்பதை வலிமையாக உணர்த்தியது. இதிலிருந்துதான் குழந்தைகளுக்கான அடுத்த பத்தாண்டுகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் குழந்தை நேய தமிழ்நாடு என்ற இலக்கை நோக்கி பயணிக்கும் அரசின் செயல் மிகவும் பாராட்டிற்குரியது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இது போன்று திட்டங்கள் இல்லை. மேலும் சில திட்டங்களை குறிப்பாக சுட்டிக்காட்ட முடியும்.

★ குழந்தைகளுக்கான பயிற்சி மையத்தை யுனிசெஃப் அமைப்பின் வழிகாட்டுதலோடு நடத்துவது.

★ கொரோனா உருவாக்கிய பொருளாதார பேரிடர் தனியார் பள்ளிகளில் கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல் 16 லட்சம் மாணவர்களை அரசுப் பள்ளிகளை நோக்கி அழைத்து



வந்துள்ளது. அவர்கள் நம்பிக்கையிழந்து விடக்கூடாது என அரசுப்பள்ளி கட்டமைப்புகளை துரிதமாக சீரமைக்கிறது.

இடை நிற்றலை தடுக்க மாணவர் வருகையை இணையத்தில் பதிவேற்றுவதோடு தொடர்ச்சியாக பள்ளிக்கு வராத குழந்தைகளை அதிகாரிகள், ஆசிரியர்கள் துணையோடு விசாரித்து அவர்களின் பிரச்சனைகளைக் களைந்து மீண்டும் பள்ளிக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள்.

இடை நிற்றலை சரி செய்வதற்காக ‘இல்லம் தேடிக் கல்வி’ திட்டம்; குழந்தைத் திருமணங்களை தடுக்க மாவட்ட நிர்வாகங்களை முடுக்கி விட்டிருப்பது; கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் மிக முக்கியமான அம்சம் பள்ளி மேலாண்மைக் குழுவை உருவாக்குவது.

ஆட்சிக்கு வந்ததும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவை உருவாக்க வேண்டும் என்றார். இந்தக் குழுவில் 75 சதவிகிதம் பேர் அரசுப்பள்ளியில் பயிலும் குழந்தைகளின் பெற்றோர்களாக இருப்பார்கள். அதிலும் தாய்மார்களாக இருப்பார்கள் என்பது இதன் சிறப்பு. உள்ளாட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட இந்த அமைப்பு வெறும் ஏட்டளவில் மட்டுமே முன்பு இருந்தது. ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே பள்ளி மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டது. சமீபத்தில் நடந்த பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் சுமார் 50 லட்சம் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். இது மாபெரும் சாதனை. பள்ளியையும் சமூகத்தையும் இணைக்கும் இந்த நடவடிக்கை பள்ளிக் கல்வியை மேலும் வலுப்படுத்தி விட்டது.

பள்ளிச் சிறார்களை பாலியல் தொந்தரவுகளில் இருந்து பாதுகாக்க ‘மாணவர் மனசு’ என்ற பெயரில் கருத்துப் பெட்டி ஒன்றை உருவாக்கியிருப்பது பெற்றோர்களுக்கு மிகப்பெரிய ஆறுதல். இந்தக் கருத்துப் பெட்டி மூலம் பல கருப்பு ஆடுகள் கைதாகி வருகிறார்கள்.

இது பெண் குழந்தைகளுக்கு மிகப் பெரிய உற்சாகத்தையும் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் மீது மிகப்பெரிய நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது.

வெளிப்படைத் தன்மையோடு இயங்கும் இந்த அரசு குழந்தைகளுக்கான அரசாக பயணிக்கிறது. தமிழ்நாடு குழந்தை நல நாடாக மாறி வருவதன் ஆரம்ப அறிகுறிகள்தான் இவை. நாம் செல்ல வேண்டிய தூரம் நீண்டது அந்த பாதையில் குழந்தைகளை தன் கரம் பிடித்து அழைத்துச் செல்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.


அரசு
TAMIL NADU

# இது சட்டத்தின் ஆட்சி




மன்னராட்சி காலத்தில் உருவாகிய "சட்டத்தின் ஆட்சி" என்ற கோட்பாடு மன்னர் சட்டத்துக்கு மேலானவர் என்று விதைக்கப்பட்டிருந்த கருத்தை மாற்றியமைத்து, இடைக்கால ஐரோப்பிய ஏகாதிபத்திய கொடுங்கோன்மைக்கு ஓரளவு முடிவு கட்டியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவான குழப்பமான அரசியல், சமூக பொருளாதார சூழல்கள் சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.

அரசுத் துறை அல்லது தனியார் துறை என எவையாக இருந்தாலும் சட்டப்படி, சட்டத்திற்குட்பட்டு சமமாக பாவிக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாட்டில் அமைதி, பாதுகாப்பு, அரசியல் நிலைத்தன்மை, பொருளாதார நிலைத்தன்மை, சமூக நீதி மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்து அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவது என்பது சட்டத்தின் ஆட்சி என்பதன் கூறுகளாகும்.

இந்தியத் திருநாட்டில் சட்டத்தின் ஆட்சி என்பது அரசமைப்புச் சட்டம் கூறு 13 இல் காணப்படுகிறது. அதன்படி சட்டத்தின் ஆட்சி என்பது "நாட்டின் சட்டம் தான்" (Law of Land) என காணப்படுகிறது. அந்த சட்டங்களின்படி தான் அரசும், மக்களும் செயல்படுதல் வேண்டும். மேலும் இந்திய அரசமைப்புச் சட்டம் இந்திய நாட்டு சட்டத்தின் படி செயல்படக்கூடிய/அமைக்கப்பட்டிருக்கின்ற நாடாக இருக்க வேண்டும் என வரையறுத்துள்ளது.

அதன்படி அரசமைப்புச் சட்டம் தான் ஒரு நாட்டின் உயர்ந்த சட்டம் என்றும் மக்களுக்கான சட்டங்கள் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் வாயிலாக உருவாக்கப்பட்டு சமமாக செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் தெளிவுபடுத்துகிறது.



வழக்கறிஞர்
**கண்ணதாசன்**
சென்னை உயர்நீதிமன்றம்

ஆனால் பல்வேறு இனக்குழுக்கள், வேறுபட்ட பண்பாடுகள், மொழிகள் கொண்ட இந்தியத் திருநாட்டில் மாநிலங்கள், 'ஒன்றிய அரசால் சமமாக நடத்தப்படுகிறதா?' என்றால் 'இல்லை' என்ற வேதனையான பதில் தான் கிடைக்கிறது.

வடமாநிலங்களில் குறிப்பாக சில மாநிலங்களின் பொருளாதார பங்களிப்பு மோசமாக இருந்தாலும் அவற்றிற்கு ஒதுக்கப்படும் நிதியையும், ஒன்றிய அரசுக்கு அதிக நிதி வருவாய் அளிக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மற்றும் திட்டங்களையும் ஒப்பீடு செய்தால் அங்கு சமநிலை இல்லை என்பதையும் சட்டத்தின் ஆட்சி என்ற கூறு செயல்படவில்லை என்பதையும் காணலாம்.

முதலாம் உலகப்போருக்குப் பின்னர் தமிழகத்தில் எழுந்த திராவிட இயக்கம் சமூக நீதிக் கோட்பாட்டை முன்னெடுத்து மக்களிடையே கட்டப்பட்டிருந்த வேறுபாடுகளை களைந்து கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு என்ற கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தி சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படை கருத்துக்கு வலு சேர்த்தது.

அந்த சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தினை அதாவது மக்கள் அனைவரும் சமமானவர்கள், அவர்கள் அனைவருக்கும் சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும், குறிப்பாக தமிழ் நாட்டில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், மகளிர் ஆகியோர் அதிகாரத்தில் பங்கெடுத்து சட்டங்களை இயற்றும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ஆட்சி 1967இல் அமைந்தது.

அது முதற்கொண்டு பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், அவர்களது வழியில் தன்னிகரற்ற முறையில் தமிழ்நாட்டின் முதல்வராக 07.05.2021இல் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டத்தின் ஆட்சியை தமிழகத்தில் சிறப்பாக பேணி வருகிறார்.

> **மாநிலங்கள், 'ஒன்றிய அரசால் சமமாக நடத்தப்படுகிறதா?' என்றால் 'இல்லை' என்ற வேதனையான பதில் தான் கிடைக்கிறது**

தமிழ்நாட்டில் மகளிர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் கடுமை, வெளிப்படையான ஆட்சி, சட்டம் ஒழுங்கு காப்பதில் தனித்துவம், மக்கள் குறை தீர்ப்பதற்கென தனித்துறை, இளைஞர்கள் திறன் மேம்பட நான் முதல்வன் திட்டம் போன்றவை சட்டத்தின் ஆட்சிக்கு வழிகோலுகிறது. மகளிர் முன்னேற்றத்திற்காக கட்டணமில்லா பேருந்து பயணம் என்பது அனைத்து மகளிருக்கும் சமமானது.

அதுமட்டுமல்லாமல் மாணவர்கள் இடையே சமமின்மையை ஏற்படுத்திய "நீட் தேர்வு" விலக்கப்பட வேண்டும், "CUET" என்னும் கலை அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்கு பொது நுழைவுத் தேர்வுக்கு எதிரான சட்டப்பேரவை தீர்மானம், மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காத போராட்டங்கள், தமிழ்நாட்டின் உரிமைகளை சட்டப்படி பாதுகாக்கும் சட்டப் போராட்டங்களை மேற்கொண்டு இந்தியத் திருநாட்டில் சட்டத்தின் ஆட்சி தான் நடைபெற வேண்டும் என துடிப்புடன் செயல்பட்டு வரும் நமது தமிழக முதல்வரின் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற ஓராண்டு நிறைவு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல் உலக நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் முதன்மையானதாக்க முயன்று திறம்பட ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு பெருமிதமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ●

# காலநிலை மாற்றமும் வேளாண் நிதிநிலை அறிக்கையும்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு மூன்று அடிப்படைப் பிரச்சனைகளை எதிர் கொண்டுள்ளது.

1) அதிகரித்து வரும் மனிதநேயமற்ற செயல்பாடுகளால் உருவாகி வரும் சமூக முரண்பாடுகள்:

2) அதிகரித்து வரும் பொருளாதார முரண்பாடுகள்:

3) காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவு காரணமாக உருவாகி வரும் சூழலியல் முரண்பாடுகள்.

இந்த மூன்று முரண்பாடுகளும் ஒன்றோடு ஒன்று கலந்துள்ளது. இப்படி பல சவால்களை எதிர் கொண்டுள்ளது தற்போதைய தமிழக அரசு.

சூழலியல் முரண்பாடுகளில் விவசாயம் சார்ந்த பிரச்சனைகள் பெருவாரியாக உள்ளது. குறிப்பாக காலநிலை மாற்றம் காரணமாக உருவாகி வரும் புதிய சூழல், அதிகரித்து வரும் இயற்கை பேரிடர்கள், நீர் பற்றாக்குறை, நிலத்தடி நீர் அளவின் குறையும் தன்மை, மண் தன் இயற்கை தன்மையை இழந்து வருவது, பருவ மழையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், இப்படி பல பிரச்சனைகள் உள்ளன.

இவற்றோடு ஏற்கனவே உள்ள விவசாயிகளின் சமூக பொருளாதார பிரச்சனைகள், என வேளாண்மை பல சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இவற்றுக்கான ஒற்றை தீர்வு என்று எதுவும் இல்லை. பலமுனைகளில் தீர்வு நோக்கி நகர வேண்டும். அத்தகைய முன்னெடுப்புகளை தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை கூறியுள்ளது வரவேற்க வேண்டிய அம்சமாகும்.



வழக்கறிஞர்
**மு.வெற்றிச்செல்வன்**
பூவுலகின் நண்பர்கள்

தற்போதைய அரசு, பொறுப்பேற்ற உடன், விவசாயத்திற்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என அறிக்கை வெளியான போதே அதனை வரவேற்றோம். அதேபோல காலநிலை மாற்றத்திற்கான தனி அமைச்சம் உருவாக்கப்பட்டதும் முக்கிய முன்னேற்றம் என்றே கூறலாம்.

காரணம், நம் எதிர்காலம் என்பது இனி காலநிலை மாற்றம் உருவாக்கும் புதிய சூழலில் தான் இருக்க போகிறது. பேரிடருக்குள்ளாக தான் நாம் வாழப் போகிறோம். உணவு உற்பத்தி செய்ய போகிறோம். இனி இயல்பு வாழ்க்கை என்பதே பேரிடருக்குள்ளாகத் தான் இருக்கப் போகிறது. இந்த எதிர்காலத்தை கணக்கில் கொண்டு நம்முடைய திட்டங்களை வகுக்க வேண்டும்.

தற்போதைய தமிழக அரசிடம் இந்த எதிர்கால பார்வை இருப்பதால் மட்டுமே காலநிலை மாற்றம் குறித்த பல முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடிகிறது. அதுவும் காலநிலை மாற்றமும் விவசாயத்திற்கும் உள்ள தொடர்பை புரிந்து கொண்டு திட்டம் தீட்ட வேண்டிய பொறுப்பு தமிழக அரசிற்கு உள்ளது. இந்த பொறுப்பை நிதிநிலை அறிக்கை வெளிப்படுத்துகிறது.

14.08.2021 அன்று வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் முதலாவது வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார். பல முக்கிய அறிப்புகளை கொண்டு இருந்தது இந்த நிதிநிலை அறிக்கை.

★ கோயம்புத்தூரில் உள்ள வளங்குன்றா வேளாண்மைக்கான துறை 'நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்' என பெயர் மாற்றம் செய்து, நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மைக்கான ஆராய்ச்சி மையம் உருவாக்கி இயற்கை வேளாண்மை தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்த ரூ.3 கோடி.

★ மண் வளத்தை பாதுகாத்து, ஆரோக்கியமான உணவை மக்களுக்கு வழங்குவதற்காக இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.33.03 கோடியில் செயல்படுத்தப்படும்.

★ பாரம்பரிய நெல் வகைகளைத் திரட்டி, பாதுகாத்து, விதை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் வகையில், நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்.

★ நமது மாநில மரமான பனை மரத்தை நம்பி உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, பனை தொடர்பான பல்வேறு தொழில்களை ஊக்குவிக்க, ரூ.3 கோடியில் பனை மேம்பாட்டுத் திட்டம். தேவையில்லாமல் பனை மரத்தினை வெட்டும் நடைமுறை நெறிமுறைப்படுத்தப்படும்.

★ காவிரி டெல்டா வேளாண் பெருமக்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வு வளமாக, திருச்சி – நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இடையேயான பகுதியை வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக (Agro Industrial Corridor) அறிவிக்கை.

★ வேளாண்மைத் துறையில் இயற்கை வேளாண்மைக்கென்று தனிப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

மேற்கண்ட இந்த அறிவிப்புகள் அனைத்தும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இந்த அறிவிப்புகள் அனைத்தும் நம்மாழ்வார், நெல் ஜெயராமன் ஆகியோரின் பல்லாண்டுகால உழைப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும் இயற்கை வேளாண்மை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு புதிய ஊக்கத்தையும் அளிக்கும்.

தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் ஹெக்டர் பயிரிடச் செய்து, தற்போதுள்ள நிகர சாகுபடிப் பரப்பான 60 விழுக்காடு என்பதை 75 விழுக்காடாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அறிவிப்பு




வரவேற்கத்தகுந்தது மட்டுமில்லாமல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக இது தமிழ்நாட்டை மாற்றும்.

இருப்பினும் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களின் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதையும் கருத்தில் கொண்டு பயிரிடும் பரப்பை அதிகரிக்க வேண்டும் எனக் கோருகிறோம். மேலும் அதிக தண்ணீர் தேவைப்படாத பயிர்களை ஊக்குவிக்க வேண்டும்.

19.03.22 அன்று வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் சமர்ப்பித்த இரண்டாவது வேளாண் நிதி நிலை அறிக்கையிலும் பல முக்கியமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் தனது உரையில் “நெல் ஜெயராமன் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் வாயிலாக, பாரம்பரிய நெல் இரகங்கள் அரசு விதைப்பண்ணைகளில் 200 ஏக்கரில் பயிரிடப்பட்டு, இதுவரை 59 மெட்ரிக் டன் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், காலநிலை மாறுபாடுகள் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே உலக அளவில் மிகப்பெரும் சவாலாக உள்ளதாகக் குறிப்பிட்டார். ஐ.பி.சி.சியின் ஆறாவது பணிக்குழு அறிக்கை சுட்டிக்காட்டிய பல விஷயங்கள் குறித்தும் தனது உரையில் பேசினார்.

குறிப்பாக தமிழ் நாட்டின் புவியியல் இருப்பிடத்தின் அமைப்பின் படி, உலகளாவிய காலநிலை மாற்றத்தின் தாக்கம் பெரிதளவு உணரப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள 29 மாவட்டங்கள் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளுக்கு உள்ளாகும் என்று ஆறாவது காலநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதால், வேளாண்மையில் அதன் பாதிப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகிறது” என்றும் பேசினார்.

காலநிலை மாற்றத்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. இதனைத் தாங்கக் கூடிய மாற்றுப்பயிர் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் அறிவித்தார்.

காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை குறைக்க இயற்கை வேளாண்மையின் பங்கு அதிகமாக இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் சர்வதேச அரசுகளின் காலநிலை மாற்றத்திற்கான அமைப்பின் (IPCC) ஆய்வு அறிக்கைகள் இதனை வலியுறுத்துகிறது. பூச்சி மருந்துகள் உள்ளிட்ட ரசாயனங்களை பயண்படுத்தும் விவசாய முறை காரணமாக மீத்தேன் வெளியேற்றம் நிகழ்கிறது. இது புவி வெப்பமயதாலை அதிகப்படுத்துகிறது. எனவே நாம் இயற்கை வேளாண்மையை அதிகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

> **மாநில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது மிகவும் தேவையான ஒன்று**

அந்த வகையில், இயற்கை வேளாண்மை, இடுபொருட்கள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ரூ.71 கோடி மதிப்பில் மாநில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது மிகவும் தேவையான ஒன்று. இதன் மூலம் இயற்கை வேளாண்மைக்கு புத்துயிர் கிடைக்கும்.

அதுபோலவே

- தோட்டக்கலை பயிர்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.30 கோடி.
- மரம் வளர்ப்புத் திட்டத்திற்காக ரூ.12 கோடி.
- காய்கறிகளில் பாரம்பரிய ரகங்களை மீட்டெடுக்க ரூ.2 கோடி
- பனை மேம்பாட்டிற்காக ரூ.2.65 கோடி.
- நீடித்த நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பிற்காக 65 கோடியே 65 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு.
- மயிலாடுதுறையில் புதிதாக மண் பரிசோதனை நிலையம் அமைக்க 75 லட்சம்
- உயர்தர உள்ளூர் இரகங்களை பிரபலப்படுத்துவதற்கான கண்காட்சிகளுக்காக (Genetic Diversity Fairs) 50 லட்சம்.
- முதலமைச்சரின் சூரியசக்தி பம்பு செட் திட்டத்திற்காக 3,000 பம்பு செட்டுகள் – ரூ.65.34 கோடி மற்றும் 145 சூரியசக்தி உலர்த்திகள் ரூ.3 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகள் இயக்கம்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் உழவர் சந்தையில் மாலையில் சிறுதானியங்கள், பயறுவகைகளை விற்பனை செய்ய அனுமதி.
- தோட்டக்கலைப் பயிர்களில் பாரம்பரிய இரகங்களை மீட்டெடுத்தல்.

என்பது போன்ற மேற்கண்ட அறிவிப்புகள் இயற்கை வேளாண்மை சார்ந்தும், விவசாயிகளின் நலம் சார்ந்தும் அறிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள். இதனை தொடர்ந்து ஊடுபயிர் சாகுபடி, வனம் சார்ந்த விவசாயம் போன்ற அறி விப்புகளும் உள்ளன.

இப்படி எதிர்கால உணவு உற்பத்தியை கணக்கில் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ள நிதி நிலையாக இதனை பார்க்க வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் 2050ம் ஆண்டில் தென்னிந்தியாவில் வேளாண் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் என அண்மையில் வெளியான ஐ.பி.சி.சியின் இரண்டாவது பணிக்குழு அறிக்கை எச்சரித்துள்ளது. இந்த நிலையில் அதிகம் தண்ணீர் மற்றும் ரசாயனங்கள் தேவைப்படாத இயற்கை வேளாண்மை, சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பதை நாம் நிச்சயமாக வரவேற்க வேண்டும்.

# மரபில் மலர்ந்த மாற்று அரசியல்




ஒரு தலைவரை மதிப்பிடுவதென்பது தராசைக் கையிலேந்தி எடைக்கற்களைத் தேடும் வேலையன்று; உலகளாவிய அளவில் சமகாலத்தில் மாறி வரும் மதிப்பீடுகளின் பாதையில் அவர் எந்த இடத்தில் நின்று கொண்டிருக்கிறார் என்பதை வைத்தே ஒரு தலைவரை நாம் மதிப்பிட முடியும்.

கட்சி நிர்வாகம், அரசு எந்திரத்தோடு இணைந்த நிர்வாகம் ஆகிய இரண்டிலும் தன் திறன்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த காலங்களிலேயே நிரூபித்து விட்டார். இந்த ஓராண்டு ஆட்சியைப் பொறுத்தவரை அவர் சில அரசியல் விழுமியங்களை எல்லோருக்கும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். நான் அவற்றையே மிக முக்கியமானதாகக் கருதுகிறேன்.

முதல்வர் அவர்களின் ஓராண்டு ஆட்சியை சமூகநீதி சார்ந்த திட்டங்களின் அடிப்படையில் ஐம்பதாண்டு கால திராவிட ஆட்சியின் நீட்சி என்று சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறலாம்.

பெண்கள் இலவசமாக நகரப் பேருந்தில் பயணிப்பது என்கிற ஒரே விஷயத்தை எடுத்துக் கொள்வோம். எல்லா காலங்களிலும் பயணம் என்பது வெறுமனே இடங்களின் தூரத்தைத் தாண்டுவதன்று; சில பயணங்கள் இடங்களையும்



பேரா.முனைவர்
**முகம்மது ரபீக்** என்ற
**மானசீகன்**

தாண்டி உறைந்திருக்கிற காலத்தைத் தாண்டும் தன்மை கொண்டவை. பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட மிதிவண்டிகள் அப்படிப்பட்ட பயணத்திற்கான குறியீடு.

மிதிவண்டிகளில் பயணித்து பள்ளிக்குப் போன சிறுமிகள் இன்று பெருநகர அலுவலகங்களில் பணியில் இருக்கலாம்; அல்லது அந்த உயர்ந்த வாய்ப்பைத் தவறவிட்டவர்கள் சொற்பமான சம்பளத்திற்காக கூலி வேலை செய்ய பக்கத்து கிராமங்களுக்கு வேலைக்குப் போய்க் கொண்டிருக்கலாம்.

அவர்களின் பயணச் சுமையை இன்றைய அரசு நீக்கியிருக்கிறது. மிதிவண்டிப் பயணத்தின் அனுகூலமோ, இழப்போ எதுவானாலும் கட்டணமில்லாப் பேருந்து பெண்களின் வாழ்வை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்கிறது. இதுதான் திராவிட மாடலின் தனித்தன்மை.

ஆனால் பிறரிடம் காண முடியாத தனித்தன்மைகளையும் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் ஓராண்டு நிர்வாகத்தில் காண முடிகிறது. அவரைச் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் அவர் மரபில் மலர்ந்த மாற்று அரசியல்வாதி. 'மாற்று' என்கிற பெயரில் சிலர் முன்வைத்த கானல் நீரையும், மதவெறி சுனாமியையும் நிராகரித்து மக்களே தேடிக் கண்டடைந்து தூர் வாரிய உள்ளூரின் பழைய ஊருணி அவர்.

அனைத்து அடுக்குகளிலும் கண்ணுக்குத் தெரியாமல் அதிகார அரசியலின் நுட்பமான வலையிருக்கிறது. இந்த வலை சாமானியர்களை கொசுவாக வெளியே தள்ளி அதிகாரத்தின் மொத்த ருசியை மீனாக அள்ளிக் கொள்ள உதவுகிறது. முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மிக நுட்பமாக இந்த வலையை அறுத்தெறிந்திருக்கிறார்.

மக்களாட்சி, சமூக நீதி,

> **“அவரைச் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் அவர் மரபில் மலர்ந்த மாற்று அரசியல்வாதி”**

சமத்துவம் ஆகியவை அரசின் நலத்திட்டங்களோடு மட்டும் தொடர்புடையதல்ல. அவை அரசின் எல்லாச் செயல்பாடுகளிலும் பிரதிபலிக்க வேண்டும் என்கிற கனவை நோக்கி முதல்வர் நகர்கிறார்.

ஏராளமான இடர்பாடுகளையும், உள் தடைகளையும் கொண்ட செங்குத்தான பாறையில் முதல்வர் முதல் படிக்கட்டை உருவாக்க முயன்றிருக்கிறார். தமிழகத்தின் நீண்ட காலப் பெருமிதங்களைத் தொடர முற்படும் அதே நேரத்தில் அவர் உருவாக்க நினைக்கும் சுய விமர்சனத்தின் முதல் எட்டு இது.

கொள்கை என்பது எந்த அளவுக்குக் கட்சிக்கு முக்கியமோ அதே அளவுக்கு அந்தக் கட்சி ஆட்சியில் அமர்கிற போது சகிப்புத் தன்மையும், பன்மைத்தன்மையும் முக்கியம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனை நன்கு உள்வாங்கிக் கொண்டுதான் 'எனக்கு வாக்களிக்காதவர்களும் வருத்தப்படும் வண்ணம் என் ஆட்சியின் செயல்பாடுகள் இருக்கும்' என்று குறிப்பிட்டார்.

அவை வெறும் வெற்றித் தருணச் சொற்களாகக் காற்றில் பறந்து விடாமல் தொடர்ந்து நிர்வாகத்தில் பின்பற்றி வருகிறார். தமிழகத்தைப் பொறுத்தவரை 2021 என்பது பாதை மாற்றுக் காலம் (transition period) அதனை வேறு எவரையும் விட முதல்வர் நன்கு உணரந்திருக்கிறார்.

பழைய பாதையின் அதே இலக்குதான் தன் இலக்கும்; ஆனால் இந்தப் பாதையின் சவால்கள் வேறு என்பதை நன்குணர்ந்த ஓட்டுநரின் கையில் தமிழகம் பாதுகாப்பாகப் பயணித்துக் கெண்டிருக்கிறது என்பதற்கான சாட்சியே இந்த விடியலின் முதலாண்டு.

# தமிழ்நாட்டின் பொன்னாள்..!

நமது மாண்புமிகு முதல்வர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, கடந்த ஓர் ஆண்டில் தமிழக மக்களின் எதிர்பார்ப்புக்கும் அதிகமான சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. அவை எல்லாவற்றிலும் முக்கியமானதாக நான் கருதுவது "இது என் கனவுத் திட்டம்" என்று முதல்வராலேயே குறிப்பிடப்பட்ட 'நான் முதல்வன்' திட்டம்.

ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி சாதனையாளர்களாக நாட்டுக்கு வழங்கிடும் அற்புதமான திட்டம் 'நான் முதல்வன்' திட்டம்.

"நீ எவ்வளவு பின்தங்கிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும்கூட, உயர்வான இலக்கு நிர்ணயித்து, சாதுர்யமாக உழைத்தால் உனது வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது" என்ற நம்பிக்கையை நம் மாணவச் செல்வங்களிடம் உருவாக்குவதே, இந்த திராவிட மாடல் திட்டத்தின் சாராம்சம்.

ஒப்பீட்டு ரீதியாகச் சொன்னால், அமெரிக்காவின் சாதனைகளுக்கெல்லாம் அடித்தளமாக இருக்கும் சுய முன்னேற்ற இயக்கத்தைப் போன்ற ஒரு பிரமாண்டமான சுய முன்னேற்ற இயக்கத்தை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்துள்ளது இந்த திட்டம்.

வெறும் 500 ஆண்டுகள் வரலாறு கொண்ட அமெரிக்கா, இன்று உலகமே அண்ணாந்து பார்க்கும் சாதனையாளர்களை








**சுசி திருஞானம்**
ஆசிரியர், கிட்ஸ் புன்னகை மற்றும் ஜீனியஸ் புன்னகை கல்வி மாத இதழ்கள்

உருவாக்கியதன் ரகசியம் என்ன? மென்பொருள் துறை, வாகனத்துறை, அறிவியல் கண்டுபிடிப்புகள், விண்வெளித்துறை, ஊடகத்துறை, பங்குச் சந்தை என எதை நோக்கினாலும் அமெரிக்கர்கள் கொடிகட்டிப் பறப்பது எதனால்?

கல்வி நிறுவனங்களுக்கு இணையாக, அங்கே இளைஞர்களை சாதிக்கத் தூண்டும் சுய முன்னேற்ற இயக்கம் உயிர்ப்புடன் செயல்படுகிறது. பாடப் புத்தகங்களைத் தாண்டி, வாழ்வியல் திறன்களை வளர்த்துக்கொள்ள வழிகாட்டுகிறது இந்த இயக்கம். தன்னம்பிக்கை, பெரிதினும் பெரிதான இலக்கு நிர்ணயித்தல், நேர நிர்வாகம், சாதுர்யமாக வேலை செய்யும் முறை, விடாமுயற்சி போன்ற வாழ்வியல் திறன்களை மாணவப் பருவத்திலேயே பயிற்றுவிக்கிறது இந்த இயக்கம்.

சீனாவில் முரட்டு சிறுவனாக இருந்த புரூஸ்லீ, அமெரிக்காவுக்கு வந்தபின், இந்த சுய முன்னேற்ற இயக்கத்தின் தாக்கத்தினால் உந்துதல் பெற்று, உலகமே வியந்துபோற்றும் ஹாலிவுட் சூப்பர் ஸ்டாராக உயரமுடிந்தது.

"The Law of Success", "Think And Grow Rich" போன்ற புத்தகங்களை எழுதிய மகத்தான சுயமுன்னேற்ற எழுத்தாளர் நெப்போலியன் ஹில் 'திட்டவட்டமான முதன்மை லட்சியம்' (Definite chief aim) என்ற அற்புதமான வாழ்வியல் உத்தி பற்றி குறிப்பிட்டுள்ளார். "தனது எதிர்கால வெற்றி இலக்கை ஒருவன் மிகவும் துல்லியமாக தீர்மானித்து, அதனை எழுதிவைத்துக் கொண்டு, அதைநோக்கி முயற்சி செய்தால் அதனை அடைவது நூறு சதம் சாத்தியமே" என்று நெப்போலியன் ஹில் எழுதியுள்ளார்.

நெப்போலியன் ஹில் லின் வழிகாட்டுதலை அப்படியே பின்பற்றினார் புரூஸ்லீ! 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு நாள், புரூஸ்லீ ஒரு கடிதம் எழுதினார். 28 வயதில் புரூஸ்லீ எழுதிய கடிதம் யாருக்கு தெரியுமா?



தனக்குத் தானே கடிதம் எழுதிக்கொண்டார் அவர்! கடிதத்தின் தலைப்பு "எனது திட்டவட்டமான முதன்மை லட்சியம்". கடிதம் இப்படி எழுதப்பட்டுள்ளது:

"புரூஸ்லீ ஆகிய நான் அமெரிக்காவிலேயே அதிகம் சம்பளம் வாங்குகிற ஆசிய சூப்பர் ஸ்டாராகத் திகழ்வேன். இதற்காக உலக மக்களெல்லாம் வியந்துபோற்றக்கூடிய அளவுக்கு எனது தற்காப்பு சண்டைக்கலை திறமைகளைக் காட்டி நான் உழைப்பேன். 1970ஆம் ஆண்டின் துவக்கத்தில் இருந்து நான் உலகப் புகழ் பெறுவேன். 1980 இறுதிக்குள் நான் 1,00,00,000 டாலர்கள் சம்பாதிப்பேன். எனது வாழ்கையை நான் சந்தோஷமாகவும் முழு திருப்தி யோடும் ரசித்து வாழ்வேன். இப்படிக்கு புரூஸ்லீ"

இந்தக் கடிதத்தை எழுதும்போது புரூஸ்லீ இரண்டு குழந்தைகளின் தகப்பனாக வறுமையோடு போராடிக் கொண்டிருந்தார் என்பது இங்கே முக்கிய விஷயம். அடுத்த சில ஆண்டுகளில் தான் எழுதியதை சாதித்துக்காட்டினார் அவர்.

> **மாணவர்கள், இளைஞர்களை முதல்வர்களாக மாற்றும் இந்தத் திட்டத்தை எனது பிறந்த நாளில் தொடங்கி வைக்கிறேன். இந்நாள் என் வாழ்வின் பொன்னாள்!**

புரூஸ்லீ மட்டுமல்ல, பில் கிளிண்டன், ஆண்ட்ரே அகாசி, மைக்கேல் ஜோர்டன், ஓப்ரா வின்ப்ரே, பில் கேட்ஸ், ஸ்டீவ் ஜாப்ஸ், மார்க் சுகர்பெக், எலான் மஸ்க் உள்ளிட்ட எண்ணிலடங்கா சாதனையாளர்களை புடம்போட்டு உருவாக்கியது அமெரிக்காவில் உள்ள சுய முன்னேற்ற இயக்கம்தான்.

அதேபோன்ற ஓர் உயிர்ப்புள்ள சுய முன்னேற்ற இயக்கத்தை 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக, தமிழ்நாட்டில் தொடங்கிவைத்துள்ளார் நமது முத்தான முதல்வர்.

- மாணவர்களுக்கான தன்னம்பிக்கைப் பயிற்சி
- மாணவர்கள் தமது தனித்திறன்களை அடையாளம் கண்டு, மேம்படுத்த வழிகாட்டுதல்
- உயர்கல்வி வாய்ப்புகள், வெளிநாட்டு படிப்பு வாய்ப்புகள் குறித்து வழிகாட்டுதல்
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறந்த உரையாடல் பயிற்சி
- உடல்நலம் மற்றும் உடல் பொலிவு குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள்
- அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்புகளை பெறுவதற்கு உதவி

என பட்டியலிடப்பட்டுள்ள 'நான் முதல்வன்' திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் அனைத்தும் முழுவீச்சில் நடைமுறைக்கு வரும்போது, தமிழ்நாட்டில் பல லட்சம் இளைஞர்கள் சாதனையாளர்களாக மாறி சரித்திரம் படைப்பார்கள்.

கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள் இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதனை மாபெரும் வெற்றிபெறச் செய்ய வேண்டும். 10 ஆண்டுகளுக்குப்பின் இந்த திட்டத்தின் தாக்கம், உலகமே வியந்து போற்றக்கூடியதாக இருக்கும்,

'நான் முதல்வன்' திட்ட தொடக்கவுரையில் "தமிழக மாணவர்கள், இளைஞர்களை முதல்வர்களாக மாற்றும் இந்த திட்டத்தை எனது பிறந்த நாளில் தொடங்கி வைக்கிறேன். இந்நாள் என் வாழ்வின் பொன்னாள்!" என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

'நான் முதல்வன்' திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட நாள், 'தமிழ் நாட்டின் பொன்னாள்..!' என்று சுயமுன்னேற்ற இயக்க ஆர்வலன் என்ற வகையில் நான் தலை நிமிர்ந்து சொல்வேன்.


Guidance
TamilNadu
LuLu
GROUP INTERNATIONAL

# முதல்வர் பெற்ற மூன்று வெற்றிகள்




ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் மத்திய அரசுப் பணிகளிலும் தாழ்த்தப்பட்ட, மலைசாதி மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதே தவிர, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை கொடுக்க, மத்தியில் மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டது. இந்தக் குழு இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, எந்தெந்தச் சாதியினர் கல்வியில் சமூகத்தில் பின்தங்கியுள்ளனர் என்பதை ஆய்வு செய்து பட்டியலிட்டது. பின்னர், இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது, 1980



இரா.குமார்
பத்திரிகையாளர்

ஆம் ஆண்டு, டிசம்பர் 31 ஆம் தேதி அறிக்கையை அக்குழு தாக்கல் செய்தது.

கல்வியில், சமூகத்தில் பின்தங்கியுள்ளவர்களுக்கு சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க மண்டல் கமிஷன் அறிக்கை பரிந்துரை செய்தது. இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்கவே 2 ஆண்டுகள் எடுத்துக்கொண்டது அப்போதைய ஒன்றிய அரசு. பின்னர் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

வி.பி.சிங் அவர்கள் பிரதமர் ஆனபோது மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த இதுவே சரியான தருணம் என்பதை உணர்ந்தார் கலைஞர்.

வி.பி.சிங் அவர்களிடம் தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, மண்டல் பரிந்துரைப்படி, கல்வியில் சமூகத்தில் பின்தங்கியுள்ளவர்களுக்கு சாதி அடிப்படையில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்க, சட்டம் கொண்டுவரச் செய்தார்.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஏழாம் தேதி, மண்டல் கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27% இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் வி.பி. சிங் வெளியிட்டார்.

கலைஞர் எடுத்த பெரும் முயற்சியால் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடதுக்கீடு கிடைத்தது. இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூகநீதி வழங்கினார் கலைஞர்.

கலைஞரைப் போலவே இந்தியா முழுமைக்கும் இப்போது சமூகநீதி வழங்கியுள்ளார் முதல்வர் ஸ்டாலின். ஆம்; இதற்கான சட்டப் போராட்டங்களில் மூன்று வெற்றிகளைப் பெற்றுள்ளார் அவர்.

1. இந்தியா முழுவதும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவப்படிப்புக்கான இடங்களில் 15 சதவீத இடத்தை ஒன்றிய அரசுக்கு வழங்க வேண்டும்.

இந்தியா முழுவதும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் இருந்து ஒன்றிய அரசுக்கு நாலாயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இந்த நாலாயிரம் இடங்களில், 27 சதவீத இட ஒதுக்கீடு அடிப்படையில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களை பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்க வேண்டும். இப்படி இடஒதுக்கீடு வழங்க ஒன்றிய அரசு மறுத்து வந்தது.

சமூகநீதிக்கு எதிரான மத்திய அரசின் இந்த செயலை எதிர்த்து திமுக வழக்கு தொடர்ந்தது. உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டப் போராட்டம் நடத்தினார் முதல்வர் ஸ்டாலின். மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் இருந்து ஒன்றிய அரசுக்கு வழங்கப்படும் இடங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். தனது சட்டப் போராட்டத்தின் மூலம் இந்தியா முழுமைக்கும் சமூகநீதி வழங்கியுள்ளார் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

2. மருத்துவ உயர் கல்வியான எம்.டி., எம்.எஸ். போன்ற படிப்புகளில் சேர, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு அளித்திருந்தது தமிழக அரசு. நீட் தேர்வு என்ற பெயரால் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே மருத்துவ உயர் படிப்புக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவித்தது ஒன்றிய அரசு.

அரசு மருத்துவர்களுக்கு உயர் கல்வியில் 50 சதவீதம் இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசு ரத்து செய்ததை எதிர்த்து உச்ச

> **கலைஞரைப் போலவே இந்தியா முழுமைக்கும் இப்போது சமூகநீதி வழங்கியுள்ளார் முதல்வர் ஸ்டாலின்**



நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வழக்குத் தொடுத்தார் முதல்வர் ஸ்டாலின். அரசு மருத்துவர்களுக்கு இடஒதுக்கீட்டை ரத்து செய்வதால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்து வைத்து, திறம்பட வாதாடச் செய்தார். வழக்கில் வெற்றி கிடைத்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு இந்தியா முழுமைக்கும் பொருந்தும் என்பதால், இந்தியா முழுவதும் கிராமங்களில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கும் சமூகநீதி கிடைக்கச் செய்தார். இப்படி, கலைஞரைப் போலவே, இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கிடைக்கப் போராடி வெற்றி கண்டார் நம் முதல்வர்.

3. அரசுப்பள்ளி மாணவர்களுக்கு, மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் 7.5 சதவீதம் இடஒதுக்கீடு இருந்தது. இதை மற்ற தொழிற்கல்விகளுக்கும் விரிவுபடுத்தி, அதிகமான அரசுபள்ளி மாணவர்கள் பொறியியல் படிக்கவும், கால்நடை மருத்துவர் ஆகவும் வேளாண் பட்டப்படிப்பு படிக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தினார் முதல்வர் ஸ்டாலின். அரசுப்பள்ளிகளில் படிக்கும், ஏழை மாணவர்கள் பயனடைவதைப் பொறுக்காத சிலர், 7.5 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து நீதிமன்றம் சென்றனர். உச்சநீதிமன்றத்தில் மீண்டும் ஒரு சட்டப் போராட்டம் நடத்தி, சமூகநீதிக்கான மூன்றாவது வெற்றியைப் பெற்றார் முதல்வர் ஸ்டாலின். அரசுப் பள்ளி மாணவர்கள் தொழில்கல்வி படிப்பதற்கான வாய்ப்பை உறுதி செய்தார்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கேற்ப, தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்திய மக்கள் எல்லோரும் என் மக்கள்; அவர்கள் எல்லோருக்கும் சமூகநீதி கிடைக்க வேண்டும்; அவர்கள் எல்லோரும் சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்பதற்காக இந்த முயற்சியை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் எடுத்துள்ளார்கள்.

இதன் மூலம், தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்திய அளவில் சமூகநீதிக்கான அடையாளமாக தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறார்.


மின்னகம்
மின் நுகர்வோர் சேவை மையம்
திறந்து வைப்பவர்
திரு. மு.க.ஸ்டாலின்
CC-MAC
Centralized Complaints Monitoring Application for Consumers
AGENT
LOGIN


மின்னகம்
மின் நுகர்வோர் சேவை மையம்
திறந்து வைப்பவர்
மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள்


CC-MAC
Centralized Complaints Monitoring Application for Consumers
AGENT
Username
Password
LOGIN
Tamil Nadu Generation and Distribution Corporation Limited - TANGEDCO

# முதலமைச்சரின் மொழி எளிமையானது ஆழமானது



எளிமையான வார்த்தைகளை ஆழமான அர்த்தத்துடன் சொல்வதற்கு ஒரு பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவத்தைப் பெற ஆழமான அறிவும் சோர்வறியா உழைப்பும் தேவை.. இவை இரண்டுமே நமது முதலமைச்சருக்கு உண்டு. செயல் அதுவே சிறந்த சொல் என்று செயல்படுபவர் நமது முதலமைச்சர். அதனால்தான் அவரது எளிமையான வார்த்தைகளிலும் ஆழமான அர்த்தம் இருக்கிறது.

அகதிகள் என்று அழைக்க வேண்டாம் என்ற தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர், "புலம் பெயர் தமிழர்கள்" என்று கவுரவமாக அழைக்கச் செய்தார்.

அனைவருக்கும் அனைத்தும் என்று பொதுவுடைமை தத்துவத்தை இரண்டே வார்த்தைகளில் சொல்லி, அதுதான் திராவிட மாடல் என்றார்.

எளிய மக்களைச் சந்திக்கும் போது "நான் நன்றாக இருக்கிறேன்.. நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?" என்று கேட்டு விட்டு, "நீங்கள் நன்றாக இருந்தால்தான் நான் மட்டுமல்ல இந்த நாடே நன்றாக இருக்கும்" என்று சொல்கிறார். மக்கள் நன்றாக இருப்பதுதான் நாடு நன்றாக இருப்பது என்று எடுத்துக் காட்டினார்.

"நம்பர் ஒன் முதல்வர் என்ற பெயரை எடுப்பது அல்ல.. தமிழ்நாடு நம்பர் ஒன் மாநிலமாவதுதான் எனது லட்சியம்" என்று சொன்ன முதலமைச்சர், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற வள்ளுவனின் வார்த்தைகளுக்கிணங்க, "1 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம்" என்ற மூன்றே

வார்த்தைகளில் இந்தியாவையே அண்ணாந்து பார்க்கும் இலக்கை தமிழகத்திற்கு நிர்ணயித்தார்.

தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்து விட்டு, அந்த நாளில் உறுதி மொழி ஏற்க வேண்டும் என உத்தரவிட்டார்.

அந்த உறுதி மொழியில், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன். சுயமரியாதை ஆளுமைத்திறனும் – பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்” என்று தான் மட்டும் சொல்லாமல் எல்லோரையும் சொல்ல வைத்தார்.

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்து, அந்த நாளுக்கும் ஒரு உறுதி மொழியை வடிவமைத்துத் தந்தார்.

சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும், சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்று அவர் மட்டுமல்ல எல்லோரையும் சொல்ல வைத்தார்.

சாதி மோதல்களை சட்டம், ஒழுங்கு பிரச்சினையாக மட்டும் பார்க்காதீர்கள்; அது சமூக ஒழுங்குப் பிரச்னை என்று புதியதொரு வெளிச்சத்தை காவலர்களுக்கு வழங்கினார்.

சாதி மோதல்களில் ஈடுபடும் படிக்காத இளைஞர்களையும், படித்து விட்டு வேலை யில்லாமல் இருக்கும் இளைஞர்களையும் மனமாற்றம் செய்ய வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில், ஊர்க்காவல்படைகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என நோய் முதல் நாடி அது தணிக்கும் வழியைச் சொன்னார் முதலமைச்சர்.

மதம் ஒரு காலத்தில் மதம் சம்பந்தப்பட்டதாக மட்டுமே இருந்தது. அது இப்போது அரசியல் நோக்கமுள்ளதாக சிலரால் மாற்றப்பட்டு விட்டது. திட்டமிட்டே மத மோதல்களை உருவாக்குகிறார்கள் என்று சொல்லி, சமூக



**க.சிவஞானம்**
மூத்த பத்திரிகையாளர்

ஆரோக்கியத்தில் நஞ்சைப் பாய்ச்சும் கிருமிகளை அடையாளம் காட்டினார்.

ரவுடிகளை வட சென்னை, மத்திய சென்னை என்று இடத்தை வைத்தோ மதம், சாதியை வைத்தோ அடையாளப்படுத்தக்கூடாது என்றும் குடிசைப் பகுதிகளில் கஞ்சா விற்பனை என்று சொல்லாதீர்கள் என்றும் அறிவுறுத்தி, பொதுப்புத்தியில் பதிந்திருக்கும் அழுக்கை அகற்றினார்.

கல்குவாரிகளால் ரவுடிகள் வளர்கிறார்கள் என்று சொன்ன ஒரு காவல் அதிகாரிக்கு, கல்குவாரி தொழிலால் ரவுடிகள் வளர மாட்டார்கள். தொழில் போட்டி காரணமாக அப்படி உருவாகலாம் என்று அன்போடு அறிவுறுத்தினார்.

அதே காவல்துறை அதிகாரி, ரவுடிகளைக் கட்டுப்படுத்த ’வெளிச்சம்’, ‘உதயம்’, ‘விடியல்’ ஆகிய திட்டங்களை அமல்படுத்தி வருவதாகச் சொன்னதை ஏற்றுக் கொண்ட முதலமைச்சர், அதை மற்றவர்களும் பின்பற்றலாம் என்று ஆலோசனை கூறினார்.

நல்லதைச் சொன்னால் அமல்படுத்துவதும், அல்லது சொன்னால் அறிவுரை கூறலும் ஒரு சிறந்த ஆட்சியாளருக்கு அழகு என நிரூபித்தார்.

குற்றங்களைக் குறைப்பது அல்ல. குற்றங்களே இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும் என்றார். சட்டம் ஒழுங்குப் பிரச்னையைக் கட்டுப் படுத்துவது பாராட்டத்தக்கதுதான். ஆனால் சட்டம் ஒழுங்குப் பிரச்னையே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தரும் துறையாக காவல்துறை இருக்காமல், குற்றங்களைத் தடுக்கும் துறையாக மாற வேண்டும் என்று ஒரு அற்புத லட்சியத்தை காவல்துறைக்கு அளித்தார்.

முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால் எல்லாம் என்னால்தான் என்று நினைக்கின்ற அளவிற்கு நான் நிச்சயமாக இருக்க மாட்டேன், இருக்கவும் இல்லை. என்னைத் தொடர்ந்து அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறைக்



கண்காணிப்பாளர்கள், என அனைவரும் சேர்ந்ததுதான் இந்த அரசு என்று சொல்லி, அரசு என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு என விளக்கினார்.

நாம் அனைவரும் சேர்ந்துதான் மக்களுக்கு உயிராய் உணர்வாய் இருந்து வருகிறோம். மக்கள் நம்மை நம்பி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். மக்கள், நம்மை நம்பி அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். மக்கள் நம்மை நம்பித்தான் கோட்டையை ஒப்படைத்திருக்கிறாா்கள் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் அவர்கள் வகிக்கும் பதவியை வைத்து மக்களின் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டிய அவசியத்தை அற்புதமாக அறிவுறுத்தினார்.

ஒரு அரசு கடைக்கோடி மனிதனின் கவலையையும் தீர்க்கும் அரசாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்தைச் சொன்ன முதலமைச்சர், இந்த அரசு இப்படித்தான் அமைந்திருக்கிறது என்றும் பெருமிதப்பட்டார்.

தந்தை பெரியார் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதலில் தமிழில் மொழி பெயர்த்தார். குழந்தைகளுக்கு ரஷ்யா என்று பெயர் சூட்டினார்.

‘எனது பெயரே ஸ்டாலின்தான்’ என்ற மூன்றே வாக்கியத்தில் தானும் தோழன்தான் என்று தோழர்கள் மத்தியில் தன்னைப் பதிய வைத்தார்.

தமிழ்நாடும் திராவிட மாடலும்தான் இந்திய நாடு சமத்துவநாடாகவும் சமூக நீதி நாடாகவும் மாற தொடர்ந்து வழிகாட்டும் என்று அழுத்திச் சொன்னார்.

“நான் முதல்வன்” என்ற இரண்டே வார்த்தைகளில் ஒரு திட்டத்தை மாணவர்களுக்கு அறிவித்து, அவர்களை முன்னோக்கிச் சிந்திக்கச் செய்தார். அவர்களுக்கு வளமான எதிர்காலம் காத்திருப்பதை உறுதி செய்தார்.

“உங்களில் ஒருவன்” என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு நம்மில் ஒருவரானார்.

“நமக்கு வாக்களிக்காதவர்களும், இப்படிப்பட்ட அரசுக்கு நாம் வாக்களிக்காமல் போய்விட்டோமே என வருத்தப்படும் அளவுக்கு ஆட்சி நடத்துவோம்” என்று சொன்னதோடு மட்டுமல்ல, இந்தக் குறுகிய காலத்தில் அதைச் செய்தும் காட்டி விட்டார்.


மருத்துவம்

# மக்கள் மனதில் முதலமைச்சர்







ஜனவரி 25, 2021,

கோபாலபுரம் இல்ல வாசல்..

ஆம்.. இந்த இடத்தில் இருந்து தான் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மைல் கல் போன்ற ஒரு விஷயம் முன்னெடுக்கப்பட்டது.

'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்பது இந்தப் பயணத்துக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர். அடுத்த 30 நாட்களில் தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கிய கலந்துரையாடல் கூட்டங்களில் நான் பங்கேற்கிறேன்.

நான் கலந்து கொள்ளும் கூட்டங்களில் அந்தத் தொகுதியைச் சேர்ந்த, கிராமம் அல்லது வார்டை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு என்னிடம் தங்களது கோரிக்கை மனுக்களைத் தரலாம்! அந்தந்த இடங்களில் ஒவ்வொருவரின் குறைகள் அடங்கிய முழுத் தகவல்களையும் குறிப்பிட்ட தனித்தனி பதிவு எண் கொண்ட படிவத்தில் எழுதப்பட்டு, அவர்களுக்கு அதற்கான ஒப்புகைச் சீட்டும் கையில் வழங்கப்படும். நானே அனைத்து மனுக்களையும் சேகரித்து, மக்கள் முன்னிலையிலேயே பாதுகாப்பாக அதற்குச் சீல் வைப்பேன்'' என்று அறிவித்தார் மு.க.ஸ்டாலின் அவர்கள்..

மக்கள் குறைதீர்க்கும் நாள்.. மனு அளிக்கும் நடைமுறை எல்லாமே காலம் காலமாக இருக்கிற செயல்பாடுகள் தான். ஆனால், ''உங்கள் தொகுதியில் ஸ்டாலின்'' எந்த இடத்தில் மாறுபட்டு தனித்துவமாக நின்றது; நிற்கிறது?

''மு.க.ஸ்டாலின் ஆகிய நான், தமிழ்நாட்டு மக்களாகிய உங்கள் முன்னிலையில் ஒரு உறுதியை அளிக்கிறேன். உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதே எனது முதல் பணி. எனது அரசின் முதல் 100 நாட்கள், போர்க்கால அடிப்படையில் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அர்ப்பணிக்கப்படும்.



திவ்யா நாதன்
ஊடகவியலாளர்

இதற்கு நான் பொறுப்பு – நான் மட்டுமே பொறுப்பு" என்று அன்று கோபாலபுரம் வாசலில் இருந்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்ன வார்த்தைகள் இன்னும் தமிழ்நாடு முழுக்க எதிரொலித்துக் கொண்டுதான் உள்ளது.

சொன்னது போலவே 234 தொகுதிகளிலும் மக்களை நேரடியாக சந்தித்து குறைகளை கேட்டார் அந்த தலைவர்.

இடைவிடாத பயணம்.. சோர்வறியாத தேடல்.. தலைவரை பார்க்க ஓடி வந்த மக்கள்.. குறைகளைச் சொல்லி கலங்கிய கண்கள்.. பேச்சு வராமல் தழுதழுத்த குரல்கள்.. கனிவுடன் அரவணைத்த தலைவர்.. என காட்சிகள் நீண்டன "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்" நிகழ்ச்சியில்..

பத்து வருடங்களாக பக்கம் பக்கமாக மனு கொடுத்து கால் கடுக்க காத்திருந்த மக்களுக்கு, ஒரு துண்டுச் சீட்டு நம்ம தலையெழுத்த மாத்தும் என நம்பி வந்தனர்.

திமுக வெற்றி பெற்றது.. திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் ஆனார்.. அவரின் ஒற்றை கையெழுத்து ஒட்டுமொத்த மக்களுக்கான விடியலாக மாறியது..

மே 7 – மாண்புமிகு முதலமைச்சராக பொறுப்பேற்ற அன்று கையெழுத்துப் போட்ட 5 கோப்புகளில் ஒன்று "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்திற்கான தனித் துறை உருவாக்கம்.

அடுத்த நாளே அதாவது மே 8 ஆம் தேதியே சீல் போட்டு பூட்டி வைக்கப்பட்ட மனுக்கள் அடங்கிய பெட்டிகளின் சாவி துறைக்கான சிறப்பு அலுவலர் ஷில்பா பிரபாகர் சதீஷ் ஐஏஎஸ், அவர்களிடம் ஒப்படைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

மனுக்கள் பிரிக்கப்பட்டு மாவட்ட வாரியாக அதிகாரிகள் மூலம் தீர்வு காணப்பட்டன. மனுக்கள் கொடுத்து அதன் மூலமாக பயனடைந்த பயனாளிகளுக்குத் தான் இந்தத் "தீர்வு" என்னும் வார்த்தைக்கான முழு அர்த்தம் புரியும்.

சின்ன சீட்டில் எழுதிக் கொடுத்த வார்த்தைகள் நிறைவேறி உள்ளது. இதுவரை இந்தத் திட்டம் மூலமாக பயனடைந்த மக்கள் முகத்தில் சந்தோஷத்தையும், ஆனந்தக் கண்ணீரையும் பார்க்க முடிகிறது.

இது தான் "விடியல்" எனும் வார்த்தையின் பின் பொதிந்திருக்கும் உண்மையான அர்த்தம்.

உங்கள் தொகுதியில் ஸ்டாலின் நிகழ்ச்சி நடந்தபோது, தலைவர் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவார்கள்; வந்து என் கண்ணீரைத் துடைப்பார்கள் என நம்பி மனு அளித்து கோரிக்கைகள் நிறைவேறப்பெற்ற லட்சக்கணக்கானோரில் ஒரு சிலர் உங்களுடன்...



மேரியம்மா

மேரி தள்ளுவண்டி உணவுக்கடை, மாதவரம் பால்பண்ணை மக்களுக்கு அவ்ளோ பரீட்சயம். மேரி அம்மாவோட இட்லி, தோசை தான் அந்த பகுதி கூலித் தொழிலாளர்கள் வயித்த நிரப்பும். ஆனாலும் இந்தக் கடை மூலமா மேரியம்மாவுக்கு ஒரு நாளைக்கு 150 ரூபாய் லாபம் கிடைச்சா பெருசு. அந்த சொற்ப காசு தான் மேரியம்மாவுக்கு வாழ்வாதாரம்.

நோய்வாய்ப்பட்டு கடந்த 2 வருசம் முன்னாடி மேரியம்மாவின் கணவர் உயிரிழந்துட்டாரு.. கணவர் மரணம் ஒரு பக்கம்.. மூன்று பிள்ளைகள் மேரியம்மாவுக்கு இருந்தும் பொருளாதாரச் சூழல் காரணமா ஆதரவற்ற நிலைக்கு ஆளான மேரியம்மா, தனக்கு கைம்பெண் உதவித்தொகைக் கேட்டு கடந்த ஆட்சியில் பல முறை விண்ணப்பம் போட்டு இருக்காங்க..

எதிர்பார்த்து காத்திருந்து ஏமாந்தது மிச்சம்ன்னு இருந்த மேரிக்கு விடியலா வந்தது தான் “உங்கள் தொகுதியில் ஸ்டாலின்” நிகழ்ச்சி..

ஒரு நாள் லாக்டவுன் காரணமா கடை போடாம வீட்டுல உக்காந்து இருந்த மேரிக்கு ஒரு அழைப்பு வந்தது.

(“ஹலோ மேரிங்களா.. நான் ஸ்டாலின் பேசுகிறேன்.. கோரிக்கை என்ன ஆச்சும்மா, சந்தோஷம்தானே?”)

கைம்பெண்ணுக்கான உதவித் தொகை மேரியம்மாக்கு கிடைத்துவிட்டது. மாதம் அவருக்கு 1000 ரூபாய் இனி கிடைக்கும்.

“ரொம்ப சந்தோஷம் ஐயா, ரொம்ப சந்தோஷம்ன்னு மேரியம்மா முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கிட்ட சொன்னது வெறும் வார்த்தை இல்லை..”



சஜித்

சென்னை தரமணியைச் சேர்ந்த எலெக்ட்ரீசியனா வேலை பாக்குறாரு சக்திவேல் அவங்க மனைவி தனலட்சுமி. இவங்க ரெண்டு பேரோட உலகம் இவங்க குழந்தைங்க தான்.. நாலாவது படிக்குற மகன் சஜித், 3 வயசு மகன் கோகுல்.

இந்த தம்பதியோட இரண்டு மகன்களுக்குமே பிறவியிலேயே செவித்திறன் குறைபாடு..

சஜித் காதொலிக் கருவியை தான் முழுமையா நம்பி இருக்க வேண்டிய சூழல். குடும்ப பொருளாதார சூழல் நெருக்கடி காரணமா கருவி வாங்க காசு இல்லாம முதலமைச்சர் அவர்கள்கிட்ட கோரிக்கை வச்சாங்க தனலட்சுமி..

மனு கொடுத்த இரண்டு மாசத்துக்கு உள்ளாகவே உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை மூலமா சஜித்துக்கு காதொலிக் கருவி



வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.. அதுவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே சஜித்துக்கு காதொலிக் கருவிய பொருத்தி விட்டாங்க..

கருவி பழுதானதால் கொஞ்ச நாள் சத்தத்தைக் கேக்க முடியாம இருந்த சஜித் மறுபடியும் சத்தத்தை உணர ஆரம்பிச்சி இருக்கான்...

ஒரு வயசு இருக்கும் போது போலியோவால பாதிக்கப்பட்ட உமாதேவியால அதன் பிறகு இயல்பா நடக்க முடியாம கால்களோட செயல்பாடு முடங்கிப் போச்சு..

நடை நமக்கு இயல்பு; ஆனா இவங்களுக்கு ரொம்ப கஷ்டம்.. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் சிரமம்..





உமாதேவி

பழக்கப்பட்டாலும் உமாதேவிக்கு சின்ன இறுக்கம் மனசுல இருந்துட்டே தான் இருந்து இருக்கு.. சென்னை திருவொற்றியூர் பகுதியைச் சேர்ந்த இவங்க கடந்த 15 வருஷம் முன்னாடி காதல் திருமணம் செஞ்சிக்கிட்டாங்க. கணவர் அலுமினியப் பொருட்கள் தயாரிக்குற பட்டறையில் வேலை பாக்குறாங்க. இரண்டு மகள்கள்.. அமைதியான பாசமான குடும்பம்.. ஆனா வருமானம் போதிய அளவு இல்லாததால் சின்ன ஆசைகளை மனசுல பூட்டி வச்சிக்குற சூழல் தான்..

கணவருக்கு மொத்த பாரமும் கொடுக்குற மாதிரி உமா தேவி பல நாள் வருத்தப்பட்டு இருக்காங்க.. வேலைக்கு போயி தானும் சம்பாதிக்கணும்னு உள்ளுக்குள்ள அவ்ளோ ஆசை இருந்தாலும் கால் கொடுக்குற வலி எதையுமே செய்ய விடல.. பக்கத்துல



இருக்குற பகுதிக்கு நடந்து போயிட்டு வர்றதே அவங்களுக்கு பெரிய சிக்கல் தான்.. இருசக்கர வாகனம் இருந்தா ஓரளவு வெளி இடங்களுக்கு போய் வேல தேட முடியும்னு ஆசப்பட்டாங்க உமா தேவி. ஆனா இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனத்தோட விலை கிட்டத்தட்ட 75 ஆயிரம் ரூபாய்.. இருக்குற கடன்ல வண்டிக்காக தனியா இன்னோரு கடன் எடுக்க முடியாது.

கடந்த ஆட்சியில பல தடவ மனுப் போட்டு ஏமாந்து போயிருந்தாங்க உமாதேவி. பல தடவ அந்த ஆட்சியின் கதவத் தட்டி இருக்காங்க உமா தேவி.. கேட்க கூட ஆள் இல்ல.

இந்தச் சூழல்ல தான் “உங்கள் தொகுதியில் ஸ்டாலின்” நிகழ்ச்சியில தனக்கு ஒரு இருசக்கர வண்டி தேவைப்படுதுனு கேட்டுத் தன்னோட சூழலையும் எழுதி மனுப் போட்டாங்க உமாதேவி.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும் விடியல் உமா தேவிக்கும் பொறந்துச்சி..ஒரு வாரத்துல உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறைக்கான மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திலிருந்து அழைப்பு வந்து இருக்கு. ஆவணங்கள், மருத்துவச் சரி பார்ப்புன்னு எல்லாம் முடிஞ்சி அடுத்த ஒரு வாரத்துல உமா தேவிக்கு 73 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட வண்டியின் சாவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கையால் கொடுக்கப்பட்டு இருக்கு.

ஒட்டுமொத்தமா தமிழ்நாடு முழுக்க ஒரே நேரத்துல மக்களைச் சந்தித்து அவங்க குறைகள் என்னனு கேக்கும் போது பொதுவான மக்கள் சந்திக்கும் பிரச்னை என்ன? எந்த இடத்துல அரசின் திட்டங்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் இருக்கு? எந்த விஷயங்கள் எல்லாம் மக்களுக்கு இடர்பாடா இருக்குனு எளிதாகப் புரிஞ்சிக்க ஒரு வாய்ப்பா இந்தத் திட்டம் பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டமும் இந்தியா முழுமைக்குமான ஒரு மாடல்னு சொல்ல முடியும். ஆம் இதுவும் திராவிட மாடலின் ஒரு துளி. பெருந்துளி!! ●

# சவால்களை சாதனையாக்கும் அரசு



சமூக நீதியின் அடிப்படை அச்சாணிகளை இறுகப் பற்றிக்கொண்டு, வளர்ச்சிக் கனவுகளை நினைவாக்குவதில் சோடை போகாத வகையில் புத்தாக்கமிக்க ஊக்கத்தோடு மாநில அரசின் நிர்வாகம் இயங்குவதன் அறிகுறிகள் துலக்கமாகத் தெரிகிறது.

சமூகத்தின் முன்னேற்றம், மக்கள் அதிகாரமிக்கவர்களாக மேம்படல் ஆகியவற்றில் முதன்மையான பங்கு வகிக்க கல்வி, வேலைவாய்ப்பில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் குறித்துக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியில் மாணவர் சேர்க்கைக் குறியீடு முன்னணியில் உள்ளது (51.4%) [பட்டியல் சாதியினர் – 39.6%, பட்டியலின பழங்குடியினர் 40.7%, பெண்கள் – 51%] இதனோடு மொத்தமாகப் பள்ளியை விட்டு இடைநிற்பவர்கள் அளவு 16% – ஆக உள்ளது.

இயல்பாக, இத்தகைய சூழலில் எண்ணிக்கையில் வேளாண் துறையில் குறைவான மக்களே ஈடுபடுவார்கள். உற்பத்தித்துறை, சேவைத் துறையைச் சார்ந்திருப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த இரு துறைகளின் வளர்ச்சி சமீப காலங்களில் தேக்கமடைந்து விட்டது.

மேலும், கற்றல்ரீதியான பயன்கள் குறைவாக இருப்பதோடு, படித்தவர்களிடையே குறிப்பிடத்தக்க அளவு திறன் பற்றாக்குறை காணப்படுகிறது. COVID19 பெருந்தொற்று, கல்வி, வேலைவாய்ப்புக்கான கதவுகளைத் திறக்கும் சாவிகளை இன்னமும் எட்டத்தள்ளி விட்டது.

இந்தச் சவாலான சூழலில், தமிழ்நாடு அரசு கண்முன் எழுந்து நிற்கும் இச்சவால்களை எதிர்கொள்ளும் வண்ணம் பல்வேறு திட்டமிடல்கள், செயல் கொள்கைகள், திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

'இல்லம் தேடி கல்வி' திட்டத்தின் 1,80,000 தன்னார்வலர்களின் கூட்டுச்செயல்பாடு கோவிட் காலத்தில் குழந்தைகள் இழந்த கற்றல் பயன்களை மீட்டுத்தர முனைகிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டமானது மூவலூர் இராமாமிர்தம் உயர்கல்வி உறுதித்திட்டமாகக் கீழ்கண்டவாறு பரிணமித்து உள்ளது: (i) அரசுப்பள்ளியில் பயின்ற பெண்களின் (நான்காம் வகுப்பு முதல் +2 வரை) பட்டப்படிப்பு, டிப்ளமோ, ஐ.டி.ஐ கல்விக்காலம் முழுவதும் மாதம் 1000 ரூபாய் உதவித்தொகை



**விக்னேஷ் கார்த்திக்**

**லண்டனில் உள்ள கிங்ஸ் இந்தியா இன்ஸ்டிடியூட்டில் Ph.D. ஆய்வு மாணவர்**

(ii) IIT, IIM, IISC முதலிய முன்னணி கல்வி நிறுவனங்களில் இடம்பிடிக்கும் மாணவிகளின் கல்விச்செலவு முழுவதையும் அரசே உதவித்தொகையாக வழங்கும்.

தமிழ்நாட்டில் பட்டியல் சாதியினர், பட்டியலினப் பழங்குடியினர் ஆகியோர் புதிய தொழில் நிறுவனங்கள் துவக்கவும், அவர்களின் புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிக்கவும் Tamil Nadu Startup and Innovation Mission (TANSIM) 30 கோடி நிதி முதலீட்டுடன் துவங்கப்பட்டுள்ளது.

நிதித்தொழில்நுட்ப நகரத் திட்டங்கள் நந்தம்பாக்கம், காவனூரில் துவங்கப்பட உள்ளன. இது சேவைத்துறையை இன்னமும் விரிவுபடுத்தும். ஆப்பிள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் உற்பத்தி ஆலைகளும் இங்கு துவங்கவுள்ளன என்பது நற்செய்தி.

திருவண்ணாமலை, தர்மபுரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், நாமக்கல், தேனி, மற்றும் நாகப்பட்டினம் ஆகிய தொழில் ரீதியாக பின்தங்கிய மாவட்டங்களில் சிப்காட் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு நகரங்களில் டைடல் பார்க் நிறுவனங்கள் அமைக்கப்படும் திட்டமும் உள்ளது. முதல் கட்டமாக, இத்திட்டம் வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் அமல்படுத்தப்படவுள்ளது.

தூத்துக்குடியில் சர்வதேச மரச்சாமான்கள் தயாரிப்புப் பூங்கா தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 4000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு எதிர்பார்க்கப்படுவதால், 3.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

மருந்துப்பொருள்கள், பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்கள், பாதுகாப்பு தளவாடங்கள் மற்றும் வான்வெளிச் சாமான்கள், மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதி பொருத்தப்பட்டு இயக்கப்படும் போக்குவரத்துத் துறைகள் (smart mobility sector) ஆகிய துறைகளுக்கான பொருட்செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

TANSIDCOவின் கீழ் ஐந்து இடங்களில் சீரமைக்கப்பட்ட விலைக் கொள்கையின் அடிப்படையில் நிலமேம்பாட்டு வங்கிகள் நிறுவப்படவுள்ளன.

இறுதியாக, தமிழக முதல்வர் முன்னின்று சிரத்தையோடு நிகழ்த்திய தொழில் முதலீட்டுக்கான பயணங்கள், மாநாடுகள் மதச் சச்சரவற்ற, அமைதிப்பூங்காவான தமிழ்நாட்டிற்குள் பல்வேறு முதலீடுகள் குவிந்து, வளம் பெருக்குவதற்கான வாய்ப்புகளைச் சாத்தியப்படுத்தியுள்ளன.

மொத்த மாநில உற்பத்தி பல்வேறு துறைகளில் பரந்து விரிந்துள்ளதோடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார பலமிக்க மாநிலம் என்பதால் ஒன்றிய அரசின் வரி ஒதுக்கீட்டை தமிழகம் குறைவாகவே சார்ந்திருக்கின்றது.

மாநில அரசு தனக்கான முதலீட்டுக்கான வளங்களைத் தானே வென்றெடுப்பதற்கு ஒன்றிய அரசின் அதிகார குவிப்பு தடையாகி வருகிறது. மேலே பட்டியலிட்ட நடவடிக்கைகள் சரியான திசையில் திட்டமிட்டு திமுக அரசு பயணிப்பதையே காட்டுகின்றன.

> **மாநில அரசு தனக்கான முதலீட்டுக்கான வளங்களைத் தானே வென்றெடுப்பதற்கு மேற்சொன்ன அதிகார குவிப்பு தடையாகி வருகிறது.**

தமிழக முதல்வர் தொடர்ந்து பறைசாற்றும் 'திராவிட மாடல்' செயல் ஊக்கத்தையும், சவால்களை எதிர்நின்று சாதிக்கும் திறனையும் அவரின் முன்னெடுப்புகள் தரக்கூடிய பயன்கள், அவற்றால் விளையப்போகும் நலன்கள் ஆகியவற்றைக் கொண்டே எடைபோட இயலும். ●

# உரிமைகளை உறுதி செய்யும் திராவிட மாடல் அரசு





**நா**ம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம், நம் தமிழ்நாட்டு வரலாற்றில் இதுவரை காணாத ஒரு காலம். தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஒரு பெரும் பாய்ச்சலினை நிகழ்த்த வேண்டிய தருணத்தில் தமிழ்நாட்டு மக்களாகிய நாம் நின்றுகொண்டிருக்கிறோம்.

இன்று தமிழ்நாடு, இந்திய ஒன்றியத்தில் இரண்டாம் பெரிய பொருளாதார வலு கொண்ட மாநிலமாக இருக்கிறது. ஆனால், இந்தப் பொருளாதார நிலை காலம் காலமாக இப்படி இருந்ததில்லை.

சுதந்திரம் அடைந்து, முதல் மூன்று பத்தாண்டுகளில், தமிழ்நாட்டில் இருந்து பிற மாநிலங்களுக்கு, குறிப்பாக வடக்கு மற்றும் மேற்கு மாநிலங்களுக்கு சென்றோர் எண்ணிக்கை அநேகம். இன்று நாம் காணும் வளர்ச்சிக்கான அச்சாரம் போடப்பட்டதும் அதே மூன்று பத்தாண்டுகளில் தான் என்றால் அது மிகையாகாது.

சுதந்திரத்திற்கு முந்தைய நீதிக் கட்சியின் சட்டரீதியிலான சமூக நீதி சார்ந்த செயல்பாடுகள், சுதந்திரத்திற்குப் பின்னான காலக்கட்டத்தில் கட்சி வேறுபாடில்லாமல் செயல்படுத்தப்பட்டு, 1967க்குப் பிறகு வீரியமாக அமலுக்கு வந்தது.

அரசின் செயல்பாடுகளில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அனைவருக்கும் வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு, அன்றைய சமூக நிதர்சனத்தை அறிய திரு. ஏ.என்.சட்டநாதன்



**ஜெயன்நாதன் கருணாநிதி**
கட்டுரையாளர்

அவர்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு அதன் பரிந்துரையின் பேரில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பட்டியல் இனத்தவர் இட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது.

அதோடு பள்ளி, கல்லூரிகளின் எண்ணிக்கையும் மருத்துவ உள்கட்டமைப்பும் தொழிற் பேட்டைகளின் உள்கட்டமைப்பும் அடுத்த இருபது ஆண்டுகளில் உயர்த்தப்பட்டதனால், 1990களில் நாட்டின் பொருளாதாரம் உலகமயமாக்கலுக்கும் தாராளமய மாக்கலுக்கும் தயாரான போது, தமிழ்நாடு அன்று உற்பத்தித்துறையிலும் தகவல் தொழிற்நுட்பத் துறையிலும் பெரும் பாய்ச்சலினை நிகழ்த்தியது.

இன்றும் நாம் இரண்டாம் பெரிய பொருளாதாரமாக இருந்தாலும், கடந்த 7 ஆண்டுகளாக தொலைநோக்குப் பார்வை வழி செயல்படும் அரசினை தமிழ்நாடு காணவில்லை.

இதனால் நவீன பொருளாதாரம் சார்ந்த தொழில் முன்னெடுப்புகளையும் புத்தாக்கத்தினை மையமாய் கொண்ட வளர்ச்சி சிந்தனைகளையும் காணாது அடுத்த கட்ட தொடர் வளர்ச்சிக்கான, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சாத்தியங்களை நம் தமிழ்நாடு இழந்தது.

கடந்த ஒரு ஆண்டு காலமாக, கொரோனா பெருந் தொற்றினை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதோடு நம் மாநிலத்திற்கு தொடர் முதலீடுகளை திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பெற்று வருகிறது.

முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாடு உருவாகி வரும் அதே வேளையில் எலெக்ட்ரிக் வாகனங்கள், மின்னணு உதிரிபாகங்கள் மற்றும் நிதி தொழில்நுட்பம் தொடர்பான தொழில்களுக்கான சுழலினை (Ecosystem) உருவாக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நம் மாநிலத்தின் வளர்ச்சி தேசிய அளவில் தனித்துவமாக இருப்பதற்கான காரணம், இவ்வளர்ச்சி மக்களினை அந்நியப்படுத்தாத வளர்ச்சியாய் இருக்கின்றது.

இப்பெரும் முன்னெடுப்பு களினால் மக்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான கல்வி உரிமையினை உறுதி செய்ய சட்டப்போராட்டங்களை (நீட் தேர்வு நீக்கம், அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5% இட ஒதுக்கீடு, மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் வன்னியர் களுக்கான 10.5% இட ஒதுக்கீடு, தேசிய அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இட ஒதுக்கீடு) அரசு முன்னெடுத்து வரும் அதே வேளையில் நம் மாணவர்களின் திறமைகளை கூர்தீட்ட "நான் முதல்வன்", "இல்லம் தேடிக் கல்வி" போன்ற முத்தாய்ப்பான தொலைநோக்கு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் நம் மாநில மக்களிடையே வாழ்க்கை முறை நோய்களான நீரிழிவு நோய் (Diabetes), உயர் இரத்த அழுத்தம் (Hypertension) மற்றும் இருதய குழலிய நோய்கள் (Cardiovascular diseases) அதிகம் இருப்பதாலும் வயது முதிர்ந்தோர் எண்ணிக்கை படிப்படியாக உயர்வதாலும் "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற முன்னோடி திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் வழி இந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் நிலை மேம்பட்ட முறையில் கண்காணிக்கப்பட்டு அதன் மூலம் உயிரிழப்புகள் பெருமளவு தடுக்கப்படும்.

> **நம் மாணவர்களின் திறமைகளை கூர்தீட்ட நான் முதல்வன், இல்லம் தேடிக் கல்வி தொலைநோக்கு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றது**

மேலும் தொடர் பொருளாதார வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் சுற்றுச்சூழலை பாதிக்காமல் இருக்க வேண்டி தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் (Tamil Nadu Climate Change Mission), தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம் (Tamil Nadu Wetlands Mission) மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் (Green Tamil Nadu Mission) தொடங்கப்பட்டு அதன் வழி தொடர்ச்சியான






கண்காணிப்பும் நடவடிக்கைகளும் எதிர்பார்க்கப்படுகின்றது.

“தமிழ்நாட்டில் உள்ள எவராக இருந்தாலும் முனைப்புடன் உழைத்தால் முன்னேறலாம்” என்ற அறிவிக்கப்படாத வாக்குறுதி நம் மாநிலத்தில் உள்ள ஒவ்வொருவரையும் முன்னேற உந்தித் தள்ளுகிறது. அப்படியான செயலூக்கம் கொண்டவர்களை ஊக்குவிக்கும் வகையில் சூழலினை (Ecosystem) அமைத்துத் தர தமிழ்நாடு அரசு – கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமூக நீதி, தொழில் முனைவோருக்கான உதவி, பெரும் உற்பத்தி சார் தொழில்களுக்கான ஊக்கம், மருத்துவ உள்கட்டமைப்பு, கல்விக்கான உள்கட்டமைப்பு மற்றும் பாடத்திட்ட சீரமைப்பு, நீர் மேலாண்மை உள்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என பல முனைகளில் முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

அடுத்த பத்தாண்டுகளில், இந்தியாவைத் தாண்டி, ஒட்டுமொத்த தெற்காசிய பிராந்தியத்தில் சிறந்த மாநிலமாக உருவெடுக்க, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் பொற்கால ஆட்சியாக பரிணமிக்க திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு, உலகளாவிய அறிஞர் பெருமக்களின் வழிகாட்டுதலின் வழி தொலை நோக்குத் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது.

அதே வேளையில், தமிழக மக்களின் உரிமைகளும் இந்திய ஒன்றியத்தினுள் தமிழ்நாட்டின் உரிமைகளும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை உணர்ந்துள்ள அரசு, சட்டப் போராட்டங்கள் வழி உரிமைகளை நிலைநாட்ட, காக்க உறுதி பூண்டுள்ளது.

இப்படியாக, அனைவருக்குமான உரிமைகளை உறுதி செய்வதன் வழி நிலையான பொருளாதார வளர்ச்சியை, மாறிவரும் சமூக பொருளாதார சூழலுக்கேற்ப தமிழ்நாட்டினை தகவமைக்க வேண்டி பெரும் சமூக பாய்ச்சலினை சாத்தியமாக்குவதே “திராவிட மாடல்” அரசு.


Hyundai 10 millionth car roll-out.
HYUNDAI
Hyundai 10 millionth car roll-out.
25 Hyundai
ALCAZAR

# தொழிலாளர்களுக்கு தோள் கொடுத்த அரசு




"காண்பன யாவும் தொழிலாளி செய்தான் அவன்

காணத் தகுந்தது வறுமையா?

பூணத் தகுந்ததும் பொறுமையா?"

என்று, அன்று பொங்கித் தீர்த்த புரட்சிக் கவியும் பூரித்துப் போகும் வண்ணம் இன்று, தொழிலாளர் மேம்பாட்டிற்கு அரசு தொடர்ந்து ஆற்றி வரும் அரும்பணிகள் அளப்பரியன.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்று, பட்டுக்கோட்டையார் வழியில் சிந்தித்தோமெனில் தொழில் செய்யுமிடங்கள் யாவும் வழிபாட்டுக் கூடங்களேயாம். அத்தகைய வழிபாட்டுக் கூடங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நிலையோ சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இல்லாத இடங்களும் இருந்து வந்தன.

ஆம், நகைக் கடைகளில், துணிக்கடைகளில் வணிக வளாகங்களில், பேரங்காடிகளில், விற்பனையாளர்களாகப் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் வேலை நேரம் முழுவதும் நின்றுகொண்டே பணியாற்றும் அவலமிருந்தது. நின்றுகொண்டே பணியாற்றும் தொழிலாளர்கள், கால்வலி, மூட்டுவலி, 'வெரிகோஸ் வெயின்' எனும் நரம்பு சுருட்டைக்கோளாறுகளால் நலமிழந்து, நலிவுற்று, ஆற்றாதிருந்தனர்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதும், அடிநிலைத் தொழிலாளத் தோழர்களின் அல்லல்அகற்றிட, நின்று கொண்டே பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் இருக்கைகள் வழங்கிடவும், அவர்கள் வாய்ப்புக்கேற்ப அமர்ந்துகொண்டு பணியாற்றலாமென, உரிய சட்டத்திருத்தத்தை மேற்கொண்டது.

அப்பணியாளர்களின் முகமலர்ச்சியில் விடியலைக் கண்டது இந்த அரசு. நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கான இருக்கை வசதிகளை உறுதிப்படுத்தும் வகையில் கேரளாவுக்கு அடுத்த படியாகத் தமிழகம் விளங்குகிறது.

“காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு”

என வழக்கப்படுத்திக் கொண்டு, ஆடிப்பாடி மகிழவும், அருங்கல்வி பயிலவும் வேண்டியஅரும்புகள் குடும்ப வறுமைக் கொடுமை நீங்க, விடியல் தேடி, உணவகங்கள், தொழிலகங்கள், குவாரிகள் என்று வாழ்வைத் தொலைத்து நிற்பது, ‘கொலையினும் கொடியதன்றோ’. இந்த அரசுபொறுப்பேற்ற பின்னர் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்கள் முறையான கல்வி பயில உரியன செய்துள்ளது.

மாண்புமிகு முதல்வர், “வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, கல்வி உரிமை” ஆகிய மூன்றையும் உறுதிசெய்து, குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டைப் பொலியச் செய்ய உறுதியேற்றுள்ளார். இது நாள் வரை மீட்கப்பட்டகுழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 291.

வாழ்க்கை நடத்துவற்கு வாழ்வாதாரம் தேடி, உழைக்கவும் பிழைக்கவும் ஊர் விட்டு ஊர், மாநிலம் விட்டு மாநிலம் சென்று ஆணும் பெண்ணும் தொழில் புரிவது இயல்பே எனினும், உலகையே உலுக்கிப்போட்ட பெருந்தொற்றுக் காலத்தில், கலங்கி நின்ற புலம் பெயர் தொழிலாளர் நலம்பெற, ரூ.6.66 கோடி அளவிற்கு உலர் உணவுத் தொகுப்புகளை வழங்கி, ‘இல்லாமை போக்கியது’ இந்த அரசு.

அமைப்பு சாராத் தொழிலாளர் நலவாரியங்களின் மூலம் நிலுவை நின்ற நல உதவிகளை வழங்கியும், சிறப்புத் திட்டக் காப்புகளை அளித்தும், 1,85,660 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.247.49 கோடிஅளவுக்கும் பயன் வழங்கியது, நல்லறம் காக்கும் இவ்வரசு.



**பா.பாண்டியன்**
ஓய்வு பெற்ற
அரசு அதிகாரி

தொழில் நல்லுறவுக்கு, பொறுப்புணர்வும் திறமைமிக்க தொழிலாளர்களும் முற்போக்கான நடைமுறைகளில் நாட்டமுடைய நிர்வாகங்களும் இன்றியமையாதன.

‘எல்லாரும் வாழ வேண்டும்’ என்ற சமத்துவ சமூக நீதியை அடிநாதமாய்க் கொண்டிருக்கும் தமிழக அரசின் தொழிலாளர்நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, 2055 தொழில் தகராறுகளைத் தீர்வு செய்து, 794 வழக்குகளில் பலரும் பயனுறும் வண்ணம் சுமூக முடிவுகளை அளித்துச் சாதனைபுரிந்துள்ளது.

புதியதொரு முயற்சியாக, தமிழக அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையங்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, தனியார் மற்றும்அரசு நிறுவனங்களின் பங்கேற்புடன் வேலைவாய்ப்பு முகாம்களை மாவட்டம் தோறும் நடத்த உள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட முகாம்களின் மூலம் 68,014 நபர்கள் பணிநியமனம் பெற்று, வாழ்வாதார உறுதி நிலை எய்தியுள்ளனர்.

அரசின் துறைகளில், தொழிலாளர் நலன்மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வாழும் சமூகத்தினருக்கும் வளரும் சமூகத்தின் இளைஞர்களுக்கும், சமத்துவ வாழ்வாதாரத்தையும், கண்ணியமிக்க சமூகநிலை எய்தலையும் உறுதிப்படுத்திட, மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தும் பாங்கு பாராட்டுக்குரியது. ●

> **“மாண்புமிகு முதல்வர், குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டைப் பொலியச் செய்ய உறுதியேற்றுள்ளார்.”**

# சாமானியர்களின் நம்பிக்கை முதல்வர்



மக்களின் நலத்தின் மீதும் மாநிலத்தின் வளர்ச்சியின் மீதும் அக்கறை கொண்டு செயல்படுகிற தமிழக அரசிற்கு ஆதரவு அளிப்பது நம்முடைய கடமையாகவே பார்க்கிறேன்.

கடந்த 11 மாத கால தி.மு.க. ஆட்சி மாநில மாண்பினை மீட்டு இருக்கிறது. ஒரு மாநில அரசுக்கு சகிப்பு தன்மையும் சமூகநீதி மீது தீராத தாகமும் வளர்ச்சியின் மீது கடும் உழைப்பும் ஏழை எளிய மக்களின் மீது கரிசனையும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையும் அதே நேரத்தில் மாநில சுயாட்சிக்கு குந்தகம் ஏற்பட்டால் அதை எதிர்க்கும் அசாத்திய துணிச்சலும் இருக்க வேண்டும். அதை உணர்ந்து செயல்படுகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்.

குறிப்பாக தீண்டாமை ஒழிப்பில் நமது முதல்வர் இந்தியாவிற்கே வழிகாட்டியாக செயல்படுகிறார்.வன்கொடுமை தடுப்புச் சட்டம் சரியாக செயல்படுகிறதா என்பதை கண்காணிக்க 25 பேர்களை கொண்ட மாநில அளவிலான விழிக்கண் மற்றும் கண்காணிப்பு குழு ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்த வேண்டும்.



**எவிடென்ஸ் கதிர்**
சமூக செயற்பாட்டாளர்

ஆனால் நமது முதல்வர் 63 பேர் கொண்ட குழுவினை ஏற்படுத்தியது மட்டும் அல்லாமல் தன்னுடைய தலைமையில் இரண்டு முறை கூட்டம் நடத்தி வன்கொடுமை நிவாரண தொகையை உயர்த்தியும் இருக்கிறார். அதிக அளவில் நீதிமன்றமும் அமைக்கப்படும் என்று உறுதியும் அளித்து இருக்கிறார்.

பழங்குடியினர், பெண்கள், திருநங்கைகள், குழந்தைகள், மாற்று திறனாளிகள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் போன்ற பல்வேறு விளிம்பு நிலை சமூகங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருவது வியக்க வைக்கிறது.

அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, மக்களைத் தேடி மருத்துவ திட்டம், பெண்களுக்கு, திருநங்கைகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணம் இல்லாத பேருந்து பயணம், பெட்ரோல் விலை குறைப்பு, ஆவின் பால் விலை குறைப்பு, நீட் விலக்கு குறித்து சட்ட முன்வடிவு, மகப்பேறு காலவிடுப்பு 12 மாதம், நான் முதல்வன் திட்டம், அணைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணையம், இலங்கைத் தமிழர்களின் முகாம்களை சீரமைக்க கூடுதல் நிதி என்று பல்வேறு சமூக நீதி திட்டங்களை செயல்படுத்துகிற அரசாக தமிழக அரசு உள்ளது.

திட்டங்களை பார்ப்பது அதற்கான நிதியினை பார்ப்பது மட்டும் போதாது. அந்த திட்டங்கள் ஏன் கொண்டு வரப்படுகிறது என்பதையும் சேர்த்து பார்க்க வேண்டும். அப்போதுதான் நமது முதல்வரின் பன்மைத் தன்மையை புரிந்து கொள்ள முடியும்.

மக்களுக்கும் அரசுக்குமான இடைவெளி இல்லை என்பேன். தனி மனித வலியை தன் வலியாக சமூக வலியாக உணர்ந்து இருக்கிறார் நமது முதல்வர். இசுலாமிய சிறுவனுக்கு வீடு இல்லை, நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த பெண்ணுக்கு சமபந்தியில் உட்கார அனுமதி இல்லை போன்ற தனி மனித பிரச்சனைகளுக்கும் அக்கறை எடுத்து செயல்படுவது சாமானியர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

அறிவிப்பு மட்டும் அல்லாமல் துரித செயல்பாடுகள் மூலம் இந்தியாவையே ஈர்த்து இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அதனால்தான் கேரளா முதலமைச்சர் நமது முதல்வரை இந்தியாவின் எதிர்பார்ப்பு மையம் என்று வெகுவாக பாராட்டி இருக்கிறார். சாமானியன் முதல் சரித்திர நாயகர்கள் வரை ஸ்டாலின் அவர்களின் மீது வைத்து இருக்கும் நம்பிக்கைதான் ஜனநாயக கனவு.

அந்த கனவை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு நமது முதலமைச்சருக்கு உண்டு.

கடும் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, மாநில சுயாட்சியை பறிக்கும் திட்டம் என்று ஜனநாயக விரோதமாக செயல்பட்டாலும் தமிழக அரசின் மீதும் தமிழக மக்களின் மீதும் இந்திய ஜனநாயக சக்திகள் நம்பிக்கை வைத்து உள்ளனர்.

மதவாதமும் கொள்ளைக் கூட்டங்களும் நுழைய முடியாத மாநிலமாக தமிழகம் உள்ளது. ஆகவே தமிழக முதல் அமைச்சரின் கனவு ஜனநாயகத்தை மீட்டு எடுக்கும் பணியிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.அதை கேரள முதலமைச்சர் பினராய் விஜயன் சொல்லுகிறார். அதைத்தான் நாமும் சொல்லுகிறோம்.

> **“அறிவிப்பு மட்டும் அல்லாமல் துரித செயல்பாடுகள் மூலம் இந்தியாவையே ஈர்த்து இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.”**

# புதுத்திசையில் தமிழ்நாடு




மாநிலமோ, பிராந்தியமோ, நாடுகளோ, அதன் வளர்ச்சியினை கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாடுகள் உள்ளிட்டவைகளைக் கொண்டே சிறப்பம்சங்களையும் வெற்றிக் குறியீடுகளையும் கணக்கிடுவர். இம்மூன்றையும் ஒரு சேர ஒருங்கிணைத்து நீடித்த வளர்ச்சி யினை கொண்டு சுழல்வதிலேயே இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு தன்னை வேறுபடுத்திக் காட்டுவதற்கான முக்கிய அளவுகோலாகவும் திகழ்கிறது.

ஜீலை 2021 இல், பன்னாட்டுப் பொருளாதார மேதைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டு அரசிற்கான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி! அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி! அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி! இதுதான் 'திராவிட மாடல்' என்பது. அந்த நோக்கத்துடன் தமிழ்நாடு வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை!" என்று தமிழ்நாட்டு அரசின் வருங்காலக் கனவுக் கோட்பாட்டினைத் தெளிவு படுத்தியிருந்தார்.

ஆம், உலக நாடுகள் வரிசைகளின் ஒப்பீட்டளவில் நமது மாநிலம் (இந்திய ஒன்றியத்தின் கட்டமைப்பிலும்) கல்வி, பொருளாதார, சுகாதாரக் குறியீடுகளில் மிளிர்ந்து ஒளிரச்செய்ய, நீடித்த வளர்ச்சியும் சமநீதி

வளர்ச்சியும் நிகழ்கால தமிழ்நாட்டு அரசு அவற்றுக்கெல்லாம் எத்தகைய வடிவத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்!

**பெண்களும் பயணங்களும்:**

அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கியச் செயற்திட்டங்களில் முதன்மையான பணியாகத் தொடங்கியது, “மகளிருக்கான இலவசப் பேருந்துக்கட்டணம்”.

1996–2001 ஆட்சியில் கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கியது. இன்றைய சூழலில், இந்திய ஒன்றிய அளவில், தமிழ்நாட்டுக் கல்விக் குறியீடுகளின் மேம்பாட்டினை மாணவ, மாணவிகளின் பயணங்களின் வழியாகவும் இணைத்துப் பார்க்கலாம்.

**பெண்களும் சமூக மேம்பாடும்:**

1989இல் கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு, “பெண்களுக்கு சொத்துரிமை வழங்கிடத் தனிச் சட்டம், ஈ.வெ.ரா – நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம், மகளிர் திட்டத்தின் மூலம் மாநிலமெங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர்க்கு அரசு வேலைவாய்ப்பில் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, அதேபோன்று, 1996 ஆட்சிக்காலத்தில், கிராமப்புற பெண்களுக்குத் தொழிற்கல்லூரிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு என பெண்களின் முன்னேற்றத்தில் பெரும்பங்காற்றியது.

இந்த பாதையில் சிறப்பான உலக முன்னுதாரணங்களை மையப்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான அரசு, மகளிருக்கான பணியிட ஒதுக்கீட்டு உரிமையை 30%லிருந்து 40%ஆக உயர்த்தியுள்ளது. அதேபோன்று, மகளிர் பேறுகால விடுப்பு 9 மாதத்திலிருந்து 12 மாதமாக உயர்த்தியுள்ளது.

பெண்களுக்கான பணியிடங்களில் இட ஒதுக்கீடு, பெண்களுக்கான கல்வி வாய்ப்பின் முதலீடுகள், பெண்களுக்கான மகப்பேறு கால விடுமுறை உள்ளிட்டவைகளில் நோர்டிக் நாடுகள்




முனைவர்
**விஜய் அசோகன்,**
அறிவியல் ஆராய்ச்சியாளர்,
சுவீடன்


(நோர்வே, சுவீடன், ஃபின்லாந்து, டென்மார்க், ஐசுலாந்து) முன்னணியில் இருப்பதோடு உலக நாடுகளுக்கான வழிகாட்டியாகவும் இருந்து வருகிறது. அத்தகைய நாடுகள் சிந்திப்பதை, செயற்படுத்துவதைத்தான் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையிலான தமிழ்நாடு அரசும் செய்துகாட்டி வருகிறது.

**பெண்களும் அரசு நிர்வாகமும்:**

பெண்களின் கல்வி, பொருளாதார நலனில் கொண்டுள்ள சமூகநீதிப்பார்வையின் அடுத்த படிநிலை பெண்களின் அரசியல் பங்களிப்பு அரச நிர்வாக பங்கீட்டிலும் தாங்கியுள்ளது.

அரசியல் அதிகாரமேம்பாட்டினில், தமிழ்நாடு அரசு தன்னுடைய ஆளுகையின் பேரால் நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தலில், 20இல் 11 பெண் வேட்பாளர்களை நிறுத்தி வென்றுகாட்டியது. அதிலும், சென்னையின் முதல் பட்டியலினப் பெண், 28 வயது இளம் பட்டதாரிப் பெண் என்கிற மணிமகுடம் பெற்றிருக்கும் மரியாதைக்குரிய மேயராக பிரியா தேர்வு செய்யப்பட்டது கழக அரசின் சாதனை மகுடங்களில் ஒன்றாக திகழ்கிறது.

அதேபோன்று, கோவை மாநகராட்சியின் முதல் பெண் மேயராக மரியாதைக்குரிய கல்பனாவை வெற்றிபெற வைத்திருக்கிறது.

கல்வியில் சம வாய்ப்பும் திறன் மேம்பாடும்:

தமிழ்நாட்டின் அடிப்படை வெற்றிக்கு “கட்டமைப்பு வசதிகள், இடஒதுக்கீட்டு முறைகள், நவீன தொழிற்நுட்பங்களை பள்ளிக்கல்வியிலேயே சேர்த்தமை, ஊக்கத்தொகை, நுழைவுத் தேர்வில்லாத உயர்கல்வி வாய்ப்பு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான இடஒதுக்கீடு” ஆகியவைகள் முக்கியமான காரணங்களாகின. எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது அனைவரையும் உள்ளடக்கிய, சம வாய்ப்புகளை பெருக்கிய கல்விக் கட்டமைப்பு.

இத்தகைய வெற்றிக்கு வருங்காலத்தில் மிக சவாலாக இருக்கக்கூடியது, கடந்த இரு வருடங்களாக கொரொனா காலப் பேரிடர் ஏற்படுத்திய கல்வி கற்றல் சூழலில் ஏற்படுத்திய



எதிர்விளைவுகளே! உலக அளவிலேயே கூட கல்விகற்றல், மாணவ, மாணவியரின் நலன் உள்ளிட்டவைகள் மீது பெருந்தாக்கம் செலுத்தியது கொரோனா காலப் பேரிடர்.

190 நாடுகளின் ஏறக்குறைய 1.6 பில்லியன் குழந்தைகள் கல்வி பெற முடியாமல், முழுமையாக பெறாமல், மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது ஒரு அறிக்கை.

தமிழ்நாட்டு அரசு, 'இல்லம் தேடிக் கல்வி' என்னும் திட்டத்தினை முன்னிறுத்தியது. இந்தியச் சூழலில் இத்தகையதொரு திட்டம் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு வடிவத்தினை எடுத்து வந்துள்ளது.

ஆனால், இன்று தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள 'இல்லம் தேடிக் கல்வி' இயக்கம் வீட்டருகே வீதியில் குழந்தைகளைக் கூட்டுகிறது. கொரோனா காலப் பேரிடரின் பொழுது, பள்ளியை விட்டு இடைநிற்க வேண்டிய குழந்தைகளுக்கான தீர்வினை வழங்குகிறது. தன்னார்வலர்களின் சேவையை ஊக்குவித்து, ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொருவிதமான கதைகள், விளையாட்டுகளின் வழியே கல்விக் கற்றலுக்கான வாய்ப்பினைப் பெருக்குகிறது.

ஏனைய இந்திய ஒன்றிய மாநிலங்களும் பின்பற்றும் விதமாக வெளிப்படைத் தன்மையோடும் முறைப்படுத்தப்பட்ட நிர்வாக, கல்வியியல் நடைமுறைகளோடும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது இதன் வெற்றியே!

தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி இருக்கும் 'நான் முதல்வன்' திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குதல் ஆகும். அதோடு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவிப்பது ஆகும்.

இதனோடு, கல்லூரி மாணவ, மாணவியர் களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை உறுதி செய்ய அவரவர் விருப்பத்திற்கேற்ப அயல்நாட்டு மொழிகள் (Foreign Language) கற்பிக்கப்படுகிறது, மேலும், மாணவ, மாணவியர்களின் தகுதி மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ப, நாட்டின் தலை சிறந்த நிறுவனங்கள் / புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் / திறன் மேம்பாட்டு நிறுவனங்களில் சேர்க்கையை ஊக்கப்படுத்துகிறது.

**தமிழ்நாட்டின் வெற்றி:**

அனைவருக்கும் அனைத்தும் பகிர்ந்தளிக் கப்படும் சமூகநீதியே, நிலையான, அரோக்கியமான, நவீன சமூகத்தை நிலை நாட்டும். இதனைத்தான் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர், 'திராவிட மாடல்' என்றுரைத்து வருகிறார்!


குடியரசு நாள் விழா
26-01-2022



பாவலர்
**அறிவுமதி**




ஓவியம்: **மருது**

**நூ**றாண்டைத் தாண்டி
உனைப்
பேசும்
வண்ணம்
ஓராண்டை
ஒளி
செய்த
உனது
எண்ணம்

வளராண்டு அத்தனையும்
வாழ்த்தும்
திண்ணம்!

பெரியாரின்
அறம்
படித்தாய்!

பேரறிஞர்
மனம்
படைத்தாய்!

அன்பழகர்
விரல்
பிடித்தாய்!

# வாசல் திறந்த ஓராண்டு...
# வாழ்த்தும் உன்னை நூறாண்டு!

அப்பா
போல்
தடம்
பதித்தாய்!

காரியங்கள் ஆற்றுவதில்
கருத்துள்ள
அறிவர்களின்
கருத்தறிந்து
இறங்குவதில்
காமராசர்
வழியினைத்தான்
கனிவோடு
கடை
பிடித்தாய்!

ஆம்..
எதிரியரும்
புகழும்
வண்ணம்
எளியோர்
தம்
வாழ்வுக்கு
இறங்கி
வந்து...
குடை
பிடித்தாய்!

அதனால்தான்...
அதனால்தான்...

‘இவருக்குள்
இப்படியோர்
முதல்வர்
இருந்தாரோ’
என
எல்லோரும்
எல்லோரும்
வியந்து
உனைப்
புகழும் வண்ணம்
மாநிலங்கள்
பல
கடந்தும்
மக்கள் மனங்களில்
மாண்புமிகு
இடம்
பிடித்தாய்!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**

**வெ**ம்மைத் துயர்நீங்கி
விழிகுளிர்ந்து மனம்நெகிழ்ந்து
நிம்மதிப் பெருமூச்சில்
நெட்டுயிர்த்தே என்தமிழர்
செம்மாந்து நடைபோடச்
செய்தளங்கள் "முதல்வருக்கு"ச்
செம்மொழியால் வாழ்த்துசொல்லிச்
செங்கதிரே ! நீ எழுக !

தைப்பொங்கல் இனிமைபோல்
தமிழ்ஆட்சி நடக்கும் !என
மெய்ப்பித்துக் காட்டி, இந்த
மேதினியை நெடுங்காலம்
கப்பியவல் லிருள்துடைத்த
"கலைஞர்பிள்ளை" வாழ்க !எனச்
சிப்பி வெடித்ததுபோல்
செங்கதிரே ! நீ எழுக !

கருணையுடன் "மகளிர்குழுக்"
கடனை, நகைக்கடனை
அரசாங்கம் ஏற்கும் என்றே
அறிவித்து நெஞ்சமெலாம்
உருகிடப்பால் வார்த்தவர்க்கே
உவகைபொங்க வாழ்த்துரைத்துத்
திரள்க ! பெண்கள் திரள்க !வெனச்
செங்கதிரே ! நீ எழுக !

உள்ளத்தில் இல்லத்தில்
உழவரெலாம் பெருமகிழ்ச்சி
வெள்ளத்தில் நீந்துகின்றார் !
வேதனைசெய் பயிர்க்கடன்கள்
தள்ளுபடி யாகும்எனும்
சாதனையால் எனும்உண்மை
தெள்ளத் தெளிவுபடச்
செங்கதிரே ! நீ எழுக !

உலகத்தை உலுக்கிவந்த
"உயிர்க்கொல்லி நோய்"தாக்கி
நிலைகுலைந்தோர் அனைவர்க்கும்
நிதியுதவி வழங்கி,அவர்
மலைபோன்ற துயர்தகர்த்த
மாண்புமிகு முதல்வரைச் செந்
திலகமிட்டு வாழ்த்துரைக்கச்
செங்கதிரே ! நீ எழுக !

அயலகம் "துபாய்" சென்றே,
ஆயிரக் கணக்கினிலே
உயிர்போன்ற தமிழ் இளைஞர்

# செங்கதிரே! நீ எழுக!

உள்நாட்டில் வேலைபெற
உயர்தொழில்கள் தொடங்குதற்கே
ஒப்பந்தம் செய்துவந்த
"செயல்முதல்வர்" வாழ்க! வெனச்
செங்கதிரே! நீ எழுக!

செந்தமிழ்நாட்டில், ஆதித்
திராவிடரும் அர்ச்சகராம்!
குந்தி மறித்துக்
குறுக்கிட்ட "நந்திகளே"
"நந்தனை" வரவேற்கும்
நாள்வந்து விட்டதெனும்
சிந்தனைப் புரட்சிவெல்லச்
செங்கதிரே! நீ எழுக!

ஊரெங்கும் ஒற்றுமையை
உருவாக்கிச் சாதிமதப்
போரில்லாச் "சமத்துவ
புரங்களை"ப் புதுப்பித்துப்
பேரோங்கும் நம்முதல்வர்
பெருமைஇன்னும் உயர்க!வெனச்
சீரார் கதிர்பாய்ச்சிச்
செங்கதிரே! நீ எழுக!


மண்குடிசை இல்லாத
மாநிலமாய் தமிழ்நாட்டைக்
கண்குளிரக் காணும்
கனவு நிறைவேற
உண்ணமறந்(து), உறங்கமறந்(து)
உழைத்துவரும் முதல்வர்!அவர்
திண்மைமிகு கொள்கையைப்போல்
செங்கதிரே! நீ எழுக!

ஐயாவும், அண்ணாவும்,
ஆருயிர்க் கலைஞரும்,இவ்
வையத்தில் "நம்முதல்வர்
வடிவத்தில்" வாழ்கின்றார்!
உய்வோம்! வளம்பெற்றே
உயர்வோம்! எனும்தமிழர்
செய்தொழிலுக்(கு) உரமூட்டிச்
செங்கதிரே! நீ எழுக!

மக்கள் பணிக்கே, தன்
வாழ்நாளை அர்ப்பணித்த
மக்கள் பெருந்தலைவர்!
மனிதர்க்குள் மாமனிதர்!
தக்கார் மனம்போற்றும்
தமிழ்முதல்வர் வாழ்க!வெனச்
செக்கர்வான் ஒளிபரவச்
செங்கதிரே! நீ எழுக!



முனைவர்
**தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.**




மே ஏழாம் நாள் தமிழ்நாட்டின்
நான்கு திசையிலும் சூரியன் உதித்த நாள்

வாக்களித்தவர்களுக்கு நன்றி சொல்லி
முதல்வர் ஆவது சிறப்பென்றால்
வாக்களிக்காதவர்களுக்கும்
முதல்வரானேன் என்று சொன்னதுதான்
முத்தமிழ் அறிஞரின்
தனிப் பெரும் புதல்வரெனும்,
முத்திரைச் சாதனை!

மக்களைத் தேடி மருத்துவம்
இல்லம் தேடிக் கல்வி
கூட்டுறவு வங்கிகளில் ஐந்து பவுனுக்குக் கீழ்
நகைக்கடன் பெற்ற குடும்பங்களின் கடன் ரத்து என
ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட அறிவிப்புகளில்
ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட அறிவிப்புகள்
அரசாணையாகி நடைமுறைக்கு வந்தது மாபெரும் சாதனை

கோப்புகள் தேங்கக்கூடாது எனக்
கலைஞர் சொன்னதைக் கருத்தில் கொண்டு
இரண்டாயிரத்து எழுநூறுக்கும் மேற்பட்ட கோப்புகளில்
இரண்டாயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட கோப்புகளைப்
பார்த்துத் தீர்வு கண்டது அடுத்த சாதனை



ஓவியம்: மருது

# தமிழகம் கண்ட புரட்சித் தளபதி ஆட்சி

ஏழைகள் இல்லா தமிழகம் படைத்து
ஏறுநடைபோடும்
தளபதியாரின் தன்னிகரில்லா ஆட்சி மேலுமொரு சாதனை

மக்களோடு வாழ் என்று
அண்ணா சொன்னதை நெஞ்சில் கொண்டு
கலைஞர் அரசியல் பழக்கியதை நினைவில் கொண்டு
மக்களுக்கு உழைப்பதோ உன்னத சாதனை

உங்கள் தொகுதியில் ஸ்டாலின் திட்டம்
கொரோனா பேரிடரை மற்ற மாநிலங்களைவிட
தமிழ்நாடு மிகச் சிறப்பாக எதிர்கொண்டது
விளையாட்டுத்துறை உள்ளிட்ட
எந்தத் துறையில் யார் நல்லது செய்தாலும்
அவர்களை அழைத்து அரவணைப்பது
முதல்வரை, அமைச்சர்களை
யார் வேண்டுமானாலும்
எப்போதும் வேண்டுமானாலும்
சாதாரணமாகச் சந்திக்க முடியும் என்ற எளிமை
இவையெல்லாம் முதல்வர் தளபதியின் முத்தான சாதனைகள்

கண்விட்டுப் போகாத
கல்வெட்டு சாதனைகளின்
நம்பிக்கை நல்லாட்சி தொடர
சிரந்தாழ்த்தி வாழ்த்தி மகிழ்கிறோம்!



**யா**ராண்டும்
செய்யாத சாதனையை
ஓராண்டில்
செய்த
ஒளி அரசு இது!

விருது பெறும்
எழுத்தாளருக்கு
வீடு!
அடடா... இது
சூரியனே கொடுக்கும்
நிழலா...?

மருத்துவமனைகள்
தேவை
நலமாக
நாம் நடமாட!
ஆனால்
நடமாடும்
மருத்துவமனைகளையே
நமக்குத்
தந்திருக்கிறதே!
விவசாயிகளின்
நகைகளை
மீட்டுத் தந்திருக்கிறது!
பொன் நகையையும்
கூடவே
புன்னகையையும்!






# ஒளி அரசு



கவிஞர்
**நெல்லை ஜெயந்தா**

பேருந்துகளை
அரசுடைமையாக்கினார்
கலைஞர் அன்று!
அதையே
மகளிர்
உடைமையாக்கினார்
தளபதி இன்று!
தந்தை கொடுத்தது
பரவசம்!
தனயன் கொடுத்தது
இலவசம்!

அனைவருக்கும்
தெரியும்
ஐவகை நிலம்!
ஆறாவதாக
கோயில் நிலமென்ற
ஒன்றை
கண்டுபிடித்து மீட்டதே
கழக அரசுதானே!

சென்னை விரைவில்
சிங்காரச்
சென்னையாகும்
கோலங்களால்
அல்ல
பாலங்களால்!



கவிஞர்
**பழநிபாரதி**




ஓவியம்: மருது

# நல்ல காலம் பிறந்தது

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்ல காலம் பிறந்தது; நல்ல காலம் பிறந்தது;
திராவிட மாடல் ஆட்சி மலர்ந்தது!

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் குரலில்
மாநில உரிமைகள் மத்தியில் முழங்குது!
பால் விலை குறையுது; தொற்றுநோய் மறையுது;
பெண்கள் இலவச பேருந்து பெருகுது!

இல்லங்கள் தேடி கல்வி நுழையுது;
வீடுகள் தேடி மருத்துவம் விரையுது!
கோயிலில் சமத்துவ மந்திரம் ஒலிக்குது;
மனிதக் கழிவை எந்திரம் அள்ளுது!

சாதிக் கொடுமைகள் சரியுது சரியுது;
சமத்துவ புரங்கள் பெருகுது பெருகுது!
நுழைவுத் தேர்வுகள் பயத்தில் இருக்குது;
மருத்துவக் கல்வி மாண்பு சிறக்குது!

சுற்றுச் சூழல் கவனம் குவியுது;
சுத்தம் சுதந்திரம் இரண்டும் புரியுது!
நெகிழிப் பைகள் மெல்ல மறையுது;
மஞ்சள் பைகள் மீண்டும் தெரியுது!

அழுதவர் தொழுதவர் அவலம் முடியுது;
புலம்பெயர் தமிழர் பொழுது விடியுது!
அடிமை ஏவல் அச்சம் அழியுது;
ஆட்சியின் மீது நம்பிக்கை பெருகுது!

சட்டம் ஒழுங்கு சரியா நடக்குது;
சமூகநீதி சரித்திரம் படைக்குது!
உலகின் கவனம் இங்கே திரும்புது;
உழவும் தொழிலும் விரும்பி வளருது!

பெரியார் அண்ணா கலைஞர் தொடராய்
ஸ்டாலின் பெயரே ஒளிருது ஒளிருது
வள்ளுவச் சொல்லில் வாழ்த்துது உலகம்
இதுபோல் ஆட்சி அரியது அரியது!



வித்தகக்கவிஞர்
**பா.விஜய்**

**த**ளபதி என்றழைக்கப்படும்
தமிழ் நாட்டு மன்னவனே!
இருள்பிடியை நீக்க வந்த
சுருள்முடி சூரியனே!

முதல் முறை உன்னை
முதல்வராய் கண்டு
முன்மொழியும் கவிதையில்
எத்தனை முதல் முறைகள் முதல்வா

ஒரு மாநிலத்தின் தலைவன்
ஆட்சிப் பொறுப்பேற்றதை
மொத்த நாடும் நிமிர்ந்து பார்த்தது முதல் முறை

ஒரு முதல்வர் தன்
முடி சூடு விழாவில்
மூன்று பெயர் கோர்த்து
முழுப்பெயர் சொன்னது முதல் முறை

ஏழையின் பிரதிநிதி ஒரு
ஏடிஎம் காவலாளி
அரியணை ஏறிய ஒரு
அரசனை சந்தித்தது முதல்முறை

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் யார் என்று
பக்கத்து மாநிலமல்ல
பக்கத்து நாடு விசாரிப்பது முதல்முறை

கொரோனா என்றாலே
காத தூரம் ஓடும் காலத்தில்
வார்டு உள்ளே சென்று
வாஞ்சையோடு ஒரு முதல்வர் விசாரித்தது
முதல்முறை

ஒரு முதலமைச்சர் பேசும்
மைக்கை திருப்பி
சக அமைச்சர் பேசியது முதல் முறை

வான்வாயில் இருந்து வந்த
அடைமழையை சந்திக்க ஒரு முதல்வர்
கான்வாயில் சென்றது முதல் முறை
ஒரு மாநில தலைவர் வருகைக்கு
அரபு நாடே தன்னை
அலங்கரித்துக் கொண்டது முதல்முறை

உலகின் உயர்ந்த கட்டிடமான
பூர்ஜ் கலீஃபாவில்
முத்தமிழ் முழங்கியது முதல்முறை

நாத்திக கட்சி என்றழைக்கப்பட்டதன்
ஆட்சியின் கீழ்
ஆத்திகம் காக்கப்பட்டது முதல்முறை

கம்யூனிச மாநாட்டில் உங்கள்
கருஞ்சிவப்பு உரைக்கேட்டு
மலையாள தேசம்
மாலை சூட்டியது முதல்முறை

அரசுப் பள்ளிச்சிறுவனின்
அறிவார்ந்த பேச்சுக்கு
அரசாங்கம் செவிசாய்த்தது முதல்முறை


தலைநகர் சென்ற
தமிழர் தலைவனை பேட்டிக்காண
டெல்லியே ஆரவாரித்தது முதல்முறை

சுயமரியாதை சிவப்பே
பயமறியா கருப்பே
இந்தித் திணிப்பை எதிர்க்கும்
ஒற்றைக்கோள் நெருப்பே

முதல்வர் என்பதற்கு
முன் உதாரணம் மட்டும் நீங்களல்ல
முதல் உதாரணமே நீங்கள்தான்

வாழ்க உங்கள் ஆட்சி
வெல்க உங்கள் நீட்சி

# முதல்முறை முதல்வா முதல்முறை






ஓயா உழைப்பின் ஓராண்டு

## அறிஞர்கள் - ஆளுமைகள்
பார்வையில்
# திராவிட மாடல் அரசு

கடைக்கோடித் தமிழரின்
கனவுகளைத் தாங்கி...
நிறைவான வளர்ச்சியில்
நிலையான பயணம்...


வெளியிடுபவர் :
முனைவர் **வீ.ப.ஜெயசீலன்**, இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

தொகுப்பு :
பொ.தங்கபாண்டியன்
அருள் எழிலன்
விவேக் கணநாதன்
கவிமணி

வடிவமைப்பு:
இரா.தமிழரசு

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு


## திராவிட மாடல் வளர்ச்சி...
## திசையெட்டும் மகிழ்ச்சி...

கொரோனா காலக் கற்றல் இழப்புகளைக் குறைக்க "இல்லம் தேடிக் கல்வித் திட்டம்"

மகளிருக்கு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்

ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 விலைக் குறைப்பு

நோயற்ற வாழ்விற்கு "மக்களைத் தேடி மருத்துவம்"

வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 71,989 பணி நியமனங்கள்

உழவர்களுக்கு 1,00,000 இலவச மின் இணைப்புகள்

ரூ.70,000 கோடி தொழில் முதலீட்டில் 1,90,702 பேருக்கு வேலைவாய்ப்பு

மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் திறன் மேம்பட "நான் முதல்வன் திட்டம்"

ரூ.2,755 கோடி மகளிர் குழு வங்கிக்கடன் மற்றும் ரூ.4,800 கோடி நகைக்கடன் தள்ளுபடி

ரூ.2,566 கோடி கோயில் சொத்துக்கள் மீட்பு, பழங்காலக் கோயில்கள் புனரமைப்பு (ம) அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்

*மற்றும் பல...*